DR இளங்கோ & DR. ஜானகி
பல் மருத்துவர்கள்
www.illangodentistry.com
SCARBOROUGH 416 292 7004
BRAMPTON / MISSISSAUGA 905 457 1700
MARKHAM (New Location) 905 472 7223
பற்களை ஒழுங்குபடுத்தும் முறையை தமிழில் விளங்கிக்கொள்வதற்கு சரியான அலுவலகங்கள் உங்களுக்கு அருகில் - டாக்டர். இளங்கோ

For Your Rental Needs
HOME Rentals
416-703-7300 | info@ihomerentals.ca

Homelife Future Realty Inc.
"My clients are my value"
647-668-8276 | 416-629-5800
905-201-9977 (Business)
Kailain Thillainathan Sales Representative
kailain.thillai@gmail.com | homesbyraghu@gmail.com
Ragu Thillainathan Sales Representative

SunSanmugathas, ASA
Broker of Record / Vice President
Property/Max Realty Inc
416-948-0693

PYRAMID GROUP
UTHAYAN 416.301.5555
RAJ 416.843.3333
KUMAR 416.453.7777

List Your Property Free
PROPERTYMAX.LK
+94772332300

நான் எப்பொழுதும் உங்களோடு தான்
Buying-Selling-Investing
Raj Perampalam
Broker
Direct: 416-897-9155
Office: 905-201-9977

ALL IN ONE TAX & IMMIGRATION SERVICES
Family sponsorship;
Super visa for parents and grandparents including health insurance;
Citizenship;
Permanent resident card renewal;
Kokulan Baskaran
Tax Consultant
403-2855 Markham Road Scarborough ON M1X 0C3
Tel: 647-344-6600
info@allinoneserves.ca
www.allinoneservices.ca

Residential & Commercial Real Estate Services
Bala Logendralingam
Realtor
Cell: 647-447-1562
RE/MAX COMMUNITY

29ம் ஆண்டில்...
29 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN
உதயன்
தித்திக்கும் தமிழ் உலகில் எத்திக்கும் கதிர் வீசும் வாரச் செய்தி இதழ்
Member of National Ethnic Press and Media Council of Canada
$1.00
416-752-1524 www.uthayannews.ca
Canadian Media Circulation Audit

உதயம் 1522 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday June 6, 2025

# Government of Canada strengthens it's border security

**Minister of Public Safety Honourable Gary Anandasangaree, introduced the Bill, Strong Borders Act, to strengthen our laws and keep Canadians safe.**

# கனடிய அரசு தனது எல்லைப் பாதுகாப்பை பலப்படுத்துகிறது

**கெரி ஆனந்தசங்கரி, பொது பாதுகாப்பு அமைச்சர் என்ற வகையில் சட்டங்களை வலுப்படுத்தவும் கனேடியர்களை பாதுகாக்கவும் இந்த மசோதாவை பாராளுமன்றத்தில் அறிமுகப்படுத்தினார்**




வலுவான தேசமாக விளங்கவேண்டும் என்றால் வலுவான எல்லைகள்களை நாம் கொண்டிருக்க வேண்டும் என 3ம் திகதி செவ்வாய்க்கிழமையன்று கனடியப் பாராளுமன்றத்தில், கௌரவ ஹரி ஆனந்தசங்கரி அவர்கள், பொது பாதுகாப்பு அமைச்சர் என்ற வகையில் மேற்படி மசோதாவை அறிமுகப்படுத்தி உரையாற்றும் போது தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில், எமது தேசத்தின் சட்டங்களை வலுப்படுத்தவும் கனேடியர்களை பாதுகாப்பாக வைத்திருக்கவும் இந்த வலுவான எல்லைகள் சட்டம் எமது அரசாங்கத்தில் முக்கியத்துவம் பெறுகின்றது என்றார்.

அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில்எங்கள் எல்லைகளைப் பாதுகாப்பாக வைத்திருக்கவும், நாடுகடந்த ஒழுங்கமைக்கப்பட்ட குற்றங்களை எதிர்த்துப் போராடுவதற்கும், சட்டவிரோத / பெண்டானிலின் ஓட்டத்தை நிறுத்துவதற்கும், பணமோசடிகளை சிதைப்பதற்கும் சட்ட அமலாக்கத்தில் சரியான கருவிகள் இருப்பதை உறுதி செய்வதன் மூலம் இந்த மசோதா கனேடியர்களைப் பாதுகாப்பாக வைத்திருக்கும்.

(தொடர்ச்சி 22ம் பக்கம்)

# "உதயன் சர்வதேச விருது விழா" விற்கு ஆதரவை நல்கும் பத்திரிகைகள், வானொலிகள், தொலைக் காட்சி நிறுவனங்கள், சமூக ஊடகங்கள், யுரியுப் தளங்கள் ஆகியவற்றின் உரிமையாளர்களுக்கு "உதயன" நிறுவனம்"நன்றி தெரிவிக்கின்றது





கடந்த 19 வருடங்களாக தொடர்ச்சியாக நடைபெற்று வரும் "உதயன் சர்வதேச விருது விழா" விற்கு உறுதியான ஊடக ஆதரவை நல்கி வரும் பத்திரிகைகள்- வானொலிகள்- தொலைக் காட்சி நிறுவனங்கள்- சமூக ஊடகங்கள்-யுரியுப் தளங்கள் ஆகியவற்றின் உரிமையாளர்கள் மற்றும் ஆசிரியர்கள் ஆகியோருக்கு "உதயன் நிறுவனம்" நன்றியைத் தெரிவிக்கின்றது.

இந்த வகையில் அனைத்து உதயன் விழாக்களுக்கும் தமது ஆதரவை வழங்கி வரும் ரூபம் வானொலி ஊடக நிறுவன அதிபர் நண்பர் ராம் சங்கர் சிவநாதன் "யுகம்" வானொலி மற்றும் தொலைக்காட்சி நிறுவனங்களின் அதிபர் கணபதி **GTA VIDEO & ENATERTAINMENT** ஊடக நிறுவன அதிபர் நண்பர் கெங்கா "தமிழ் ஆரம்" தொலைக்காட்சி நிறுவன அதிபர் கேதீஸ் ஆகியோர் எமது சந்தைப்படுத்தல் அலுவலகத்திற்கு வருகை தந்து யூன் 14ம் திகதி சனிக்கிழமை நடைபெறவுள்ள "உதயன் சர்வதேச விருது விழா" தொடர்பான ஏற்பாடுகள் குறித்தும் ஆர்வத்துடன் உரையாடிச் சென்றார்கள். அவர்களோடு உடனிருந்த கெவின் சிவநாதன் மற்றும் ஹெரேன் ஆகியோருக்கும் எமது நன்றி.

UTHAYAN INTERNATIONAL AWARDS FESTIVAL 2025
உதயன் சர்வதேச விருது விழா 2025
Music - Dance - Awards Presentation - Dinner
இசை - நடனம் - விருதுவழங்கல் - இராப்போசன விருந்து
Date/Time: Saturday, June 14th, 2025 at 6:00pm
Venue: The Estate Banquet & Event Centre
430 Nugget Ave, Scarborough, ON M1S 4A4
அனுமதிச்சீட்டுக்களுக்கு: 416-732-1608 அல்லது 647-762-9512

தாமோர் நகை அடைவு மாளிகை
THAMOR PAWN BROKER
*கனேடிய அரசின் அங்கீகாரம் பெற்றவர்கள்
*நம்பிக்கை நாணயத்திற்கு உத்தரவாதம்
குறைந்த வட்டியுடன் எவ்வளவு தொகை வேண்டும் என்றாலும் மிசிசாகாவிலும் பிறாம்ரனிலும் அமைந்துள்ள எமது அடவு மாளிகையை நாடுங்கள்.
வர்த்தக துறையில் 20 வருட முன்னோடிகள்
107 Dundas St, East (2nd Fl) Mississauga, ON, L5A 1W7
905-272-1222
23 -8907 The Gore Rd, Brampton, ON L6P 2L1
905-794-4404
online service: www.remitbee.com

அதிவிரைவான அகதிக்கோரிக்கை விண்ணப்பங்கள் உள்ளடங்கலான சகலவிதமான Immigration சேவைகளுக்கும்
PRIME LEGAL SERVICES
Prime Legal Services
(Eraa Supermarket Plaza)
5928 Finch Avenue E, Unit 231
905-334-6851



**Nick Mantas**

Councillor

Ward 22, Scarborough-Agincourt

100 Queen Street West, Suite A1
Toronto, ON M5H 2N2
Phone: (416) 392-1374
Fax: (416) 392-7431
Nick.Mantas@toronto.ca





**UTHAYAN INTERNATIONAL AWARDS FESTIVAL - 2025**

**My best wishes for a successful event.**



tasty தமிழா ™

**தமிழ் மண்ணிலிருந்து நேரடியாக உலகெங்கும்...**



பனை வெல்லம்



தேன் நெல்லி

மரச்செக்கு எண்ணெய்கள்



சுக்கு மல்லி காபி தூள்

யாழ். கறித்தூள்

இலங்கை மற்றும் தென்னிந்திய மசாலா பொருட்கள் பாரம்பரிய உணவு வகைகள்..

கனடாவில்

*Tasty* தமிழா தயாரிப்புகள் இங்கு கிடைக்கும்..

*MAHAANS PICK & PRESS OIL MILL INC*
*Organic Bulk Store & Water Filling Station*
*5635 Finch Ave East,*
*Unit 5, Scarborough M1B 5K9.*

Call: 416 293 4010

MAHAANS PICK & PRESS OIL MILL INC

Canada

We acknowledge the financial support of the Government of Canada

Single Copy $1 Annual Subscription Price $52.00

பிரதம ஆசிரியர்: ஆர்.என்.லோகேந்திரலிங்கம்

உதயன் வெளியீட்டாளர்கள் | Uthayan Publishers

EDITOR IN CHIEF: R. N.Logendralingam
OFFICE ASSISTANT: Pirabu
GRAPHIC: Pathma, Yalini, Logan & Shanthy (Aum Sign) and Arjune
TECHNICAL: Janani and Bala
PRINTERS: Web News Printing Inc.
DISTRIBUTION: Yogarajah

Phone: 416 752 1524, Fax: 416 752 6703
4062 Ellesmere Road, Scarborough ON M1C 1J2
website: www.uthayannews.ca email: Uthayannews@yahoo.com

## உதயன் கதிரோட்டம்

# இலங்கையின் ஆட்சி பீடத்தை மீண்டும் கைப்பற்றத் துடிக்கும் "கயவர்"களின் முயற்சிகளை அநுரவின் "படை" முறியடிக்குமா?

இலங்கையில் ஏழு தசாப்தங்களுக்கு மேலாக அரச பீடத்தில் மாறி மாறி அமர்ந்திருந்து தங்களுக்கு பக்கத்துணையாக தமிழ் முஸ்லிம் "கோடரிக் காம்புகளை" வைத்துக் கொண்டு நாட்டையும் சுரண்டி. இனவாதத்தையும் தூண்டி, வளங்களையும் கொள்ளையடித்து வெளிநாட்டவர்களுக்கு விற்பனை செய்து தங்கள் குடும்பங்களையும் சகாக்களையும் சுகபோகத்தின் உச்சத்தை அனுபவிக்கச் செய்த கயவர்களின் ஆட்சி கடந்த பாராளுமன்றத்தில் அப்புறப்படுத்தப்பட்டது.

இவ்வாறான இலங்கையின் ஆட்சி பீடங்களை ஆண்டாண்டு காலம் "அபகரித்து" அதில் அமர்ந்த வண்ணம் முதலாளித்துவத்தை ஊக்குவிக்கும் வகையிலும் அதனை நிலை நிறுத்துவதிலும் முற்போக்குச் சிந்தனைகளுக்கும் கொள்கைகளுக்கு முரணான வகையிலும் வறியவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த வேண்டிய அவசியத்தையும் அவசரத்தையும் கைவிட்டு, பணக்காரர்களை மேலும் மேலும் செல்வந்தர்களாக ஆக்கிய வண்ணமும் ஆட்சி செய்து அதன் மூலம் தங்கள் குடும்பங்களை வாழ்க்கையின் சுகபோகங்களை அடையும் உச்சத்திற்கு கொண்டு சென்ற ஒரு "கூட்டத்தை" அகற்ற வேண்டும் என்ற "கனவு" இலங்கையின் வாக்காளப்பெருமக்களில் பலருக்கு. குறிப்பாக உழைக்கும் தொழிலாள விவசாயக் குடிமக்களுக்கு இருந்து வந்தது.
இவ்வாறிருக்கையில், இலங்கையில் இதற்கு முன்னர் இடதுசாரிச் சிந்தனைகளையும் கோட்பாடுகளையும் தமது கைகளில் எடுத்துக்கொண்டவர்கள்கூட தங்கள் சிந்தாங்கள் சார்ந்து ஆட்சியை அமைக்க வேண்டும் என்பதற்கு பதிலாக, மாறி மாறி ஆட்சி பீடங்களை அபகரிக்கும் முதலாளித்துவக் கயவர்களோடு கைகோர்த்து அவர்கள் ஆட்சியில் அமர்ந்து பிரதமராகவும் ஜனாதிபதியாகவும் வருவதற்கு ஆதரவு வழங்கி வந்தார்கள். இதனால் அவ்வாறான இடதுசாரிக் கட்சிகளும் இலங்கை என்ற தேசத்திலிருந்து தங்கள் செயற்பாடுகளை நிறுத்திக் கொள்ள வேண்டிய நிலையேற்பட்டது.
அதற்கு மேலாக இலங்கைக்கு வெளியேயிருந்து இலங்கையின் அரசியல் நிலைமைகளை அவதானிக்கின்ற அமெரிக்கா மற்றும் இந்தியா சீனா போன்ற நாடுகளும் இலங்கையில் ஒரு இடதுசாரிப் போக்குக்கொண்ட அரசு அமைவதையோ அன்றி வடக்கு கிழக்கு கிழக்கு மாகாணங்களில் தனியாட்சி அமையும் வண்ணம் அங்கு நீண்ட காலமாக இடம்பெற்றுவந்த ஆயுதப் போராட்டம் வெற்றி பெறவேண்டும் என்றோ விரும்பயதில்லை.
இதனால் காலங்கள் தாமாகக் கடந்து செல்லச் செல்ல இலங்கையில் ஆட்சி முறைகளில் மாற்றங்கள் எதுவுமின்றி. இனப்பிரச்சனையும் பொருளாதாரப் பிரச்சனையும் அங்கு எழுந்து நின்று தாண்டவமாடத் தொடங்கின.
எனினும் தொடர்ந்து வந்த நாட்கள் மக்களைச் சிந்திக்கச் செய்தன.

இலங்கையில் வாழும் மத்திய தர மற்றும் வறுமைக் கோட்டுக்கு கீழ் உள்ள மக்களும் எண்ணிக்கையில் குறைந்த செல்வந்தர்களும் இணைந்து ஒரு ஆட்சி மாற்றத்தைக் கொண்டு வர விரும்பினார்கள்.
இதனால் இலங்கையின் ஆட்சி பீடத்தில் அமர்ந்து அதிகாரத்தைக் கைப்பற்றியது தேசிய மக்கள் சக்தி என்னும் அநுர தலைமையிலான அரசாங்கம். அதன் வெற்றியைக் கொண்டாடி மகிழ்ந்தார்கள் அடித்தட்டு மக்கள்.
புதிய ஆட்சியில் மக்கள் புதிய அனுபவங்களைப் பெற்றார்கள். எளிமையான ஜனாதிபதி, செலவுகளைக் கட்டுப்படுத்தும் பக்குவமான நகர்வு அமைச்சர்களின் எளிமை. அவர்கள் சார்ந்த சாதாரணமான குடும்பச் சூழல். இவ்வாறான நம்பிக்கைகளை தந்த வண்ணம் ஆட்சியில் தொடர்ந்த அநுர அரசாங்கம் தற்போது தள்ளாடும் நிலையில் செல்கின்றதா என்ற தடுமாற்றம் அந்த அரசாங்கத்தைத் தேர்ந்தெடுத்த மக்களுக்கு.
இந்த தடுமாற்றத்தை ஏற்படுத்தியைமைக்கு தோற்றுப் போன தமிழ் சிங்கள மற்றும் அரசியல்வாதிகள் காரணமாகிவிட்டார்களா? அல்லது படைத்தரபில் உள்ள முன்னைய ஆட்சியாளர்களின் சகாக்களா என்ற கேள்விகளை தங்கள் முன் வைத்த வண்ணம் தங்கள் துயரங்களைத் தாங்கியவர்களாக மக்கள் நகர்ந்து செல்கின்றார்கள்.

முன்னைய ஆட்சியினரின் காலத்தை ஒத்து தற்போதும் அதே அடக்கு முறைகள். அளித்த வாக்குறுதிகளை காப்பாற்ற முடியாதவர்களாக துணிச்சல் அற்ற போக்கு. இவை அனைத்தும் மக்களை சந்தேகம் கொள்ளவைத்துள்ளன. எனினும் முன்னைய ஆட்சியாளர்களை விட "இவர்கள்" பரவாயில்லை என்ற கருத்தும் தொடர்கின்றது.

எனினும் நாம் இம்மாதக் தேசக் குரலில் அநுர ஆட்சி தொடர்பாக கேள்விகளை முன்வைத்தமைக்கு காரணம் பலவுள்ளன. அநுரவின் தேசிய மக்கள் கட்சியின் சார்பில் வடக்கிலிருந்து தேர்நதெடுக்கப்பெற்ற பாராளுமன்ற உறுப்பினர்களின் செயற்பாடுகளில் காணப்படும் தளர்ச்சி மற்றும் ஆற்றல் குறைந்த தன்மை ஆகியவை தமிழ் மக்களுக்கு பல கேள்விகளை தந்து நின்றாலும். முன்னைய ஆட்சியாளர்களான கொடிதான மகிந்த, கோட்டாபாய மற்றும் ரணில் ஆகியோர் இணைந்த கூட்டணி இலங்கையின் ஆட்சி பீடத்தை கைப்பற்றுவதிலும் பார்க்க அநுரவின் அரசாங்கமே இருப்பது மேல் என்ற எண்ணம் உள்ளவர்களும் இலங்கையிலும் வெளிநாடுகளிலும் உள்ளார்கள் என்பதையும் நாம் காண்கின்றோம்.

இவ்வாறிருக்கையில் தற்போதைய ஜனாதிபதி அநுர குமாரவின் ஆட்சியில் எண்ணற்ற குறைகள் தோன்றினாலும் நாட்டிற்கு நாசங்களை விளைவித்த மகிந்த, கோட்டாபாய, ரணில் மற்றும் மைத்திரி போன்ற கயவர்களின் கைகளில் மீண்டும் ஆட்சி அதிகாரம் சென்றால் இலங்கையைச் சுற்றியுள்ள கடலைக் கூட அவர்கள் சூறையாடிவிடுவார்கள் என்ற எச்சரிக்கையை நாம் இந்த இடம் பதிவு செய்கின்றோம்!




## GTA முதியயோர் சங்கம் பொதுக்கூட்டம்

காலம் 7th ஜூன், 2025 நேரம்: 10.00 காலை
3001 MARKHAM RD, UNIT 21, SCARBOROUH, ONTARIO

பழைய அங்கத்துவம் புதுப்பித்தல்,புத்திய அங்கத்தவர்கள் பதிவுசெய்தல் ஆகிய நிகழ்ச்சிகள் சேர்க்கப்பெற்றுள்ளன.
அத்துடன் கலந்து கொள்பவர்களுக்கு
அப்பம், தோசை, மோர், ஆகியன வழங்கப்படும்.
தொடர்புகளுக்கு தலைவர் 416 4541893

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# மகிந்தானந்தவும் கைது! தமிழக அகதி முகாமிலிருந்து நம்பி நாடு திரும்பிய 75 வயோதிப தமிழர் சிவலோகநாதனும் கைது!

ந.லோகதயாளன்



## மனோ கணேசன் எம்.பி காட்டம்!

தமிழக முகாமில் முப்பது வருடங்களுக்கு மேல் வாழ்ந்து, வயோதிபம் அடைந்து, உங்களை நம்பி, நாடு திரும்பிய, 75 வயதான சின்னையா சிவலோகநாதனை விமான நிலையத்தில், எதற்காக கைது செய்தீர்கள்? கைது செய்து, இன்று பிணையில் வெளியே விடாமல், சிறையில் அடைக்கிறீர்கள்? வெளிநாடு சென்ற தமிழர்களை திரும்பி "வாங்கோ, வாங்கோ" என நீங்கள் தானே வெற்றிலை பாக்கு வைத்து அழைக்கிறீர்கள்? உங்களை நம்பி, திரும்பி வந்தால் விமான நிலையத்தில் கைது செய்வதா?

சிவலோகநாதனுக்கு நாடு திரும்ப சென்னை இலங்கை துணை தூ தரகம்தான் கடவுச்சீட்டு வழங்கி உள்ளது என்பது அரசாங்கத்துக்கு தெரியாதா? வெளிநாட்டு அமைச்சுக்கு தெரியாதா? தமிழக அரசின் பொலிஸ், பாரத மத்திய அரசின் குடிவரவு, குடியகல்வு வாரியம் என்பன ஒப்புதல் அளித்துள்ளன. ஐநா அகதிகள் ஆணைக்குழு, சிவலோகநாதனுக்கு பயண சீட்டு வாங்கி கொடுத்து வேண்டிய ஏற்பாடுகளை செய்து, விமானமேற்றி அனுப்பி வைத்துள்ளது. இவை உங்களுக்கு தெரியாதா? என தமுகூ தலைவர் மனோ கணேசன் எம்பி அரசாங்கத்தை நோக்கி கேள்வி எழுப்பி உள்ளார்.

இது தொடர்பில் மனோ எம்பி தனது எக்ஸ் தளத்தில் மேலும் தெரிவித்துள்ளதாவது: ஊழல் பேர்வழிகளை கைது செய்து சிறையில் அடையுங்கள். அதை செய்யத்தான் வேண்டும். இன்னமும் நானூற்றுக்கணக்கான ஊழல் கோப்புகள் இருப்பதாக சொன்னீர்கள். அனைவரையும் கைது செய்து, விசாரித்து, ஆவன செய்யுங்கள். சட்டத்தில் இடமிருந்தால் ஊழல் பேர்வழிகளுக்கு ஆயுட்கால சிறை தண்டனை வழங்குங்கள். அதில் மாற்று கருத்துக்கு இடமில்லை.

ஆனால், எதற்காக தமிழக முகாமில் முப்பது வருடங்களுக்கு மேல் வாழ்ந்து, வயோதிபம் அடைந்து, நாடு திரும்பிய, 75 வயதான சின்னையா சிவலோகநாதனை விமான நிலையத்தில், கைது செய்து, பிணையில் வெளியே விடாமல், சிறையில் அடைக்கிறீர்கள்? 75 வயதான சின்னையா சிவலோகநாதனுக்கு நாடு திரும்ப சென்னை இலங்கை துணை தூதரகம்தான் கடவுச்சீட்டு வழங்கி உள்ளது என்பது அரசாங்கத்துக்கு தெரியாதா? வெளிநாட்டு அமைச்சுக்கு தெரியாதா? தமிழக அரசின் பொலிஸ், பாரத மத்திய அரசின் குடிவரவு, குடியகல்வு வாரியம் என்பன ஒப்புதல் அளித்துள்ளன. ஐநா அகதிகள் ஆணைக்குழு, சிவலோகநாதனுக்கு பயண சீட்டு வாங்கி கொடுத்து வேண்டிய ஏற்பாடுகளை செய்து, விமானமேற்றி அனுப்பி வைத்துள்ளது. வெளிநாடு சென்ற தமிழர்களை நீங்கள் தானே திரும்பி வர சொல்கிறீர்கள்? உங்களை நம்பி நாட்டுக்கு வந்தால் கைதா, இவ்வாறு கேள்வி எழுப்பியுள்ளார் மனோ கணேசன் எம்பி அவர்கள்.

# தாயகம் திரும்பிய 75 வயது முதியவரை சிறையில் தள்ளிய மல்லாகம் நீதவான்



போர்க் காலத்தில் உயிரைக் காக்க தமிழகத்திற்குத் தப்பிச் சென்ற முதியவர் சட்ட விரோதமாக நாட்டை விட்டு வெளியேறியமைக்காக விளக்க மறியலில் வைக்கப்பட்டார்.

1987 ஆம் ஆண்டு தாயகத்தில் இருந்து உயிர் தப்பி தமிழ் நாட்டிற்கு அகதியாகச் சென்றவர் முதுமையில் நாடு திரும்பியபோது சட்டவிரோதமாக நாட்டை விட்டு வெளியேறிய குற்றச் சாட்டின் கீழ் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டார்.

சின்னையா சிறிலோகநாதன் என்னும் ஏழாலையைச் சேர்ந்த 75 வயது முதியவரே இவ்வாறு யாழ்ப்பாணம் விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டார்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர் இன்று மல்லாகம் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டபோதே விளக்க மறியலில் வைக்க உத்தரவிடப்பட்டுள்ளது.

குற்றப் புலனாய்வு அதிகாரிகளால் முற்படுத்தப்பட்ட சந்தேக நபர் சார்பாக ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் தலைமையில் 5 சட்டத்தணிகள் ஆயராகினர்.

இதன்போது 1997 ஆம் ஆண்டு ஏழாலையில் இருந்து மன்னார் சென்று அங்கிருந்து 12 ஆயிரம் ரூபா படகிற்கு செலுத்தி சட்ட விரோதமாக கடல் வழியாகவே சந்தேக நபர் இந்தியாவிற்குத் தப்பிச் சென்றுள்ளார். இருந்தபோதும் இக் காலத்தில் சட்ட பூர்வமாக பயணிக்கும் வாய்ப்பும் இருந்தமையால் இவர் எதற்காக சட்ட விரோதமாக பயணித்தார் என்பது தொடர்பில் தொடர்ந்தும் விசாரணை மேற்கொள்ள வேண்டிய தேவை இருப்பதனல். எனவே சந்தேக நபரை பிணையில் விடுவிக்காது விளக்க மறியலில் வைக்க வேண்டும் எனக் கேட்டு குடிவரவு குடியகழ்வுத் திணைக்களத்தின் 45/01 கீழ் குற்றம் சாட்டப்படுவதாக அறிக்கை சமர்ப்பித்தனர்.

இதன்போது சந்தேக நபர் சார்பில் ஆயரான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் இலங்கையில் இடம்பெற்ற உள்நாட்டுப் போரின் காரணமாக உயிரை காக்கும் நோக்கில் லட்சக்கணக்கானோர் நாட்டை விட்டுத் தப்பிச் சென்றபோது 1987 ஆம் ஆண்டு தமிழகத்திற்கு தப்பிச் சென்றுள்ளார்.

இவ்வாறு தப்பிச் சென்றவர் தமிழகத்தின் திருவண்ணாமலைப் பகுதியில் கண்ணகிபுரம் இலங்கை அகதிகள் முகாமில் தங்கி வாழ்ந்து தற்போது ஏழாலையில் வசிக்கும் தனது மகனுடன் முதுமைக் காலத்தில் வாழ்வதற்காக உரிய முறைகளின் கீழ் விண்ணப்பித்து சட்டபூர்வமாக நாடு திரும்பியுள்ளார்.

முகாமில் அகதியாக வாழ்ந்தார் என ஐக்கிய நாடுகளின் அகதிகளிற்கான உயர்ஸ்தானிகம் வழங்கிய (யு.என்.எச்.சி.ஆர்) பதிவுச் சான்றிதழ், இலங்கை திரும்ப தமிழ்நாடு பொலிஸிற்கு செய்த விண்ணப்பம், அதற்கு தமிழ்நாடு பொலிஸார் அவர் எந்த குற்றச் செயலிலும் ஈடுபடவில்லை என வழங்கிய சான்றிதழ்களுடன், சென்னையில் உள்ள இலங்கைத் தூத்கத்திற்கு விண்ணப்பித்து இலங்கை திரும்புவதற்காக பெற்றுக்கொண்ட பிரயாண அனுமதி ஆகியவற்றை சரிபார்த்து ஐ.நா அமைப்பே இலவச விமானச் சிட்டையினையும் வழங்கியது அவற்றின் பிரதிகள் மன்றிற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது. எனவே குற்றஞ் சாட்டப்படுபவரை முழுமையாக விடுவிக்க வேண்டும்.

இலங்கை அகதிகள் ஒரு லட்சத்திற்கும் அதிகமானவர்கள் தமிழகத்தில் இருப்பது உலகின் சகல நாடுகளிற்கும் தெரியும் ஆனால் இலங்கைப் பொலிசாருக்குத் தெரியாமல் இருப்பது வேடிக்கையானது. அகதி என்றால் அவன் சொல்லாமல்தான் போவார். அவரை அகதியாக ஏற்றுக்கொண்டால் அவர் பயணித்தமை குற்றமாகாது. அது மட்டுமல்ல ஒரு குற்றவியல் நடவடிக்கையாக இருந்தால் குறைந்தபட்சம் 20 ஆண்டுகளிற்குள் வழக்கு தாக்கல் செய்ய வேண்டும் இங்கே 30 வருடங்களும் கடந்துவிட்டது.

இதேநேரம் இலங்கையில் இருந்து அகிகளாகச் சென்றவர்கள் நாடு திரும்ப வேண்டும் என அரசு உத்தியோகபூர்வமாக அழைக்கின்றது ஆனால் திரும்பியவர்கள் கைது செய்யப்படுகின்றனர் இதற்கு குற்றப் புலனாய்வு அதிகாரிகள் பொறுப்புக்கூற வேண்டி வரும் தப்ப முடியாது.

இதேநேரம் குடிவரவு குடியகழ்வுத் திணைக்களத்தின் சட்டப்பிரிவு 45/01 இன் கீழ் வழக்குத் தாக்கல் செய்தால் நீதவான் 47/ஏ பிரிவின் கீழ் பிணை வழங்க முடியும் அதனால் முழுமையாக விடுவிக்க முடியாத பட்சத்தில் குற்றம் சாட்டப்பட்டவரை பிணையில் விடுவிக்க வேண்டும் என்றார்.

இவற்றை ஆராய்ந்த நீதவான் ஜே.சுபராஜினி சந்தேக நபரை எதிர் வரும் யூன் மாதம் 5ஆம் திகதிவரை விளக்க மறியலில் வைக்க உத்தரவிட்டார்.

# அகதிகள் விடயத்தில் இலங்கை அரசின் இரட்டை வேடத்தை யு.என்.எச்.சி.ஆர் மற்றும் இந்தியா புரிந்து கொள்ள வேண்டும் என்கிறார் சுமந்திரன்



தமிழ்நாட்டில் இருந்து முறைப்படி தாயகம் திரும்புபவர்களையும் சிறையில் தள்ளுவதன் மூலம் தமிழர்கள் நாட்டிற்குள் வரக்கூடாது என அநுர அரசு விரும்புகின்றதா என தமிழ் அரசுக் கட்சியின் செயலாளரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான எம்.ஏ.சுமந்திரன் கேள்வி எழுப்பியுள்ளார்.

தமிழ்நாட்டில் இருந்து தாயகம் திரும்பியவரை கைது செய்தமை தொடர்பில் ஊடகங்களிற்கு கருத்து தெரிவிக்கும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கையில் இடம்பெற்ற போரின் காரணமாக உயிரைக் காப்பதற்காக படகுகள் மூலம் ஆபத்தான பயணங்களை மேற்கொண்டு தமிழகத்தில் தஞ்சம் அடைந்துள்ள ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட தாயக உறவுகள் தொடர்ந்தும் பெரும் வேதனையின் மத்தியில் இரண்டாம்தரப் பிரஜைகள் போன்று தவிக்கின்றனர். இவர்களில் பல ஆயிரம்பேர் தாயகம் வரவும் தயாராகவுள்ளனர்.

இவ்வாறு காத்திருப்போரை நாடு திரும்புமாறும் சகல ஏற்பாடும் செய்து தரப்படும் எனத் தெரிவிக்கும் அரசு முறைப்படி சகல ஆவணங்களையும். பெற்று வருபவர்களையே பொலிஸார் மூலம் வழக்குப் பதிவு செய்து சிறையில் தள்ளுவதன் மூலம் எஞ்சியோரை அச்சுறுத்துகின்றது. ஏனெனில் 75 வயது முதியவரையே சிறையில் தள்ளும் இந்த அரசு இளையோரை என்ன பாடுபடுத்துமோ அல்லது பெண்களிற்கு என்ன நெருக்கடியோ என நியாயமான ஐயம் எழும். இதன் மூலம் வடக்கு கிழக்கில் தமிழர்களின் எண்ணிக்கை அதிகரித்து விடக்கூடாது என்பதில் அரசு குறியாக உள்ளமை வெளிப்படையாகவே தெரிகின்றது.

ஒரு பக்கம் நிலங்களை அரச உடமையாக்கத் துடிக்கும் அரசு அதனை தடுத்தமையால் தமிழ் மக்கள் தாயகம் திரும்பினால் நிலத்தேவை அதிகமாகிவிடும் என்பதனை வழிகாட்டும் 3ஆம் தரப்பின் ஆலோசனையின் பெயரில் சிறுபான்மையினரை எப்படிக் கட்டுப்படுத்துவது என்பது தொடர்பில் ஓர் புலமைமிக்கவர் இலங்கை வந்து திரும்பியபோதே இவ்வாறான அநீதிகளிற்கு இலங்கை வித்திடும் என்பதனை நாமும் ஊகித்தோம் அவர்களை திருப்திப்படுத்த எமது மக்களை அரசு திட்டமிட்டு வஞ்சிக்கின்றது.

எனவே இலங்கை அகதிகள் விடயத்தில் யு.என்.எச்.சி.ஆர் மற்றும் இந்திய அரசுகள் மௌனம் காக்க கூடாது. இலங்கை அரசின் இரட்டை வேடத்தைப் புரிந்துகொண்டு சகல விதமான அழுத்தங்களையும் பிரயோகித்து தாயகம் திரும்ப எண்ணும் அகதிகளற்கு தாய் நாட்டில் உள்ள நடமாடும் சுதந்திரத்தை உறுதி செய்ய வேண்டும் என்றார்.




இலங்கை செய்திகள் Sri Lanka News

புு. கஜிந்தன்

# சட்டவிரோத தொழில்களால் தொடர்ந்தும் மீனவர்கள் பாதிக்கப்படுவதாக வடக்கு மீனவ பிரதிநிதி நா.வர்ணகுலசிங்கம் குற்றச்சாட்டு!

தொடர்ந்தும் மீனவர்கள் சட்டவிரோத தொழில்களால் பாதிக்கப்படுவதாக வடக்கு மீனவ பிரதிநிதி நா.வர்ணகுலசிங்கம் தெரிவித்துள்ளார்.

அவர் 2ம் திகதி அன்று தனது இல்லத்தில் நடாத்திய ஊடக சந்திப்பிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்ததாவது, விவசாயிகளுக்கு பிரச்சினை எனில் குரல் கொடுக்கும் அவரசில்வாதிகள், அரச அதிகாரிகள் மீனவர்கள் தொடர்ந்தும் பாதிக்கப்படும் போது கண்டுகொள்ளாமலிருக்கின்றனர்.

தற்போது கடலில் ஒளிபாய்ச்சி மீன்பிடித்தல், சுருக்குவலை மற்றும் கடலட்டை தொழில்கள் அதிகரித்துள்ளது. அதனை மீன்பிடி அமைச்சரோ, கடற்படையோ அல்லது நீரியல் வளத்துறையோ கண்டுகொள்வதில்லை.

முல்லைத்தீவில் கடற்படையினர் அதிகமான சட்டவிரோத தொழிலாளர்கள், எல்லை தாண்டிய இந்திய மீனவர்களை கைது செய்து வருகின்றனர். யாழ்ப்பாணத்தில் தற்போது அதிகமான சட்டவிரோத தொழில்கள் இடம் பெற்றுவருகிறது. அவற்றுக்கு எதிராக எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படுவதில்லை. உரியவர்கள் உரிய கவனமெடுத்து மீனவர்கள் பிரச்சினைக்கு தீர்வுகாண நடவடிக்கை எடுக்க வேண்டும் என அவர் கோரிக்கை விடுத்தார்.



# தமிழரசு கட்சி நிபந்தனைகள் இன்றி ஆதரவு கோருவதாக சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவிப்பு!

இலங்கை தமிழரசு கட்சியானது நிபந்தனைகள் இன்றி தமக்கு ஆதரவினை வழங்குமாறு கூறுவதாக ஜனநாயக தமிழ் தேசியக் கூட்டணியின் முக்கியஸ்தரான சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

1ம் திகதி அன்றையதினம் அவரது இல்லத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனை தெரியப்படுத்தியுள்ளார். அங்கு அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணிக்கும் தமிழரசு கட்சிக்கும் இடையில், ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணிக்கும் தமிழ் தேசிய மக்கள் முன்னணிக்கும் இடையில், தமிழ் தேசிய மக்கள் முன்னணிக்கும் தமிழரசுக் கட்சிக்கும் இடையில் பல்வேறுபட்ட பேச்சுவார்த்தைகள் இடம்பெற்றுள்ளன. ஆனாலும் இறுதியான விடயங்கள் எவையும் எட்டப்படவில்லை. ஆனாலும் ஒருங்கிணைந்து செல்வதற்கு தயாராக இருப்பதாக பல கட்சிகளும் குறிப்பிட்டிருக்கின்றனர். நாங்களும் அவ்வாறு குறிப்பிட்டிருக்கின்றோம்.

கொள்கை ரீதியாக உடன்பாட்டுக்கு வருவதற்காக அதுசார்ந்த கலந்துரையாடல்களும் இடம்பெறுகின்றது. தமிழரசு கட்சியை பொறுத்தவரை அதனுடைய தலைவராக இருக்கக்கூடிய தலைவர் சி.வி.கே.சிவஞானம் அவர்கள், ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி முன்வைத்த கோரிக்கைகளை ஏற்றுக்கொள்ள முடியாது, குறைந்தபட்சம்கூட அவர்களுக்கு எந்தவொரு இடத்தையும் விட்டு கொடுக்க முடியாது. ஆகவே எந்தவிதமான நிபந்தனைகளும் இன்றி ஆதரவு தெரிவிக்க வேண்டும். மாற்றீடாக நாங்கள் அவர்களுக்கு எதுவும் செய்ய முடியாது என்ற கருத்தை ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியின் இணைத் தலைவர்களில் ஒருவரான தர்மலிங்கம் சித்தார்த்தனிடம் கூறியுள்ளார்.

ஆகவே அவர்களைப் பொறுத்தவரையில் எந்தவிதமான கேள்வி நியாயங்கள் இல்லாமல், அவர்கள் கேட்கின்ற ஆதரவுகளை கொடுத்தால் அவர்களுக்கு போதுமானது என்ற கருத்தை தான் அவர்கள் பிரதிபலிக்கின்றார்கள். ஆனால் அதே சமயம் தமிழ் தேசிய மக்கள் முன்னணி என்பது கூட்டாக செயல்படுவதற்கு தயாராக இருக்கின்றது என்றும், அது தொடர்பான கொள்கை ரீதியான முடிவுகளை எடுக்க வேண்டும் என்றும் கூறியிருக்கின்றது. அந்த கொள்கை ரீதியான விடயங்களை நாங்கள் அவர்களுடன் பேசி இருக்கின்றோம்.

பேச்சுவார்த்தைகள் என்பன இதுவரை முற்றுப் பெறவில்லை. அந்த பேச்சுவார்த்தைகளானது அடுத்த ஓரிரு நாட்களுக்குள் முடிவுக்கு வந்து அடுத்த கட்டத்தை நோக்கி நகர்வதற்கான நிலவரங்கள் தோன்றும் என நாங்கள் எதிர்பார்க்கின்றோம். ஒரு தெளிந்த முடிவுகள் எடுக்கப்பட்டு இந்த சபைகள் அமைக்கப்படும் என நாங்கள் எண்ணுகின்றோம் என்றார்.



இலங்கை செய்திகள்
Sri Lanka News

# இயக்கச்சியில் நியாயத்தை விரும்பும் தேசிய மக்கள் சக்தி வேட்பாளர்கள், மற்றும் ஆதரவாளர்களால் அதே கட்சிக்கு எதிராக போராட்டம்!

பு. கஜிந்தன்

இயக்கச்சி பகுதியில் நடைபெற்ற இளைஞர் கழக நிர்வாக தெரிவின்போது தேசிய மக்கள் சக்தி வேட்பாளர்கள், ஆதரவாளர்களால் தேசிய மக்கள் சக்திக்கு எதிராக ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இளைஞர் கழக நிர்வாக தெரிவிற்கு இளைஞர் விவகாரம் மற்றும் விளையாட்டு துறை பிரதி அமைச்சர் எரங்க குணசேகர வரவிருந்த நிலையில் இயக்கச்சி மக்கள், தேசிய மக்கள் சக்தி வேட்பாளர்கள், ஆதரவாளர்களால் கிராம சேவகர் அலுவலகம் முன்பு முற்றுகை போராட்டம் இன்று பிற்பகல் 03.00 மணியளவில் முன்னெடுக்கப்பட்டது.

நடைபெற்ற உள்ளூராட்சி சபை தேர்தலில் அதிக வாக்குகளை பெற்ற இயக்கச்சி பகுதி வேட்பாளர்களில் ஒருவருக்கு போனஸ் ஆசனத்தை பகிர்ந்தளிக்காமல் குறைந்த வாக்குகளை பெற்ற நபர்களுக்கு ஆசனத்தை



பகிர்ந்தளித்ததாக போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் தெரிவித்தனர்.




தேசிய மக்கள் சக்தியை நம்பி வாக்களித்திருந்த போதும் தேசிய மக்கள் சக்தியின் நிர்வாகிகள் ஜனநாயக கொள்கைகளுக்கும், ஜனாதிபதியின் சித்தாந்தங்களுக்கும் எதிராக செயற்படுவதாகவும், ஊழல் வாதிகளை கட்சியில் இருந்து வெளியேற்றி இன பேதமின்றி எமக்கு தந்த வாக்குறுதிகளை நிறைவேற்ற வேண்டுமெனவும் கேட்டுக் கொண்டனர்.

கலந்துரையாடலிற்கு சமூகம் தரவிருந்த இளைஞர் விவகார மற்றும் விளையாட்டுத்துறை பிரதி அமைச்சர் எரங்க குணசேகர குறித்த ஆர்ப்பாட்டத்தால் கலந்துரையாடலுக்கு சமூகம் தராமல் இடையில் திரும்பிச் சென்றார்.

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் "NPP என்பது மக்களுக்காகவே தவிர மக்களை சுரண்டுவதற்காக அல்ல, எங்கள் சனாதிபதிக்கு NPPக்குள் இருந்து கொண்டே துரோ-கம் செய்யாதே, ஊழல் கட்சிகளுக்கு மாற்றாக இன்னொரு ஊழல் பெருச்சாளி வேண்டாம்" போன்ற வாசகங்கள் எழுதிய பாதைகளை தாங்கியவாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

# அல்வாய் படுகொலையின் 38 ஆவது ஆண்டு நினைவேந்தல் வடமராட்சியில் முன்னெடுப்பு!

வடமராட்சியை கைப்பற்றும் நோக்கில் சிறிலங்கா இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்ட "லிபரேசன் ஒப்பரேசன்" இராணுவ நடவடிக்கையின் போது 1987 மே 26-31 வரை இடம்பெற்ற அல்வாய் படுகொலை நிகழ்வின் 38 ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு வடமராட்சி - மாலைசந்தை பகுதியில் யூன் 1ம் திகதி அன்று ஞாயிற்றுக்கிழமை காலை இடம்பெற்றுள்ளது.

"லிபரேசன் ஒப்பரேசன்" இராணுவ நடவடிக்கையின் போது ஆலயங்கள், பாடசாலைகளில் சென்று பொதுமக்களை பாதுகாப்பாக இருக்குமாறு இராணுவத்தினரால் உலங்குவானூர்தி மூலம் துண்டுப்பிரசுரங்கள் வீசப்பட்டன. இதையடுத்து வடமராட்சி பிரதேசங்களில் இருந்து இடம்பெயர்ந்த பல்லாயிரக்கணக்கான பொதுமக்கள் அல்வாய் வேவிலந்தை முத்துமாரி அம்மன் ஆலயத்திலும் ஆலய சூழலிலும் அடைக்கலமடைந்திருந்த நிலையில் சிறிலங்கா இராணுவத்தினரால் மேற்கொல்லப்பட்ட எறிகணைத் தாக்குதல்களில் நூற்றிற்கு மேற்பட்டவர்கள் படுகொலை செய்யப்பட்டு பலர் காயமடைந்திருந்தனர்.

அத்துடன் வடமராட்சி பகுதியெங்கும் பரவலாக மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச்சூடு,



எறிகணைத் தாக்குதல், கையெறிகுண்டுத் தாக்குதல்களில் சிக்கி நூற்றுக்கணக்கான பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டிருந்தனர்.

இவ்வறு "லிபரேசன் ஒப்பரேசன்" இராணுவ நடவடிக்கையின் போது 1987 மே 26-31 வரை இடம்பெற்ற அல்வாய் படுகொலை நிகழ்வின் 38 ஆம் ஆண்டுகள் நிறைவு பெற்றுள்ள நிலையில் குறித்த நினேந்தல் வடமராட்சி - மாலைசந்தை மைக்கல் விளையாட்டு மைதானத்தில் அமைந்துள்ள மண்டபத்தில் 1ம் திகதி அன்று ஞாயிற்றுக்கிழமை காலை 10.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

மைக்கல் விளையாட்டு கழகம், மைக்கல் நேசக்கரம் இணைந்து ஏற்பாடு செய்திருந்த



இந்நினைவேந்தல் நிகழ்வில், படுகொலை செய்யப்பட்ட மக்களுக்கு ஈகைச்சுடர் ஏற்றப்பட்டு மலர்தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது.

தமிழ்த் தேசிய கட்சியின் செயலாளர் நாயகம் முன்னாள் பாரளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் அவர்கள் ஈகைச்சுடரினை ஏற்றி மலர் தூவி அஞ்சலி செலுத்தியதை தொடர்ந்து நிகழ்வு ஏற்பாட்டாளர்கள் மற்றும் பொதுமக்கள் அஞ்சலி செலுத்தினர்.

இந்நிகழ்வில் முன்னாள் மாகாணசபை உறுப்பினர் எஸ். சுகிர்தன், தமிழ்த் தேசிய ஆதரவாளர்கள், அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள், பொது மக்கள் என பலரும் பங்கேற்றிருந்தனர். இதன்போது மைக்கல் விளையாட்டுக் கழகத்ரினரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு துவிச்சக்கர வண்டி, உலருணவுப் பொருட்கள் என்பனவும் வழங்கி வைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# அனலைதீவு ஐயனார் ஆலயத்தில் காணாமல் போன பித்தளைநன கலசங்கள் மீட்பு!



அனலைதீவு ஐயனார் கோவிலில் திருடப்பட்ட பித்தளை கலசங்கள் ஊர்காவற்துறை பொலிஸாரால் மீட்கப்பட்டன.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் ஊர்காவற்துறை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட அனலைதீவு ஐயனார் ஆலயத்தின் 06 பித்தளை கலசங்கள் காணாமல் போயிருந்தன. இது குறித்து ஊர்காவற்துறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டது.

அந்தவகையில் ஊர்காவற்துறை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி விதான பத்திரனவின் தலைமையிலான குழுவினர் 1ம் திகதி அன்றையதினம் சந்தேகநபர் ஒருவரை கைது செய்ததுடன் 06 கலசங்களையும் மீட்டுள்ளனர். விசாரணைகளின் பின்னர் அவரை ஊர்காவற்துறை நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# ஞானச்சுடர் பட்டம் பெற்ற பொன்னாலை அன்னதான பிரபு குரு சுவாமிக்கு கௌரவிப்பு விழா!



பொன்னாலை அன்னதான பிரபு ஸ்ரீ சபரி ஐயப்பன் ஆலய குரு சுவாமியின் கௌரவிப்பு விழாவானது யூன் 1ம் திகத அன்றையதினம் பொன்னாலையில் நடைபெற்றது.



குரு சுவாமியான சைவத்திரு ப.தனீஸ்வர சுவாமிக்கு "ஞானச்சுடர்" பட்டம் வழங்கியதையிட்டு இந்த கௌரவிப்பு நிகழ்வானது நடைபெற்றது.

இதன்போது குரு சுவாமிக்கு பொன்னாடைகள் போர்த்து, மலர்மாலைகள் அணிவித்து, நினைவுச் சின்னங்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டது. பின்னர் மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களும் வழங்கி வைக்கப்பட்டது.

திரு. இ.சுபாஸ்கரன் தலைமையில் நடைபெற்ற இந்த கௌரவிப்பு நிகழ்வில பிரதம அதிதியாக மறவன்புலவு சச்சிதானந்தம் கலந்து சிறப்பித்ததுடன், கிராம சேவகர் திரு. சிவரூபன், சமூக மட்ட அமைப்பினர், முன்பள்ளி ஆசிரியர்கள், பொதுமக்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

தனீஸ்வர சுவாமி, மாணவர்களுக்கான கற்றலுக்கான உதவிகள், வாழ்வாதார உதவிகள் என பல்வேறு உதவிகளை வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# யாழ்ப்பாணப் பொது நூலக எரிப்பின் மூலம் நாம் தெரிந்து கொண்ட தமிழர்களது அறிவு மரபின் அழிவும் இனவாத அரசியலின் வெளிப்பாடும்!




1981 ஆம் ஆண்டு மே 31 மற்றும் ஜூன் 1 ஆகிய இரவு, யாழ்ப்பாணத்தில் அமைந்த தெற்காசியாவின் மிகப்பெரிய நூலகங்களில் ஒன்றான யாழ்ப்பாணப் பொது நூலகம், சிங்கள இனவாதக் குழுக்களால் திட்டமிட்டு எரிக்கப்பட்டது. இச்சம்பவம், இலங்கையின் இனவாத அரசியலின் ஒரு முக்கிய திருப்புமுனையாகவும், தமிழர் சமூகத்தின் அறிவு மரபை அழிக்கும் ஒரு முயற்சியாகவும் பார்க்கப்படுகிறது.

1933 இல் நிறுவப்பட்ட யாழ்ப்பாணப் பொது நூலகம், தமிழர் அறிவு, கலாசாரம் மற்றும் வரலாற்று மரபின் மையமாக விளங்கியது. 1959 இல் அதன் முதன்மை கட்டிடம் திறக்கப்பட்டது. இந்த நூலகத்தில் 97,000க்கும் மேற்பட்ட அரிய நூல்கள், பாம்பு இலைச் சுவடிகள், பழமையான பத்திரிகைகள் மற்றும் வரலாற்று ஆவணங்கள் சேமிக்கப்பட்டிருந்தன. இந்த நூலகம், தமிழர் சமூகத்தின் அறிவு செல்வத்தின் அடையாளமாகவும், அவர்களின் கலாசாரத்தின் மையமாகவும் இருந்தது.

1981 ஆம் ஆண்டு மே 31 அன்று, யாழ்ப்பாணத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணி (TULF) நடத்திய தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தின் போது, ஒரு போலிஸ்காரர் சுட்டுக் கொல்லப்பட்டார். இதனைத் தொடர்ந்து, சிங்கள இனவாதக் குழுக்கள் மற்றும் போலீசார், யாழ்ப்பாணத்தில் உள்ள தமிழ் சொத்துக்களை, கடைகள், வீடுகள் மற்றும் முக்கியமான கட்டிடங்களை எரிக்கத் தொடங்கினர். ஜூன் 1 இரவு, யாழ்ப்பாணப் பொது நூலகம் எரிக்கப்பட்டது. இந்த எரிப்பில், நூலகத்தில் உள்ள அரிய நூல்கள் மற்றும் சுவடிகள் அனைத்தும் அழிந்தன.


இந்த எரிப்பின் போது, இலங்கையின் அமைச்சர்கள் சிறில் மெத்தியூ மற்றும் காமினி திசாநாயக்கா யாழ்ப்பாணத்தில் இருந்தனர். அவர்கள், இந்த எரிப்பை "சில போலீசார் மதுபோதையில் செய்த செயல்கள்" எனக் கூறி, பொறுப்பைத் தவிர்த்தனர். இந்த சம்பவம் குறித்து எந்தவொரு சுயாதீன விசாரணையும் நடத்தப்படவில்லை, மேலும் எந்தவொரு நபரும் குற்றவாளியாகக் குறிக்கப்படவில்லை.

யாழ்ப்பாணப் பொது நூலகத்தின் எரிப்பு, தமிழர் சமூகத்தின் அறிவு மரபை அழிக்கும் ஒரு முயற்சியாகவும், அவர்களின் அடையாளத்தை அழிக்கும் ஒரு நடவடிக்கையாகவும் பார்க்கப்படுகிறது. இந்த சம்பவம், தமிழர் சமூகத்தில் பெரும் வேதனையை ஏற்படுத்தியது மற்றும் அவர்களின் விடுதலைக்கான போராட்டத்தை மேலும் தீவிரப்படுத்தியது.

2001 ஆம் ஆண்டு, யாழ்ப்பாணப் பொது நூலகம் மறுசீரமைக்கப்பட்டது. புதிய கட்டிடங்கள் கட்டப்பட்டாலும், பழைய அரிய நூல்கள் மற்றும் சுவடிகள் மீட்டெடுக்கப்படவில்லை. இன்று, இந்த நூலகம் தமிழர் சமூகத்தின் உறுதியின் அடையாளமாகவும், அவர்களின் கலாசாரத்தின் நினைவாகவும் நிற்கிறது.

யாழ்ப்பாணப் பொது நூலகத்தின் எரிப்பு, 20 ஆம் நூற்றாண்டின் மிகப் பெரிய இனவாத நூலக எரிப்புகளில் ஒன்றாகும். இது, தமிழர் சமூகத்தின் அறிவு மரபை அழிக்கும் ஒரு திட்டமிட்ட முயற்சியாகவும், இலங்கையின் இனவாத அரசியலின் வெளிப்பாடாகவும் பார்க்கப்படுகிறது.

**ஈழத்து நிலவன் (31-05-2025)**








# Thana Insurance Inc

**T20 INSURANCE**

| AGE | | 25 | | 30 | | 35 | | 40 | | 45 | | 50 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | M | F | M | F | M | F | M | F | M | F | M | F |
| 200K | T20 | 17 | 15 | 18 | 15 | 20 | 17 | 27 | 21 | 43 | 30 | 69 | 49 |
| 500K | T20 | 30 | 22 | 31 | 22 | 32 | 24 | 46 | 35 | 73 | 54 | 126 | 85 |
| 1MILL | T20 | 54 | 36 | 55 | 38 | 56 | 42 | 86 | 62 | 139 | 100 | 244 | 164 |

**PERMANENT LIFE INSURANCE (PREMIUM NEVER INCREASE)**

| AGE | | 25 | | 30 | | 35 | | 40 | | 45 | | 50 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | M | F | M | F | M | F | M | F | M | F | M | F |
| 200K | WL | 82 | 71 | 100 | 86 | 123 | 106 | 152 | 131 | 197 | 166 | 238 | 209 |
| 500K | WL | 192 | 164 | 232 | 202 | 295 | 251 | 368 | 316 | 480 | 407 | 587 | 513 |

**NON MEDICAL INSURANCE (PREMIUM NEVER INCREASE)**

| AGE | | 45 | | 50 | | 55 | | 60 | | 65 | | 70 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | M | F | M | F | M | F | M | F | M | F | M | F |
| 25K | WL | 38 | 34 | 47 | 40 | 55 | 49 | 76 | 75 | 106 | 84 | 148 | 105 |
| 50K | WL | 69 | 62 | 89 | 75 | 104 | 93 | 147 | 123 | 206 | 162 | 290 | 205 |
| 100K | WL | 133 | 118 | 172 | 144 | 202 | 179 | 289 | 241 | 406 | 319 | 475 | 405 |

**20 YEARS TERM - NON MEDICAL INSURANCE**

| AGE | | 40 | | 45 | | 50 | | 55 | | 60 | | 65 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | M | F | M | F | M | F | M | F | M | F | M | F |
| 100K | T20 | 20 | 17 | 28 | 22 | 41 | 34 | 78 | 57 | 131 | 88 | 233 | 157 |
| 200K | T20 | 33 | 30 | 50 | 38 | 78 | 63 | 150 | 108 | 257 | 171 | 460 | 307 |

**Thana Manickavasagar**
Insurance Broker



THANA INSURANCE Inc.

Web : www.thana.ca
E-mail : thana7@gmail.com
Address : 80 Nashdene Road, unit D218, Scarborough, ON, M1V 5E4

Cell : 416-728-5772
Office : 416-519-3896

"WE DO 100% ONLINE SERVICES,24/7."

இலங்கை செய்திகள்
Sri Lanka News



# அச்சுவேலியில் பெண் தலைமைதயில் வாழ்ந்த குடும்பம் வளர்த்த கோழிகளுக்கு விஷம் வைத்துக் கொன்ற சமூக விரோதிகள்!

கடந்த 30ம் திகதி வெள்ளிக்கிழமை அன்றையதினம் யாழ்ப்பாணம். அச்சுவேலி பகுதியில் பெண் தலைமைத்துவம் கொண்ட குடும்பம் ஒன்று வாழ்வாதாரத்துக்காக வளர்த்து வந்த கோழிகளுக்கு விஷம் வைத்ததால் பல கோழிகள் உயிரிழந்துள்ளன.

கூட்டில் அடைத்து வைக்கப்பட்டிருந்த முட்டையிடும் கோழிகளுக்கே இவ்வாறு விஷம் வைக்கப்பட்டது. இது குறித்து அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு ஒன்றும் பதிவு செய்யப்பட்டது.

வளலாய் மேற்கு, அச்சுவேலி (ஜே/284) பகுதியில் வசித்து வந்த பெண் தலைமைத்துவ குடும்பத்தின் வாழ்வாதரமே இவ்வாறு நாசம் செய்யப்பட்டுள்ளது. இதனால் 97 கோழிகள் உயிரிழந்துள்ளதுடன் இன்னும் பல கோழிகள் உடல்நலம் குன்றிய நிலையில் காணப்படுகின்றதாக தெரிவிக்கப்படுகிறது.

குறித்த கோழிகளையே வாழ்வாதாரமாக நம்பி வாழ்க்கையை நடாத்தி வரும் குடும்பமானது இந்த சம்பவத்தால் நிர்க்கதியாகியுள்ளது. இது குறித்து அச்சுவேலி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# யாழ்ப்பாணம் பொதுசன நூலகம் எரிக்கப்பட்டு 44 ஆவது ஆண்டு நினைவுநாள்!



யாழ்ப்பாணம் பொதுசன நூலகம் தீயூட்டி எரிக்கப்பட்டமையின் 44 ஆவது ஆண்டு நினைவுநாள் 1ம் திகதி அன்று அனு'டிக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் பொதுசன நூலகத்தின் ஏற்பாட்டில் 1ம் திகதியன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9.00மணியளவில் பொதுசன நூலகத்தில் இந்த நினைவேந்தல் இடம்பெற்றது.

நினைவேந்தலின்போது யாழ்ப்பாண பொதுசன நூலகத்தை உருவாக்குவதற்கு காரணகர்த்தாவாக விளங்கிய k.m செல்லப்பா அவர்களுக்கும், யாழ்ப்பாண பொதுசன நூலகத்தை எரியூட்டப்பட்டதை அறிந்து உயிரிழந்த அருட்கலாநிதி h.s தாவீது அடிகளாருக்கும் மலர் தூவி சுடர் ஏற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது.

நினைவேந்தலில் யாழ் மாநகர சபையின் ஆணையாளர் ச.கிருஷ்ணேந்திரன் நூலக ஊழியர்கள், வாசகர்கள், பொதுமக்கள் ஆகியோர் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினர்.

யாழ்ப்பாண பொதுநூலகம் 1981 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 1ஆம் திகதி சிங்கள காடையர் குழுவால் தீயூட்டப்பட்டது. நூலகம் எரிக்கப்பட்ட காலத்தில், அங்கு சுமார் 97,000 அரிய நூல்கள் இருந்ததுடன், தென்கிழக்காசியாவிலேயே மிகப்பெரிய நூலகமாகவும் திகழ்ந்தது.



# செல்பி மோகத்தால் பறிபோன இரு உயிர்கள்

## குமுழமுனை கொட்டுக்கிணற்று பிள்ளையார் ஆலய கேணியில் தவறி விழுந்த நிலையில் உயிரிழப்பு

குமுழமுனை கொட்டுக்கிணற்று பிள்ளையார் ஆலய கேணியில் 1ம் திகதி அன்று ஞாயிற்றுக்கிழமையன்று செல்பி எடுக்க சென்ற இரு யுவதிகள் தவறி விழுந்த நிலையில் ஆபத்தான நிலையில் மீட்கப்பட்டு முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளனர்.

முல்லைத்தீவு குமுழமுனை கொட்டுக்கிணற்று பிள்ளையார் ஆலய கேணியில் செல்பி எடுப்பதற்காக இரு யுவதிகள் சென்றுள்ளனர்.

இருவரும் கேணிக்குள் தவறி வீழ்ந்துள்ள நிலையில் குமுழமுனை இளைஞர்களால் மீட்கப்பட்டு மாஞ்சோலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டபோது சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளனர்.

உயிரிழந்த இருவரும் பூதன்வயல் மாமூலை பகுதியில் வசிக்கும் தரம் 10 இல் கல்விகற்கும் மாணவிகள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

குறித்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# தொடரும் ஊடகர்கள் மீதான அச்சுறுத்தல்; படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்களுக்கு நீதி வழங்குவதில் அனுர அரசும் பாராமுகம்

## யாழ். வடமராட்சி ஊடக இல்லம் சுட்டிக்காட்டு!

ஆயுதங்கள் மௌனிக்கப்பட்டு 16 ஆண்டுகள் கடந்துள்ள நிலையிலும் ஊடகத்துறை மீதான அச்சுறுத்தல் தொடர்ந்து வருகின்றமைக்கு படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்களுக்கு நீதி வழங்கும் விடயத்தில் ஆட்சிகள் மாறினாலும் பாராமுகமாக செயற்பாட்டு வருகின்றமையே காரணம் என யாழ் வடமராட்சி ஊடக இல்லம் சுட்டிக்காட்டியுள்ளது.

யாழ் வடமராட்சி ஊடக இல்லத்தில் மே மாதம் 31ம் திகதி சனிக்கிழமையன்று மாலை இடம்பெற்ற, சுட்டுப் படுகொலை செய்யப்பட்ட ஐயாத்துரை நடேசன் அவர்களின் 21 ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வில் அஞ்சலி உரை நிகழ்த்திய யாழ் வடமராட்சி ஊடக இல்ல செயலாளர் இரா. மயூதரன் இவ்வாறு தெரிவித்தார். இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடமராட்சியை சேர்ந்த நடேசன் அவர்கள் மட்டக்களப்பில் வாழ்ந்து வந்த நிலையில் தென் தமிழீழ மக்களுக்காக துணிச்சலுடன் செயற்பட்டு ஊடக செயற்பாட்டின் மூலம் துணைநின்றவர். அதன் காரணமாக பல சந்தர்ப்பங்களில் நேரடியாகவும், தொலைபேசி ஊடாகவும் உயிரச்சுறுத்தல் விடுக்கப்பட்ட போதிலும் ஓய்ந்து ஒதுங்காது இறுதி மூச்சு உள்ளவரை ஊடகப்பணி ஆற்றியவர் நடேசன் அண்ணா. இறுதியாக இதே நாளில் 2004 ஆம் ஆண்டு சிறீலங்கா அரச படைகளோடு சேர்ந்தியங்கிய துணை ஆயுத குழுவினரால் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டார்.

இவ்வாறு தமிழர் தாயகத்தில் நாற்பதுக்கு மேற்பட்ட ஊடகவியலாளரகள் கடத்தப்பட்டும், காணாமல் ஆக்கப்பட்டும், சுட்டுப்படுகொலை செய்யப்பட்டும் இல்லாமல் செய்யப்பட்டுள்ளனர். மேலும் பலர் இருக்கிறார்களா இல்லையா என்று தெரியாத நிலைக்குள்ளாக்கப்பட்டுள்ளனர். லசந்த விக்ரமதுங்க, பிரகீத் எக்னலியகொட உள்ளிட்ட சிங்கள ஊடகவியலாளர்களும் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டும் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டும் உள்ளனர்.

ஆயுதங்கள் மௌனிக்கப்பட்டு 16 ஆண்டுகள் கடந்துள்ள போதிலும் ஊடகத்துறை மீதான அச்சுறுத்தல் பல்வேறு வடிவங்களில் தொடர்ந்தே வருகிறது. அன்று ஆயுத முனையில் மேற்கொள்ளப்பட்ட அச்சுறுத்தல் இன்று வன்முறை வடிவத்திலும் பயங்கரவாத தடைச்சட்டத்தின் பெயராலும் தாக்குதல்கள், விசாராணகள் என்ற வடிவங்களில் தொடர்ந்து வருகின்றன. அனுரகுமார திசநாயக்க அரசாங்கம் பொறுப்பேற்று ஆறு மாதங்களை கடந்துள்ள போதிலும் இவ்விடயத்தில் எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்படாது பாராமுகமாக செயற்பட்டுவருகின்றது.

பல தசாப்தங்கள் கடந்தும் ஊடகத்துறை மீதான அச்சுறுத்தல் தொடர்கின்றமைக்கு முன்னைய படுகொலைகள் உள்ளிட்ட அச்சுறுத்தும் செயற்பாடுகள் தொடர்பில் நிதியான விசாரணை எவையும் முன்னெடுக்கப்படவில்லை. அது மாத்திரமல்லாது அவற்றுடன் தொடர்புடையவர்கள் எவரும் சட்டத்தின் முன் நிறுத்தப்பட நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை.




ஆட்சிகள் மாறினாலும் இதே நிலை தொடர்கின்றமையே ஊடகத்துறை மீதான அச்சுறுத்தல் இன்றும் தொடர்வதற்கு காரணமாக அமைகின்றது.

இலங்கையின் உள்ளக பொறிமுறைக்குள்ளாக படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்களுக்கு நீதி கிடைக்கப்போவதில்லை. சர்வதேச விசாரணை மூலமே உண்மை குற்றவாளிகள் கண்டறியப்பட்டு பாரபட்சமற்ற முறியில் நீதியின் முன் நிறுத்தப்பட முடியும் என்பது யாழ் வடமராட்சி ஊடக இல்லத்தின் ஆணித்தரமான நிலைப்பாடு ஆகும். அந்த வகையில் தற்போது அமைந்துள்ள அனுரகுமார திசநாயக்க அரசாங்கம் ஆவது அதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்வதன் ஊடாக ஊடகத்துறையின் சுயாதீனத்தன்மையினை உறுதிசெய்யுமாறு இன்றைய நாளில் யாழ் வடமராட்சி ஊடக இல்லம் வலியுறுத்தி கேட்டுக்கொள்கின்றது. என்றார். ஊடகவியலாளர் நடேசனுக்கு வடமராட்சி ஊடக இல்லத்தில் அஞ்சலி!

துணை ஆயுதக்குழுவினரால் சுட்டுப் படுகொலை செய்யப்பட்ட நாட்டுப்பற்றாளர் ஐயாத்துரை நடேசனின் 21 ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு இன்றைய தினம் (31) சனிக்கிழமை யாழ் வடமராட்சி ஊடக இல்லத்தில் இடம்பெற்றுள்ளது.

பருத்தித்துறையில் அமைந்துள்ள யாழ் வடமராட்சி ஊடக இல்ல அலுவலகத்தில் அன்று மாலை இடம்பெற்ற நிகழ்வில், மட்டக்களப்பில் சுட்டுப்படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் ஐயாத்துரை நடேசனின் திருவுருவப்படத்திற்கு மலர் தூவி, மெழுகுவர்த்தி ஏற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது.

யாழ் வடமராட்சி ஊடக இல்ல தலைவர் கு.மகாலிங்கம் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் ஊடக இல்லத்தை சேர்ந்த ஊடகவியலாளர்கள் பங்கேற்று அஞ்சலி செலுத்தினர்.

இலங்கை செய்திகள் Sri Lanka News

# தமிழீழ வைப்பகத்தின் நகைகளை உரிமை கோருகின்றது ஈ.பி.டி.பி!

விடுதலைப் புலிகளின் நிர்வாக நடைபெற்ற காலத்தில் தமிழீழ வைப்பகத்தில் நகைகளை அடகு வைத்தவர்கள் அதற்கான ஆவணங்கள் சமர்ப்பிக்கும் பட்சத்தில், அவற்றுக்கான தற்போதைய சந்தைப் பெறுமதியை அரசாங்கம் வழங்க வேண்டும் என்று வலியுறுத்தியுள்ள ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி, அவ்வாறு அடைவு வைக்கப்பட்டமைக்கான ஆவணங்கள் தங்களுடைய கட்சி உறுப்பினர்களிடமும் இருப்பதாகவும் தெரிவித்துள்ளது.

மேலும், மாகாண சபைக்கான அதிகாரங்கள் சூட்சுமமான முறையில் மீளப் பெறுப்படும் செயற்பாடு தொடருகின்ற நிலையில் அதுதடுக்கப்பட வேண்டும் எனவும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

யாழ். ஊடக மையத்தில்அண்மையில் நடைபெற்ற ஊடகச் சந்திப்பில், ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் ஊடகச் செயலாளர் ஸ்ரீகாந் பன்னீர்செல்வம் மற்றும் கிளிநொச்சி மாவட்ட செயற்பாட்டாளர்களுள் ஒருவரான திருமதி. எஸ். சுந்தராம்பாள் ஆகியோர் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே குறித்த விடயங்கள் தெரிவிக்கப்பட்டன.

இவை தொடர்பாக மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது, மாகாண சபையினை அடிப்படையாக கொண்ட அதிகாரப் பகிர்வே அரசியல் தீர்விற்கான ஆரம்ப கொண்டு முன்னோக்கி செல்ல வேண்டும் என்பதை வலியுறுத்துகின்ற தரப்பு என்ற அடிப்படையிலே, மாகாணத்தின் அதிகாரங்கள் மத்திய அரசாங்கத்திடம் கையளிக்கப்படுவதை எந்த வகையிலும் அனுமதிக்க முடியாது.

1987 ஆண்டு உருவாக்கப்பட்ட இலங்கை இந்திய ஒப்பந்தத்தின் அடிப்படையில் 1988 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட மாகாணசபை சட்டத்தின் அடிப்படையில், மாகாணங்களுக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களில் சில காலத்திற்கு காலம் மாறி மாறி ஆட்சிக்கு வந்த அரசாங்கங்களானால் மீளவும் மத்திக்கு எடுக்கப்பட்டிருக்கின்றது. சில முயற்சிகள் தடுத்து நிறுத்தப்பட்டிருக்கின்றன.

ஈழ மக்கள் ஜனநாயக் கட்சியினராகிய நாம், எமக்கு கிடைத்த அதிகாரங்களை பயன்படுத்தி, மாகாண அதிகாரங்களை மத்திக்கு திருப்பி எடுக்கு முயற்சிகளை கடந்த காலங்களில் எமது தேசிய நல்லிணக்க வழிமுறைகளின் ஊடாக தடுத்து நிறுத்தி இருக்கின்றோம்.

குறிப்பாக, 2012 ஆம் ஆண்டு காலப் பகுதியில் மாகாண சபையின் முக்கியமான பல அதிகாரங்களை மீளவும் மத்திய அரசாங்கத்திற்கு எடுத்துக் கொள்வதன் மூலம், மாகாணசபை முறைமையை இல்லாமல் செய்வதற்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன. அப்போது, ஆளுந்தரப்பில் பங்காளிகளாக இருந்த நாம், அந்த அரசாங்கத்தில் அங்கம் வகித்த தமிழ் பேசும் பிரதிநிதிகளையும் மாகாண சபை தொடர்பான நியாயத்தினை புரிந்து கொண்ட சிங்கள முற்போக்கு சக்திகளையும் ஒருங்கிணைத்து சுமார் 50 மேற்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களின் எதிர்ப்புக்களை தெரிவித்து அதனை தடுத்து நிறுத்தியிருந்தோம்.

அதேபோன்று, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் காலப் பகுதியில் நாடளாவிய ரீதியில் தெரிவு செய்யப்பட்ட மாவட்ட வைத்தியசாலைகளை மத்திய அரசாங்கத்தினுள் எடுக்கின்ற திட்டத்தின் அடிப்படையில் கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் போன்ற மாவட்ட. வைத்தியசாலைகளையும் மத்திய அரசாங்கத்தினுள் எடுப்பதற்கான முயற்சிகள் முனனெடுக்கப்பட்டன. குறித்த விவகாரம் அமைச்சரவைக்கு வந்தபோது, மாகாண சபை அதிகாரத்திற்கு உட்பட்ட குறித்த மூன்று வைத்தியசாலைகளையும் மத்திய அரசாங்கம் பொறுப்பெடுப்பது எமது அரசில் அபிலாசைகள் தொடர்பில் ஏமாற்றத்தினை ஏற்படுத்தும் என்பதை வலியுறுத்தி அந்த திட்டததினை தடுத்து நிறுத்தியிருந்தோம். அதேபோன்று, 1000 தேசிய பாடசாலை திட்டத்தின் மூலம் எமது பகுதிகளில் பல மாகாண பாடசாலைகளை மத்திய அரசாங்கத்தினுள் எடுப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. அதனை தடுத்து நிறுத்துவதற்கான அரசியல் சூழல் இல்லாத நிலையில், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஆட்சிக்கு வந்ததும், அந்த திட்டத்தினையே கைவிடச் செய்தில் காத்திரமான பங்களிப்பினை வழங்கியிருந்தோம்.




இவ்வாறான பின்னணியிலேயே தற்போது மன்னார் வைத்தியசாலை விவகாரம் பேசுபொருளாக்கப்பட்டிருக்கிறது. இதுதொடர்பாக நாம் அவதானமாக இருக்க வேண்டும்.

குறிப்பாக மாகாண சபையை அடிப்படையாக கொண்ட அதிகாரப் பகிர்வை ஏற்றுக்கொள்ளாத 6 தரப்பினர் ஆளுந்தரப்பாக இருக்கின்ற நிலையில், எமது அரசியல் அபிலாசைளுக்கான அடிப்படையாக கொண்ட மாகாண சபை அதிகாரங்களை வலுவிழக்க செய்கின்ற, மத்திய அரசாங்கத்தினால் பிடுங்கி எடுக்கப்படுகின்ற அபாயம் அதிகளவில் இருக்கின்றது. எனவே தற்போதைய அரசாங்கத்தின் செயற்பாடுகள் தொடர்பாக எமது மக்களின் நலன்சார்ந்த தரப்புக்கள் ஒவ்வொன்றும் கண்ணில் எண்ணெய் ஊற்றி விடயங்களை அவதானிக்க வேண்டும் என்பதை வலியுறுத்த விரும்புகின்றோம்.

அதேபோன்று, உள்ளூராட்சி தேர்தல் காலத்தில் விடுதலைப் புலிகளின் தமிழீழ வைப்பக வங்கியில் அடைவு வைக்கப்பட்ட நகைகள் என்று ஒரு தொகுதி தங்க நகைகள் அரசாங்கத்தினால் காண்பிக்கப்பட்டது.

இறுதிக் காலகட்டத்தில் அப்போதைய சந்தைப் பெறுமதிப்படி சுமார் 9 கோடி ரூபாய் பெறுமதியான நகைகள் இருந்ததாக சொல்லப்படுகின்ற போதிலும், அந்தளவு நகைகள் தற்போது காண்பிக்கப்படவில்லை.

அதேபோன்று, நகைகளை அடைவு வைத்தவர்கள் அனைவரும் தற்போது இருக்கின்றார்கள் என்பதற்கோ, இருந்தாலும் அவர்களிடம் உரிய ஆவணங்கள் பாதுகாப்பாக இருக்கும் என்பதோ எதிர்பார்க்க முடியாது.

எனவே, யாதார்த்தத்தினை புரிந்து கொண்டு நகைகளை அடைவு வைத்தமைக்கான ஆவணங்களை சமர்ப்பிப்பவர்களுக்கு, அவர்கள் அடைவு வைத்த தங்க நகைகளுக்கான தற்போதைய சந்தைப் பெறுமதியை வழங்குவதற்கு அரசாங்கம் முன்வர வேண்டும். அடைவு நகை விவகாரத்தினை வெறுமனவே தேர்தல் வாக்குறுதியாக கடந்து செல்லாமல் விரைவான நடவடிக்கை முன்வைக்கப்பட வேண்டும் எனவும் ஈ.பி.டி.பி. வலியுறுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# தமிழ் விவசாயிகள் மீதான குற்றத்தை நிரூபிக்க பொலிஸாரிடம் "எவ்வித ஆதாரமும் இல்லை" முல்லைத்தீவு நீதிபதி டி. பிரதீபன் தீர்ப்பு








தொல்பொருள் தளத்தை சேதப்படுத்தியதாக இரண்டு தமிழ் விவசாயிகள் மீதான குற்றச்சாட்டுகளை பொலிஸ ார் நிரூபிக்கத் தவறியதால், நீதிமன்றம் அவர்களை விடுவித்து விடுதலை செய்ய உத்தரவிட்டுள்ளது.

சந்தேகத்திற்குரிய இருவர் மீதான குற்றச்சாட்டுகளை பொலிஸாரால் நியாயமான சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்க முடியவில்லை என்ற அடிப்படையில், மூன்று வாரங்களாக விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த சாமித்தம்பி ஏகாம்பரம் மற்றும் ஸ்ரீரத்தினம் கஜரூபன் ஆகியோரை முல்லைத்தீவு நீதிபதி டி. பிரதீபன் ஜூன் 5ம் திகதி வியாழக்கிழமை அறிவித்து விடுதலை செய்தார்.

குருந்தூர்மலையில் உள்ள தொல்பொருள் தளத்தை சேதப்படுத்தியதாக விவசாயிகள் மீது தேரர் ஒருவர் அளித்த முறைப்பாட்டின் அடிப்படையில் பொலிஸார் குற்றச்சாட்டுகளை பதிவு செய்தனர்.

போரினால் பாதிக்கப்பட்ட வன்னியில் உள்ள சில காணிகளின் உரிமை தொடர்பாக மாகாணத்தின் தமிழ் மக்களுக்கும் பௌத்த பிக்குகளுக்கும் இடையே நீண்டகாலமாக நிலவும் சர்ச்சையைத் தீர்ப்பதில் முல்லைத்தீவு நீதிபதியின் தீர்ப்பு
உதவியாக இருக்கும் என நம்பப்படுகிறது.

அந்த காணி தொல்பொருள் துறைக்குச் சொந்தமானதாக சட்டப்பூர்வமாக்கப்படவில்லை என்பதை பொலிஸாரும் தொல்லியல் திணைக்களமும் ஒப்புக்கொண்டதாக, நீதிமன்ற நடவடிக்கைகளுக்குப் பின்னர், சட்டத்தரணி வி.எஸ். தனஞ்சயன் ஊடகங்களிடம் தெரிவித்தார்.

"வழக்குத் தொடுனர் சார்பில் தொல்பொருள் திணைக்களத்தாலும் சமர்ப்பணங்கள் செய்யப்பட்டன. இந்த இரண்டு சந்தேகநபர்களும் இந்த வழக்கில் இருந்து பூரணமாக விடுவிக்கப்பட்டுள்ளனர். அந்த நீதிமன்ற கட்டளையிலேயே, விசேடமாக குறித்த பிரதேசமானது இன்னமும் தொல்பொருள் திணைக்களத்திற்கு உரியது என வர்த்தமானியில் பிரசுரிக்கப்படவில்லை என்பதை வழக்குத் தொடுனரே ஏற்றுக்கொண்டிருந்ததை நீதவான் சுட்டிக்காட்டியிருந்தார்."

குற்றம் சாட்டப்பட்ட இரண்டு விவசாயிகளின் சார்பாக சாட்சியங்களை முன்வைக்க 12 சட்டத்தரணிகள் நீதிமன்றத்தில் முன்னிலையானதாக சட்டத்தரணி வி.எஸ். தனஞ்சயன் மேலும் தெரிவித்திருந்தார்.

தொல்பொருள் துறை அதிகாரிகள் மற்றும் வடக்கு மாகாண சங்கநாயக்க தேரர் கல்கமுவே சாந்தபோதி ஆகியோர் செய்த முறைப்பாட்டை அடுத்து, புனித பிரதேசத்தை சேதப்படுத்திய குற்றச்சாட்டில் மே 10 அன்று மூன்று தமிழ் விவசாயிகளை கைது செய்ய பொலிஸ் நடவடிக்கை எடுத்தது.

ஆரம்பத்தில் முல்லைத்தீவின் குருந்தூர்மலை பகுதிக்கு 78 ஏக்கர் பரப்பளவு சொந்தமானது என, மே 12, 1933 அன்று ஆங்கிலேயர்களால் வெளியிடப்பட்ட வர்த்தமானியை மேற்கோள் காட்டி தொல்பொருள் துறை அதிகாரிகள் அறிவித்ததாக அப்பகுதியின் தமிழ் மக்கள் குறிப்பிடுகின்றனர்.

அப்பகுதியில் நடத்தப்பட்ட ஆய்வின் பின்னர், தொல்பொருள் கலைப்பொருட்கள் இருப்பதாக அடையாளம் காணப்பட்டதாகக் கூறப்படும் மேலும் 229 ஏக்கர் நிலம், குருந்தூர்மலை தொல்பொருள் காப்பகத்திற்காக தொல்பொருள் திணைக்களத்தால் வரையறுக்கப்பட்டதாக அவர்கள் கூறுகின்றனர்.

முல்லைத்தீவு குருந்தூர்மலையில் உள்ள தன்னிமுறிப்பு குளத்தின் கீழ் விவசாயத்தில் ஈடுபடும் அப்பகுதி மக்கள், 229 ஏக்கர் நிலத்தில் அவர்களின் உறவினர்கள் 100 வருடங்களுக்கும் மேலாக விவசாயம் செய்து வரும் நெல் வயல்களும் அடங்குவதாக கூறுகின்றனர்.

மே 10 ஆம் திகதி, குருந்தூர்மலை அடிவாரத்தில், மூன்று தொழிலாளர்கள் உழவு இயந்திரத்தின் ஊடாக நிலத்தை தயார் செய்து கொண்டிருந்தபோது, தொல்பொருள் துறை அதிகாரிகள் மற்றும் வடக்கு மாகாண சங்கநாயக்க தேரரான கல்கமுவே சாந்தபோதி ஆகியோர் செய்த முறைப்பாட்டை தொடர்ந்து, பொலிஸார் மூன்று பேரைக் கைது செய்து நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தினர்.

மூவரில் பாடசாலை சிறுவனை விடுவிக்க பொலிஸாருக்கு உத்தரவிட்ட நீதிபதி டி. பிரதீபன், சந்தேகநபர்களான சாமித்தம்பி ஏகாம்பரம் மற்றும் ஸ்ரீரத்தினம் கஜரூபன் ஆகியோரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார்.



# புதிய கூட்டு நம்பிக்கைகளைப் புதுப்பிக்குமா?

- யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார் -

தமிழ் தேசிய மக்கள் முன்னணி ஏற்கனவே ஒரு கூட்டை உருவாக்கி வைத்திருந்தது. தமிழ்த் தேசிய மக்கள் பேரவை என்ற பெயரில் அக்கூட்டு உள்ளூராட்சி சபைத் தேர்தலில் குறிப்பிடத்தக்க அளவுக்கு முன்னேறியிருந்தது. இப்பொழுது அக்கூட்டை அடுத்த கட்டத்திற்கு விரிவுபடுத்தியிருக்கிறார்கள். கடந்த திங்கட்கிழமை ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்போடு ஒரு புரிந்துணர்வு உடன்படிக்கை எழுதப்பட்டிருக்கிறது. கொள்கை ரீதியாகத் தெளிவான நிலைப்பாடுகளோடு அந்தப் புரிந்துணர்வு உடன்படிக்கை காணப்படுகிறது. இதன் மூலம் தமிழ்த் தேசியப் பேரவையானது தமிழ்த் தேசியப் பரப்பில் உள்ள ஆகப்பெரிய கூட்டாக பரிணமித்திருக்கின்றது. எதிர்காலத்தில் மாகாண சபை தேர்தலை எதிர்கொள்வதற்கு இது அவர்களுக்கு ஒரு பலமான கட்டமைப்பாக இருக்க முடியும்.

கடந்த வெள்ளிக்கிழமை தமிழரசுக் கட்சிக்கும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிக்கு இடையே ஒரு சந்திப்பு இடம் பெற்றது. யாழ்ப்பாணம் ஃபொக்ஸ் ஹோட்டலில் இடம்பெற்ற இந்தச் சந்திப்பானது குறிப்பிட்டுச் செல்லக்கூடிய உடன்பாடு எதையும் எட்டவில்லை. இந்தச் சந்திப்பிற்கு கிட்டத்தட்ட ஒரு மணித்தியாலத்துக்கு முன்பு, யாழ்ப்பாணத்தை மையமாகக் கொண்டு இயங்கும் "டாண் டிவி"யில் ஒரு நிகழ்ச்சி ஒளிப்பதிவாகியது. இந்நிகழ்ச்சியில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் சார்பாக அதன் செயலாளர் கஜேந்திரனும், தமிழரசுக் கட்சியின் சார்பாக, சுமந்திரனுக்கு மிகவும் நெருக்கமானவரும், முன்னாள் வடமாகாண சபை உறுப்பினருமான சயந்தனும் பங்குபற்றினர். பொது ஆளாக நான் பங்குபற்றினேன்.

சந்திப்பின் தொடக்கத்தில் உரையாடல் நிதானமானதாகவும் ஒருவர் மற்றவரை குற்றம் சாட்டாததாகவும் அமைந்திருந்தது. ஆனால் ஒரு கட்டத்தில் கஜேந்திரன் நேரடியாகவும் மறைமுகமாகவும் சுமந்திரனைக் குற்றம் சாட்டத் தொடங்கினார். அதனால் கோபமடைந்த சயந்தன் இடையில் குறுக்கிட்டு தானும் பதிலுக்குக் குற்றம் சாட்டத் தொடங்கினார். இரண்டு அரசியல்வாதிகளும் என்னை நடுவில் வைத்துக்கொண்டு மோசமாக மோதிக்கொண்டார்கள். ஒருவர் மற்றவர் மீது அவதூறுகளையும் சதிக் கோட்பாடுகளையும் அள்ளி வீசினார்கள். ஒருவர் மற்றவரை எதிரியின் ஆள் என்று நிரூபிப்பதுதான் அவர்களுடைய நோக்கமாக இருந்தது. இரண்டு பேர்களுக்கும் நடுவே அமர்ந்திருந்து, நான் அமைதியாகப் பார்த்துக் கொண்டிருந்தேன். முடிவில் நான் கஜேந்திரனிடம் ஒரு கேள்வி கேட்டேன். "இன்னும் ஒரு மணித்தியாளத்தில் இரண்டு கட்சிகளும் சந்திக்கப் போகின்றீர்கள். அப்பொழுது எப்படிப்பட்ட ஒரு முடிவை எடுக்கப் போகின்றீர்கள்? இப்படி மோதிவிட்டு அங்கே போய் எப்படிப்பட்ட ஒரு முடிவை எடுக்கலாம்?" என்று. அதற்கு அவர் சொன்னார், நாங்கள் கொள்கையின் அடிப்படையில் தான் முடிவை எடுப்போம் என்று.

ஒளிப்பதிவு முடிந்ததும் மூன்று பேருக்கும் தேநீர் வந்தது. இரண்டு அரசியல்வாதிகளும் சிரித்துப் பழகி தேநீரை அருந்தினார்கள். அப்பொழுது நான் கேட்டேன், "மோசமாக ஒருவர் மற்றவரை நிந்தித்தும் குற்றச்சாட்டியும் மோதிக் கொண்டீர்கள். இங்கே வந்து சினேகபூர்வமாக தேநீர் அருந்துகிறீர்களே?" என்று. இதுதொடர்பாக என்னோடு உரையாடிய யாழ். பல்கலைக்கழகத்தின் துறைத் தலைவர் ஒருவர் சொன்னார், "அவர்கள் கமராவுக்கு முன் அமைதியாக உரையாடிவிட்டு, தேநீர் அருந்தும் பொழுது மோதி இருந்திருந்தால். அது அழகாக இருந்திருக்கும்" என்று.

அதுதான் உண்மை. மக்களுக்கு முன் அவர்கள் காட்டும் சித்திரம் என்ன என்று பார்த்தால் ஆளை ஆள் குற்றம் சாட்டுகின்ற, ஆளை ஆள் துரோகியாக்குகின்ற ஒரு சித்திரம்தான். ஆனால் தேநீர் அருந்தும் பொழுது அப்படி ஒரு மோதலே நடவாதது போல அவர்கள் வெகு சகஜமாகப் பழகுகிறார்கள். அதை ஒரு ஜனநாயகப் பண்பு என்று அவர்கள் கூறக்கூடும். ஆனால் இதே குற்றச்சாட்டுகளை முன்வைத்துத்தான் ஆயுதப் போராட்டத்தில் பலர் கொல்லப்பட்டு விட்டார்கள்.

இவ்வாறான ஒரு நிகழ்ச்சியின் பின்னணியில், அந்த நிகழ்ச்சி முடிந்து கிட்டத்தட்ட ஒரு மணித்தியாலத்தில் நடந்த ஃபொக்ஸ் ஹோட்டல் சந்திப்பானது, திருப்தியான முடிவுகள் இன்றி முடிவுக்கு வந்தது. அந்த சந்திப்பு வெற்றி பெறாத ஒரு பின்னணிக்குள்தான், கடந்த திங்கட்கிழமை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிக்கும் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் இடையே ஒரு உடன்படிக்கை கைச்சாத்தாகியுள்ளது.

அப்படி ஒரு உடன்படிக்கையை தமிழரசுக் கட்சியோடும் கையெழுத்திடலாம் என்று ஏற்கனவே நான் எழுதியுள்ளேன். டான் டிவியில் ஒளிப்பதிவு நடந்தபின் தேநீர் அருந்துகையில் அது தொடர்பாக நான் இருவரிடமும் சொன்னேன்." ஏக்கிய ராஜ்ய தொடர்பான வெளிப்படையான பகிரங்கக் கருத்தரங்கு ஒன்றை நடத்துங்கள். அதன் மூலம் ஒரு முடிவுக்கு வாருங்கள். ஒற்றை ஆட்சிக்கு உட்பட்ட எந்த ஒரு தீர்வையும் ஏற்றுக் கொள்வதில்லை என்பதனையும் வெளிப்படையான சமஸ்ரியைத்தான், அதாவது உச்ச நீதிமன்றத்தால் அது ஒற்றை ஆட்சி என்று பொருள்கோட முடியாத ஒரு சமஸ்ரியைத்தான் ஏற்றுக் கொள்வது என்பதனையும் ஓர் உடன்படிக்கையாக்கி அதில் கையெழுத்திடுங்கள்.பிரச்சினை தீர்ந்தது..." என்று. இருவரும் பதில் சொல்லவில்லை.

ஏறக்குறைய அதையொத்த ஒரு உடன்படிக்கைதான் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்போடு எழுதப்பட்டிருக்கிறது. அந்த உடன்படிக்கையின் பின் சமூக வலைத்தளங்களைப் பார்த்தால், தமிழரசுக் கட்சியின் ஆட்கள் குறிப்பாக சுமந்திரன் அணி, அந்த உடன்படிக்கையைக் கடுமையாகக் கேலி செய்து பகிடியாக்கி எழுதுவதைக் காண முடிகிறது. அவர்கள் அவ்வாறு எழுதத் தேவையான ஒரு இறந்த காலம் இருந்தது என்பதையும் இங்கு சுட்டிக்காட்ட வேண்டும். முன்னணி, ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் உள்ள கட்சிகளை, அதாவது முன்னாள் இயக்கங்களை மிகவும் கீழ்த்தரமாக குற்றம் சாட்டிய ஒரு கட்சி. இந்தியாவின் ஆட்கள் இந்தியாவின் ஏஜென்ட்கள் என்று மேற்படி இயக்கங்களை முத்திரை குத்திய ஒரு கட்சி. 13ஆவது திருத்தத்தை விட்டுக்கொடாதவர்கள், ஒற்றை ஆட்சிக்கு உட்பட்ட ஒரு தீர்வை ஏற்றுக் கொள்பவர்கள், இந்தியா உத்தரவிடும் முடிவுகளுக்குக் கீழ்படிகின்றவர்கள்... என்றெல்லாம் அவர்கள் மீது குற்றச்சாட்டுகளை வைத்திருந்தார்கள். ஆனால் இப்பொழுது அதே கூட்டமைப்போடு ஓர் உடன்படிக்கை எழுதப்பட்டிருக்கிறது. எனவே முன்னைய குற்றச்சாட்டுகளுக்கு அவர்கள் பதில் சொல்ல வேண்டிய ஒரு நிலை. அந்த குற்றச்சாட்டுகளை வைத்து சுமந்திரன் ஆதரவாளர்கள் அந்தக் கூட்டைக் கடுமையாக விமர்சிக்கின்றார்கள்.

ஆனால் அதுதான் கட்சி மைய அரசியல். அப்படித்தான் கூட்டுக்கள் உருவாக முடியும். கட்சி மைய அரசியலில் சமயோசிதக் கூட்டுக்கள்தான் உருவாக முடியும்.தந்திரோபாயக் கூட்டுக்கள்தான் ஏற்பட முடியும். புனிதக் கூட்டுக்களுக்கு அங்கே இடம் குறைவு. இந்தக் கட்சிமைய அரசியல் யதார்த்தத்தை முன்னணி ஏற்றுக் கொண்டிருப்பதும் அந்த அடிப்படையில் முடிவுகளை எடுப்பதும் வரவேற்கத்தக்கது. தூய்மைவாதம் சில சமயங்களில் பொது எதிரிக்கு சேவகம் செய்வதாக அமைந்து விடும்.

அது மட்டுமல்ல, ஆழமான கோட்பாட்டு விளக்கத்தின் அடிப்படையில் பார்த்தால் அந்த கூட்டு பொருத்தமானதும்தான். ஏனென்றால், தமிழ்த் தேசிய நோக்கு நிலையில் இரண்டு விதமாக அதனை நியாயப்படுத்தலாம். முதலாவதாக தேசியவாத அரசியல் எனப்படுவது மக்களை ஆகப்பெரிய திரளாகக் கூட்டிக் கட்டுவது. அந்த அடிப்படையில் பார்த்தால், அந்தக் கூட்டு மக்களை ஆகக்கூடிய பட்சம் திரட்ட முயற்சிக்கின்றது. எனவே அது பொருத்தமானது. இரண்டாவதாக, பொது எதிரிக்கு எதிராக தேசியவாத சக்திகளை ஒன்று திரட்டுவதும் ஒரு கொள்கைதான். தேசிய மக்கள் சக்தியானது கடந்த உள்ளூராட்சி சபைத் தேர்தல்களில் பெற்ற ஆசனங்களின் அடிப்படையில் தமிழரசுக் கட்சிக்கு அடுத்தபடியாக இரண்டாம் இடத்தில் நிற்கின்றது. எதிர்காலத்தில் மாகாண சபைத் தேர்தலை நோக்கி அவர்கள் திட்டமிட்டு, கடுமையாக வேலை செய்வார்களாக இருந்தால், ஓர் ஆளுங்கட்சி என்ற அடிப்படையில் வளங்களை ஒன்று குவிப்பார்களாக இருந்தால், அவர்கள் வெற்றிக்கு அருகே வர முடியும். எனவே ஒரு தென்னிங்கை மையக் கட்சி வடக்கு கிழக்கு மாகாண சபைகளைக் கைப்பற்றுவதைத் தடுப்பது என்றால் அந்தப் பொது எதிரிக்கு எதிராக தமிழ்த் தேசியக் கட்சிகள் ஒன்றிணைவது தவிர்க்க முடியாதது. அந்த அடிப்படையிலும் இந்தக் கூட்டு பொருத்தமானது.

மேலும் இக்கூட்டின் மூலம் குறிப்பிடத்தக்க அளவு பிரதேச சபைகளை அவர்கள் நிர்வகிக்க முடியும். இரண்டாவதாக சுமந்திரனைத் தனிமைப்படுத்த முடியும். மூன்றாவதாக, குறிப்பாக ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அதன் பேர பலத்தை அதிகப்படுத்திக் கொள்ள முடியும். தமிழரசுக் கட்சியோடு ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இணைவதைத் தடுப்பதும் இக்கூட்டின் ஒரு நோக்கம். அதனால் தான் இந்தக் கூட்டானது தனக்கு ஆபத்தானது என்று தமிழரசுக் கட்சிக்குள் உள்ள சுமந்திரன் அணி கருதுகின்றது.

சுமந்திரன் அணியைப் பொறுத்தவரை இது ஆபத்தான வளர்ச்சி. ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கடந்த உள்ளூராட்சி சபை தேர்தல்களை நோக்கி புதிய ஒருங்கிணைப்பு முயற்சிகளை எடுத்தபொழுது அதற்குள் கிளிநொச்சியை சேர்ந்த சந்திரகுமாரும் இணைக்கப்பட்டார். அதன்மூலம் அவர்கள் சிறிதரனுக்கு எதிராக தெளிவான ஒரு நிலைப்பாட்டை எடுத்திருப்பதாக நம்பப்பட்டது. மேலும் சந்திரகுமாரோடு உழைப்பவர்கள் சுமந்திரனுக்கும் நெருக்கமாக இருப்பதை கிளிநொச்சியில் காண முடியும். எனவே சந்திரக்குமாரை உள்ளே கொண்டு வந்ததன் மூலம் சுமந்திரனை நெருங்கிச் செல்லும் உள்நோக்கம் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு இருக்கலாம் என்றும் ஊகிக்கப்பட்டது. ஆனால் இப்பொழுது அந்தக் கூட்டு கஜேந்திரக்குமாரோடு இணைந்ததன் மூலம் அந்த வாய்ப்புக்கள் குறைந்து விட்டனவா?

சிறீதரன் அணி இப்புதியய கூட்டை எப்படி பார்க்கும்? ஏனென்றால் சிறீதரன் ஏற்கனவே கஜேந்திரக்குமாரோடு உரையாடியிருக்கிறார். நான் முன்பு குறிப்பிட்ட டான் டிவி நிகழ்ச்சியின் போது கஜேந்திரன் சிறீதரன் மீது பரிவோடும் அவருக்கு ஆதரவாகவும் கருத்துக்களைத் தெரிவித்தார். தமிழரசுக் கட்சிக்குள் இருந்து சிறீதரன் அணியைப் பிரித்துக் கையாளும் தந்திரம் அங்கே இருந்தது. சிறீதரன் அணிக்கும் சுமந்திரன் அணிக்கும் இடையிலான பிளவுகளைப் புதிய கூட்டு வெற்றிகரமாகக் கையாள முடியும் என்று நம்புவதாகவும் அதை விளங்கிக் கொள்ளலாம்.

ஆனால் கிளிநொச்சியில் சிறீதரனுக்கும் சந்திரகுமாருக்கும் இடையிலான பிளவு ஆழமானது, அதிகம் உள்ளூர்ப் பண்புகளைக் கொண்டது. அந்த உள்ளூர்ப் பண்புகளைத் தாண்டி, சிறிதரன் தமிழ்த் தேசியப் பேரவையின் நேசக் கரத்தைப் பற்றிக் கொள்வாரா?

பொறுத்திருந்தே பார்க்க வேண்டும். அரசியலில் நிரந்தரப் பகைவர்களும் இல்லை நண்பர்களும் இல்லை நிரந்தரமான நலன்கள்தான் உண்டு. எனவே அவ்வாறான நலன்களின் அடிப்படையில் எதிர் காலத்தில் தமிழ்த் தேசியப் பேரவையானது பலமடையுமாக இருந்தால் தமிழரசுக் கட்சிக்குள் சுமந்திரன் அணியானது தனிமைப்படுத்தப்படும் வாய்ப்புகள் அதிகரிக்குமா? ஏனெனில் அண்மையில் ஏற்பட்டிருக்கும் கூட்டுக்கள் யாவும் தேசிய மக்கள் சக்திக்கு மட்டும் எதிரானவை அல்ல. சுமந்திரனுக்கும் எதிரானவைதான்.

இலங்கை செய்திகள் Sri Lanka News

# செல்லத்துரை யாழ்ப்பாணத்தில் கோலாகலமாக நடைபெற்ற கனடா கல்விக் கண்காட்சி!



## கனடா - இலங்கை வர்த்தக சம்மேளனத்தின் தலைவர் குலா செல்லத்துரை தலைமையில் சிறப்பான முறையில் ஏற்பாடுகள் செய்யப்பெற்றிருந்தன

கனடா - இலங்கை வர்த்தக சம்மேளனத்தின் தலைவர் குலா செல்லத்துரை தலைமையில் சிறப்பான முறையில் ஏற்பாடுகள் செய்யப்பெற்றிருந்தன.

இலங்கை - கனடா வர்த்தக சம்மேளனத்தின் ஏற்பாட்டில் மிகப்பிரமாண்டமான முறையில் கனடா கல்விக் கண்காட்சி கடந்த வெள்ளிக்கிழமை மே மாதம் 30ம் திகதி யாழ்ப்பாணத்தில் உள்ள தனியார் விருந்தினர் விடுதியில் ஆரம்பமானது.

கனடா - இலங்கை வர்த்தக சம்மேளனத்தின் தலைவர் குலா செல்லத்துரை, மற்றும் குறித்த சம்மேளனத்தின் இலங்கைக்கான தலைவர் பியந்த சந்திரசேகர மற்றும் பலதரப்பட்ட துறைசார் அதிகாரிகள் பங்கேற்கபுடன் இந்த கண்காட்சியானது சம்பிரதாய பூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

கனடா கல்விக் கண்காட்சி மற்றும் யாழ்ப்பாணம் முதலீட்டு வர்த்தக மன்றம் 2025 என்ற குறித்த கண்காட்சி வடக்கு கிழக்கின் இளைஞர்களை மேம்படுத்தல் - எதிர்காலத்தை கட்டியெழுப்பல் என்ற தொனிப்பொருளில் முன்னெடுக்கப்படுகின்றது.









வெள்ளிக்கிழமை 30ம் திகதியும் சனிக்கிழமை 31ம் திகதியும் நடைபெற்ற இந்த கண்காட்சியானது இலங்கை வர்த்தக சபை, இலங்கை கனடா வணிக மன்றம், கனடா உயர் ஸ்தானிகராலயம், கனடா இலங்கை வணிக மன்றம் ஆகியன இணைந்து ஏற்பாடு செய்துள்ளனர்.

இந்நேரம் மற்றுமொரு தனியார் விருந்தினர் விடுதியில் முதலீடு மற்றும் வர்த்தக கண்கட்சி நடைபெற்று இதில் வடக்கின் ஆளுநர் உள்ளிட்ட பலர் அதிதிகளாகவும் கலந்து பங்கேற்று சிறப்பித்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# யாழ்ப்பாணத்தில், பிறந்து 3 மாதங்களேயான பெண் குழந்தை பரிதாபமாக உயரிழப்பு!

யாழ்ப்பாணத்தில் அண்மையில் பிறந்து 3 மாதங்களேயான பெண் குழந்தை ஒன்று மே மாதம் 29ம் திகதி பரிதாபமாக உயிரிழந்துள்ளது. சங்கானை - நிற்சாமம் பகுதியைச் சேர்ந்த திகாசன் அபிசிறி என்ற குழந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளது.

இது குறித்து மேலும் தெரியவருகையில், குறித்த குழந்தை கடந்த 11.02.2025 பிறந்துள்ளது. இந்நிலையில் குழந்தைக்கு வயிற்றில் கட்டி என்ற காரணத்தால் 07.05.2025 அன்று வைத்தியசாலையில் சேர்ப்பிக்கப்பட்டது. இந்நிலையில் 3 தடவைகள் குழந்தைக்கு சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்பட்டது. இருப்பினும் சிகிச்சை பலனின்றி 29ம் திகதி அன்றையதினம் குழந்தை உயிரிழந்துள்ளது.

குழந்தையின் சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். கிருமித்தொற்று ஏற்பட்டதால் மரணம் சம்பவித்துள்ளதாக உடற்கூற்று பரிசோதனைகளில் தெரியவந்துள்ளது.



# வவுனியாவில் அறுக்கப்பட்ட தனது மனைவியின் தலையுடன் பொலிஸ் நிலையத்தில் சரணடைந்த கணவர்

## உடலத்தினை தேடும் பொலிஸார்

(03-06-2025)

வவுனியாவில் தனது மனைவியின் கழுத்தை அறுத்து கையில் எடுத்துக்கொண்டு பொலிஸ் நிலையத்தில் சரணடைந்துள்ளார்.

அரச பாடசாலையில் ஆரம்பப்பிரிவு ஆசிரியையாக கடமையாற்றும் ரஜூட் சுவர்ணலதா (32) என்பவரே கொல்லப்பட்டுள்ளார். ஆசிரியையின் கணவரே கொலையை செய்துள்ளார்.

3ம் திகதி செவ்வாய்க்கிழமைன்று காலை புளியங்குளம் பொலிஸ் நிலையத்துக்கு தனது மனைவியின் தலையை எடுத்துக் கொண்டு சென்ற கணவன் மனைவியை கொலைசெய்து நயினாமடு காட்டுக்குள் வீசியுள்ளதாக தெரிவித்துள்ளார்.

கணவன் - மனைவிக்கிடையில் குடும்பத்தகராறு நிலவி வந்துள்ளதாகவும். இந்த விவகாரத்தை பொலிஸ் நிலையத்தில் தீர்த்துக்கொள்ளலாம் என கூறி மனைவியை அழைத்துச் சென்றுள்ளார். கொலையாளியான கணவர்.

நயினாமடு காட்டுப்பகுதியில் மனைவியின் கழுத்தை அறுத்து கொலை செய்த பின்னர் கழுத்தை வெட்டி பிளாஸ்டிக் பையில் வைத்து மோட்டார் சைக்கிள் டிக்கிக்குள் வைத்து புளியங்குளம் பொலிஸ் நிலையம் சென்றுள்ளார்.

தனது மனைவியை கொன்று நயினாமடு காட்டில் வீசியுள்ளதாக அவர் தெரிவித்ததையடுத்து பொலிசார் சடலத்தை மீட்கும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

இந்த செய்தியினால் தமிழர் பிரதேசம் அதிர்ச்சியினால் தவிப்பதாக எமது செய்தியாளர் அறிவித்துள்ளார்.

# கல்கமுவே சாந்தபோதி தேரரின் முறைப்பாட்டால் சிறையில் அடைக்கப்பட்டுள்ள தமிழ் விவசாயிகளை விடுவிக்கக் கோரி போராட்டம்

தொல்பொருள் தளத்தை சேதப்படுத்திய குற்றச்சாட்டில் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்ட பின்னர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள முல்லைத்தீவைச் சேர்ந்த இரண்டு தமிழ் விவசாயிகளை நிபந்தனையின்றி விடுவிக்கக் கோரி யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள் போராட்டம் நடத்தியுள்ளனர்.

மே 29 அன்று முல்லைத்தீவு நீதவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்ட சாமித்தம்பி ஏகாம்பரம் மற்றும் ஸ்ரீரத்தினம் கஜரூபன் ஆகிய இரு விவசாயிகளையும் ஜூன் 7 ஆம் திகதி வரை மேலும் விளக்கமறியலில் வைக்க நீதிபதி டி. பிரதீபன் உத்தரவிட்டார்.

ஜூன் 4 அன்றையதினம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முன் நடந்த போராட்டத்திற்கு தலைமை தாங்கிய யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் சங்கத் தலைவர் தயாபரன் லிகிர்தர், பொலிஸார் உட்பட பல அரசு நிறுவனங்களின் நடவடிக்கைகளை இனவாத செயற்பாடு என விமர்சித்தார்.

“இந்த கைதுகளையும் சட்டவிராதாமாகவும் இனவாதத்துடனும் செயற்படும் தொல்லியல் திணைக்களத்தையும் ஸ்ரீலங்கா பொலிஸ் மற்றும் வனவளத் திணைக்களத்தையும் வன்மையாக கண்டிப்பதோடு கைது செய்யப்பட்ட இரு அப்பாவி தமிழ் விவசாயிகளையும் எவ்வித நிபந்தனையுமின்றி விடுதலை செய்யுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.”

“வடக்கும் கிழக்கும் தமிழர் தாயகம்”, “விடுதலை செய் விடுதலை செய் விவசாயிகளை விடுதலை செய்” போன்ற கோசங்களை போராட்டக்காரர்கள் எழுப்பினர்.

தொல்பொருள் துறை அதிகாரிகள் மற்றும் வடக்கு மாகாண சங்கநாயக்க தேரர் கல்கமுவே சாந்தபோதி ஆகியோர் செய்த முறைப்பாட்டை அடுத்து, புனித பிரதேசத்தை சேதப்படுத்திய குற்றச்சாட்டில் மே 10 அன்று மூன்று தமிழ் விவசாயிகளை கைது செய்ய பொலிஸ் நடவடிக்கை எடுத்தது.

ஆரம்பத்தில் முல்லைத்தீவின் குருந்தூர்மலை பகுதிக்கு 78 ஏக்கர் பரப்பளவு சொந்தமானது என, மே 12, 1933 அன்று ஆங்கிலேயர்களால் வெளியிடப்பட்ட வர்த்தமானியை மேற்கோள் காட்டி தொல்பொருள் துறை அதிகாரிகள் அறிவித்ததாக அப்பகுதியின் தமிழ் மக்கள் குறிப்பிடுகின்றனர்.




அப்பகுதியில் நடத்தப்பட்ட ஆய்வின் பின்னர், தொல்பொருள் கலைப்பொருட்கள் இருப்பதாக அடையாளம் காணப்பட்டதாகக் கூறப்படும் மேலும் 229 ஏக்கர் நிலம், குருந்தூர்மலை தொல்பொருள் காப்பகத்திற்காக தொல்பொருள் துறையால் வரையறுக்கப்பட்டதாக அவர்கள் கூறுகின்றனர்.

முல்லைத்தீவு குருந்தூர்மலையில் உள்ள தன்னிமுறிப்பு குளத்தின் கீழ் விவசாயத்தில் ஈடுபடும் அப்பகுதி மக்கள், 229 ஏக்கர் நிலத்தில் அவர்களின் உறவினர்கள் 100 வருடங்களுக்கும் மேலாக விவசாயம் செய்து வரும் நெல் வயல்களும் அடங்குவதாக கூறுகின்றனர்.

மே 10 ஆம் திகதி, குருந்தூர்மலை அடிவாரத்தில், மூன்று தொழிலாளர்கள் உழவு இயந்திரத்தின் ஊடாக நிலத்தை தயார் செய்து கொண்டிருந்தபோது, தொல்பொருள் துறை அதிகாரிகள் மற்றும் வடக்கு மாகாண சங்கநாயக்க தேரரான கல்கமுவே சாந்தபோதி ஆகியோர் செய்த முறைப்பாட்டை தொடர்ந்து, பொலிஸார் மூன்று பேரைக் கைது செய்து நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தினர்.

மூவரில் பாடசாலை சிறுவனை விடுவிக்க பொலிஸாருக்கு உத்தரவிட்ட நீதிபதி டி. பிரதீபன், சந்தேகநபர்களான சாமித்தம்பி ஏகாம்பரம் மற்றும் ஸ்ரீரத்தினம் கஜரூபன் ஆகியோரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார்.

இலங்கை செய்திகள் Sri Lanka News

# மூடநம்பிக்கைகளும், பழக்கவழக்கங்களும் ஆரோக்கியமான ஒரு தமிழ் தேசிய சமூகத்தின் உருவாக்கத்தைத் தாமதமாக்குகின்றனவா?



தமிழ் சமூகத்தின் இயல்பு, அதன் பண்பாட்டு பாரம்பரியம், சமய பழக்கவழக்கங்கள், மற்றும் மூடநம்பிக்கைகள் ஆகியவை பல நூற்றாண்டுகளாக பரம்பரை வழியாக கடந்து வருகின்றன. ஆனால் இன்றைய காலக்கட்டத்தில், அறிவியல் உணர்வும் சமூக சிந்தனைகளும் முன்னேறிக் கொண்டிருக்கும்போது, இந்த பழக்கவழக்கங்கள் மற்றும் மூடநம்பிக்கைகள் ஓர் சமூகத்தின் வளர்ச்சிக்கு தடையாக அமைகின்றன. இந்த கட்டுரை, மூடநம்பிக்கைகள் மற்றும் பழக்கவழக்கங்களை விமர்சன ரீதியாக பகுப்பாய்வு செய்து, மேலும் ஒரு அறிவார்ந்த, விமர்சன சிந்தனை கொண்ட, தேசிய உணர்வு மிக்க தமிழ்ச் சமூகம் எவ்வாறு உருவாகலாம் என்பதை ஆராய்கிறது.

மூடநம்பிக்கைகள் என்பது ஆதாரமோ தர்க்கரீதியான விளக்கமோ இல்லாத பகுத்தறிவற்ற நம்பிக்கைகள் ஆகும். தமிழ்ச் சமூகத்தில், மந்திரவாதம் (பில்லி-சூனியம்), தெய்வ சாபம், கிரக தோஷங்கள் (சனி தோஷம்), பேய் ஏற்றம் (சாமியாட்டம்) போன்றவை வாழ்வியலின் ஒரு பகுதியாக பரவலாக ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. இந்த நம்பிக்கைகளின் தொடர்ச்சி என்பது கல்வியின்மை மட்டுமல்ல, அறிவியல் மற்றும் பகுத்தறிவு ஆய்வுகளை நம்பாத ஒரு மனப்பாங்கின் விளைவாகும்.


தாய்மார்களும் தந்தையர்களும் தங்கள் பிள்ளைகளுக்கு சிறு வயதில் முதலே ஒரு தீவிரமான மரபு மீதான உணர்வையும், அதற்குள் பதிக்கப்படும் மூடநம்பிக்கைகளையும் உள்ளடக்கிய பிராம்பிகக் கட்டமைப்பை உருவாக்குகிறார்கள். வீட்டில் ஏற்படும் ஒரு சாதாரண சூழ்நிலைக்கும் தெய்வத்தையும் சூனியத்தையும் காரணமாக்கும் எண்ணம் குழந்தைகளில் நிச்சயமாக பயத்தையும் அடக்கத்தையும் ஏற்படுத்துகிறது.

முறையான கல்வியில் முன்னேற்றங்கள் இருந்தபோதிலும், தமிழ்ச் சமூகம் பெரும்பாலும் இந்தப் பரம்பரை நம்பிக்கைகளை வலுப்படுத்துகிறது. கல்வியறிவு பெற்றவர்கள். ஆசிரியர்கள், பட்டதாரிகள், அரசு அதிகாரிகள் கூட சில நேரங்களில் இந்த மூடநம்பிக்கைகளைப் பாதுகாப்பதில் பெருமை கொள்கின்றனர். இதன் விளைவாக, அறிவியல் சிந்தனையும் தேசிய உணர்வும் வளர வேண்டிய இடத்தில் ஒரு பின்னடைவு ஏற்படுகிறது.

இன்றைய இளைஞர்கள் உலகளாவிய தகவல் பிணையம், அறிவியல் மற்றும் நவீன கல்வியை அணுகுகின்றனர். ஆனால் அவர்களது வீடுகளிலும் சமூக வட்டாரங்களிலும், பரம்பரை பழக்கவழக்கங்களை கேள்வி கேட்பதில் அவர்கள் தடுக்கப்படுகின்றனர். ஒரு இளைஞர் ஒரு பழைய நடைமுறையை சவால் செய்யும்போது, "உன் கனவில் பேய் வரும்" போன்ற அச்சுறுத்தல்களை எதிர்கொள்கிறார். இந்த மனோவியல் அழுத்தம் விமர்சன சிந்தனையை குறைத்து, அறிவு வளர்ச்சியை அடக்குகிறது.

மூடநம்பிக்கைகளை கேள்வி கேட்க அல்லது சீர்திருத்த முயற்சிக்கும் இளைஞர்கள் மற்றும் முற்போக்கு இயக்கங்கள் பெரும்பாலும் எதிர்ப்பை சந்திக்கின்றனர். அவர்கள் "பாரம்பரியத்தின் எதிரிகள்" அல்லது "மரியாதையில்லாதவர்கள்" என்று பட்டியலிடப்படுகின்றனர். இவ்வாறு சுதந்திர சிந்தனை அடக்கப்படும் சூழலில், மூடநம்பிக்கை செழிக்கிறது.

தேசிய விடுதலை என்பது ஒரு மக்களின் உரிமைகள், அடையாளம், மொழி மற்றும் பண்பாட்டு தன்னாட்சிக்கான போராட்டம். மூடநம்பிக்கை இந்தப் போராட்டத்தில் ஊடுருவும்போது, அது அறிவுசார் சுதந்திரம், தன்னுரிமை மற்றும் உத்தி திறனை பலவீனப்படுத்துகிறது. தேசிய சுதந்திரத்திற்காக போராடும் ஒரு சமூகம் அறிவியல் பகுத்தறிவையும் விமர்சன சிந்தனையையும் ஏற்றுக்கொள்ள வேண்டும். அப்போதுதான் விடுதலைப் போராட்டம் உண்மையில் பலனளிக்கும்.




### தமிழ் தேசிய இனத்தின் அடையாளக் கூறுகள்:

மொழி: தமிழ் உலகின் மிகப் பழமையான மொழிகளில் ஒன்று மட்டுமல்ல, தமிழ் மக்களின் ஆன்மா.
பண்பாடு: வீரம், இலக்கியம், சங்கப் பாரம்பரியம், கலை மற்றும் இசை ஆகியவற்றின் பெருமைமிக்க மரபு.
தாயக வேர்கள்: தமிழ்நாடு மற்றும் ஈழத்தில் மூதாதையர் நிலம் மற்றும் பண்பாட்டு தொடர்ச்சிக்கான உரிமை.
ஆன்மீக தன்னாட்சி: மூடநம்பிக்கைகளால் கட்டுப்படாத தனிப்பட்ட ஆன்மீக வெளிப்பாட்டின் சுதந்திரம்.

### தமிழ்ச் சமூகம் பின்பற்ற வேண்டியவை:

அறிவியல் பகுத்தறிவு மற்றும் விமர்சன சிந்தனை
சமூக நீதி மற்றும் சமத்துவம்
மொழி மற்றும் பண்பாட்டு உரிமைகளின் பாதுகாப்பு
கட்டாயமற்ற நம்பிக்கை மற்றும் ஆன்மீக சுதந்திரம்
விமர்சன சிந்தனை மற்றும் கல்வி வழி விழிப்புணர்வு

### தமிழ்ச் சமூகம் பின்பற்ற கூடாதவை:

பயம் அடிப்படையிலான நம்பிக்கை முறைகள்
ஜோதிடம், மந்திரவாதம் அல்லது சூனியத்தை நம்பியிருத்தல்
பெண்கள் அல்லது புறக்கணிக்கப்பட்ட குழுக்களை ஒடுக்கும் மூடநம்பிக்கைகள்
மனித கண்ணியத்தையோ அறிவுசார் சுதந்திரத்தையோ தடுக்கும் எந்தவொரு பாரம்பரியமும்

### தமிழ் தேசிய அடையாளத்தை பேணவும் வலுப்படுத்தவும் பின்வரும் நடவடிக்கைகள் முக்கியம்:

தமிழ் மொழி மற்றும் பண்பாட்டுக் கல்வியை முன்னுரிமையாக்குதல்
வரலாற்று, இலக்கிய மற்றும் கலை விழிப்புணர்வை ஊக்குவித்தல்
அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்தை அடிப்படையாகக் கொண்ட கல்விக் கொள்கைகளை உருவாக்குதல்
சமூக சீர்திருத்தம் மற்றும் அறிவுசார் சுதந்திரத்தை முன்னெடுத்தல்
பகுத்தறிவு தேசியவாதத்தை மையமாகக் கொண்ட கூட்டு உணர்வை உருவாக்குதல்

மூடநம்பிக்கைகள் என்பது கடந்தகாலத்தின் எச்சங்கள். ஆனால் அவற்றை நாம் களைந்து, அறிவையும் விமர்சன ஆய்வையும் ஏற்றுக்கொள்ளும்போதுதான் ஒரு உண்மையான விடுதலை சமூகமாக மாற முடியும். தமிழ் தேசிய சமூகம் தன் அடையாளத்தைப் பேணிக்கொண்டே ஒரு பகுத்தறிவு மற்றும் ஆரோக்கியமான சமூகத்தை உருவாக்க முடியும். இதற்காக, ஒவ்வொரு தனிமனிதனும் தான் பின்பற்றும் மற்றும் அடுத்த தலைமுறைக்கு அளிக்கும் பழக்கவழக்கங்களை மீண்டும் மதிப்பாய்வு செய்ய வேண்டும். உண்மையான விடுதலைக்கான பாதை அறிவின் வழியே, அறியாமையின் வழியல்ல.

- ஈழத்து நிலவன் - (04-06-2025)

# யாழ். மாவட்ட செயலகத்திற்கு அருகாமையில் உள்ள கால்வாய்கள் சுத்தம் செய்யப்பட்டன. எம் மக்களின் "நற்பழக்கத்திற்கு" ஒரு அடையாளம்




யாழ்ப்பாணம் மாவட்ட செயலகத்துக்கு அருகாமையில் உள்ள கால்வாய்கள் 4ம் திகதி புதன்கிழமை அன்றையதினம் சுத்தம் செய்யப்பட்டன.

யாழ்ப்பாணம் மாவட்ட பதில் அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபனின் வேண்டுகோளுக்கு இணங்க வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் ஊழியர்களால் இந்த சுத்தப்படுத்தல் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

குறித்த கால்வாயில் ஏராளமான பிளாஸ்டிக் போத்தல்கள், கழிவுப் பொருட்கள் என்பன காணப்பட்டதால் கழிவுநீர் ஓடுவதில் தடை ஏற்பட்டது. இந்நிலையில் அந்த கழிவுப் பொருட்கள் அகற்றப்பட்டன.

தண்ணீர் குடித்த பின்னர் வெற்றுப் போத்தில்களையோ, ஏனைய கழிவுப் பொருட்களையோ கால்வாயினுள் வீசுவதால் தண்ணீர் ஓடுவதில் சிக்கல் காணப்படுகிறது. இதனால் தண்ணீர் ஓடாமல் தேங்கி நிற்பதால் நுளம்பு பெருகி டெங்கு போன்ற அபாயகரமான நோய்கள் பரவும் அபாயம் காணப்படுகின்றது. எனவே மக்கள் இது குறித்து விழிப்புணர்வுடனும், பொறுப்புணர்வுடனும் செயற்பட வேண்டும் என யாழ்ப்பாணம் மாவட்ட பதில் அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன் கோரிக்கை விடுத்தார்.







# தேசிய சுற்றுச்சூழல் வாரத்தை முன்னிட்டு வேலணை பிரதேச சபையால் சிரமதான நடவடிக்கை!

தேசிய சுற்றுச்சூழல் வாரத்தை முன்னிட்டு வேலணை பிரதேச சபையின் பிரதேசத்தி ஆளுகைக்குட்பட்ட ஊர்காவற்றுறைக்கான பிரதான வீதியின் கரையோரப் பகுதி 4ம் திகதி அன்று புதன்கிழமை சிரமதானம் மூலம் துப்பரவு செய்யப்பட்டது.

வேலணை பிரதேச சபையின் ஏற்பாட்டில் இந்த சிரமதானம் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டது. இதன்போது பிளாஸ்டிக் பொருட்கள், குப்பைகள் குறித்த பகுதியிலிருந்து அகற்றப்பட்டது.

வேலணை பிரலதேச சபையின் செயலாளர், உத்தியோகத்தர்கள், மற்றும் பிரதேச மக்களின் பங்களிப்புடன் குறித்த சிரமதான பணி முன்னெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

உதயன் விருது UTHAYAN AWARD Uthayan International Awards 2025

# UTHAYAN INTERNATIONAL AWARDS FESTIVAL - 2025

# உதயன் சர்வதேச விருது விழா - 2025

19வது ஆண்டில்.......
கனடாவின் ஒன்றாரியோ மற்றும் கியுபெக் மாகாணங்களிலிருந்தும், அத்துடன் வெளிநாடுகளிலிருந்தும் வெவ்வேறு துறைகளில் சாதனை படைத்த வெற்றியாளர்கள் சிறப்பான முறையில் கௌரவிக்கப்படவுள்ளார்கள்.

*Music - Dance - Awards Presentation - Dinner*

இசை - நடனம்- விருதுவழங்கல் -இராப்போசன விருந்து



Date: Saturday. June 14th, 2025
Time: 6.00 PM

Venue: The Estate Banquet & Event Centre
430 Nugget Avenue
Scarborough, ON M1S 4A4

அனுமதிச்சீட்டுக்களுக்கு:
(416) 732-1608
அல்லது (647) 762-9512

*Congratulations*

## UTHAYAN INTERNATIONAL AWARDS FESTIVAL - 2025

**Congratulations on your Success!**
**Good Luck for your Next Journey.**



## Hon. Tim Hodgson

**Member of Parliament - Markham—Thornhill**

107-16 Esna Park Drive
Markham, Ontario
L3R 5X1

Telephone: (905) 479-1269

## Carefirst Family Health Team

Carefirst Family Health Team

**Accepting New Patients**
**புதிய நோயாளர்கள் ஏற்றுக் கொள்ளப்படுகின்றனர்**

- அனுபவமுள்ள தமிழ் பேசும் பெண் குடும்ப மருத்துவர் எங்களது ஸ்கார்பரோ கிளினிக்கில் இணைந்துள்ளார். (Scarborough Clinic)
- உங்களது சுகாதார சேவைகளைப்பூர்த்தி செய்ய கார்த்திருக்கிறார்.
- நீரழிவு இருப்பின் அது சம்பந்தமான கல்வித்திட்டமும் அவரால் ஒழுங்கு செய்து தரப்படும்.
- நாள்பட்ட நோய்க்கான கல்வியும் (chronic disease), மேலாண்மை திட்டங்களும் அவரால் வழங்கப்படும்.



அவர் விபரம்:

டாக்டர் அஞ்சலின் ராஜரத்தினம் (Scarborough Clinic)


டாக்டர். ராஜரத்தினம் அக்கறையும் அர்ப்பணிப்பும் கொண்ட குடும்ப மருத்துவர் ஆவர்.

**உங்கள் குடும்ப மருத்துவத்தேவை, மற்றும் டாக்டர் ராஜரத்தினத்தின் நோயாளியாக பதிவு செய்ய விரும்பினால், கீழே உள்ள QR குறியீட்டை ஸ்கேன் செய்யவும் அல்லது https://forms.office.com/r/upqD0q5TGL க்குச் சென்று படிவத்தை நிரபபவும் உங்கள் சுயவிவரத்தை உருவாக்க எங்களுக்கு உதவ, உங்கள் விபரங்களை பதிவு செய்யுங்கள்.**

Availability of New Family Doctor at Carefirst Family Health Team - Dr. Rajaratnam

**Clinic Location:**
**Carefirst One-Stop Multi-Services Centre**
**300 Silver Star Blvd., 2/F**
**Scarborough, ON M1V 0G2**
**Tel: (416)502-2029**
**www.carefirstontario.ca**

11/24








Toronto சிட்டி கவுன்சிலர்

## PAUL AINSLIE

WARD 24, SCARBOROUGH-GUILDWOOD

## HELP IS AVAILABLE

வட்டார மக்களின் தேவை கருதி பின்வரும் சேவைகள் எம்மால் கவனிக்கப்படுகின்றன.

குறைந்த கட்டனத்தில் வீட்டுவசதி
**விலங்கு சேவைகள்**
உயர்மாடி கட்டட சட்டங்கள்
**கட்டட அனுமதி பத்திரங்கள்**
பிள்ளை பராமரிப்பு சலுகை
**அவசர வீட்டு வசதிகள்**
தீயணைப்பு சேவைகள்
**கழிவுப் பொருட்கள் சேவை**
நூலகச் சேவை
**மாநகரத் தேர்தல்**
மாநகர அனுமதியும் சட்டங்களும்

**Ontario Works**
வாகனத் தரிப்பிடங்கள்
**பூங்காக்கள்**
காவல் துறை
**பொதுச் சுகாதாரம்**
வீதிகள்
**ஆதன வரிகள்**
பொதுப் போக்குவரத்து
**மீள் சுலட்சியும் பசுமை திட்டமும்**
மரங்கள்
**நீர் விநியோகம்**

**நியமன அலுவலகம்**
Scarborough Civic Centre
150 Borough Drive, 2nd Floor
Scarborough, ON M1P 4N7
Phone: 416-396-7222
Fax: 416-392-4006

**ரொரன்ரோ சிட்டி ஹால் அலுவலகம்**
100 Queen Street West,
2nd Floor - Suite C52
Toronto, ON M5H 2N2
Phone: 416-392-4008
Fax: 416-392-4006

councillor_ainslie@toronto.ca
Ward 24 Scarborough-Guildwood
@cllrainslie
www.paulainslie.com
@Ainslie_Ward24
Paul Ainslie (City of Toronto)

**www.paulainslie.com 416-396-7222**



## VILLAGE NISSAN

**தமிழ் பேசும் வாடிக்கையாளர்களுக்கு சேவையாற்றுவதில் நாம் பெருமையடைகிறோம்**

*DAA ROTATION



**25 SENTRA**
*S CVT* ULTRA-LOW
**$69** WEEKLY | **39** MOS. LEASE $2,695 Down
+$1,000 60th Anniversary Cash

*DAA ROTATION



**25 KICKS PLAY**
*S* ULTRA-LOW
**$69** WEEKLY | **39** MOS. LEASE $2,192 Down
+$1,000 60th Anniversary Cash

*DAA ROTATION




**25 ROGUE**
*S AWD*
**0.99%** | **30** MOS. LEASE
+$1,000 60th Anniversary Cash



**Sajanthan Vijayakumar**
SALES CONSULTANT
905.477.3337 647.631.9054
saj@villagenissan.com

VILLAGE NISSAN
25 South Unionville Ave,
Unionville, ON L3R 6B8
www.villagenissan.com



உ



கனடா மிஸிஸாகா பிரம்ரன்

# அருள்மிகு கற்பக விநாயகர் தேவஸ்தானம் பிறம்ரன் வருடாந்த கொடியேற்ற-மஹோற்சவப் பெருவிழா விஞ்ஞாபனம்-2025

குலம்தரும் செல்வம் தந்திடும் அடியார் படுதுயர் ஆயின எல்லாம்
நிலதரஞ்செய்யும் நீள் விசும்பருளும் அருளொடு பெரு நிலமளிக்கும்
வலம் தரும் மற்றும் தந்திடும் பெற்றதாயினும் ஆயின செய்யும்
நலம் தரும் சொல்லை நான் கண்டு கொண்டேன் நாராயணா என்னும் நாமம்.

சீர்மேவு மதி நதியுமரவும் சிறப்பும் சூழ்ந்த
பார்போற்றும் சிவனுமையின் மைந்தராகி
கார்மேவும் கனடாவின் களிறு நாயகனாகி
நேர்மேவு கற்பகத்து கணபதியே காப்பு.

அருவமும் உருவுமாகி அநாதியாய் பலவாய் ஒன்றாய்
பிரம்மமாய் நின்றசோதி பிளம்பதோர் மேனியாக
கருணைகூர் முகங்கள் ஆறும் கரங்கள் பன்னிரெண்டும் கொண்டே
ஒரு திரு முருகன் வந்தாங்கு உதித்தனன் உலகமுய்ய

## ஸ்ரீ கற்பகவிநாயகப் பெருமானின் அடியார்களே!

சகல செல்வங்களும் நிறைந்து விளங்கும் கனடா மிஸிஸாகா பகுதியில் பிரம்ரன் மாநகரில் எழுந்தருளியிருந்து தம்மை பக்தியுடன் வந்து வழிபடும் மெய்யடியார்களின் இன்னல்களைப் போக்கி நல்லருள் பாலித்து ரட்சிப்பவராகிய ஸ்ரீ கற்பகவிநாயகப் பெருமானின் பெருங்கருணையினால் அழகிய திருமணமண்டபம் மணிமண்டபம் கொடிஸ்தம்பத்துடன் கூடிய புதிய திருக்கோவில் நிர்மாணிக்கப்பட்டு மஹா கும்பாபிஷேகம் நிகழ்ந்தேறிய பின்னர் பதினேழாவது முறையாக நிகழும் மங்களகரமான விசுவாவசு வருஷம் வைகாசி மாதம் மூன்றாம் நாள் (ஆங்கிலம்16-05-2025) வெள்ளிக்கிழமை பகல் 11:30 மணிக்கு கொடியேற்று விழாவுடன் மஹோற்சவம் ஆரம்பமாகி வைகாசி மாதம் 26ம் நாள் ஆங்கிலம் 08-06-2025 ஞாயிற்றுக்கிழமை வைகாசி விசாகத் தினத்தில் தேர்த்திருவிழாவும் 09-06-2025 திங்கள்கிழமை தீர்த்தோற்சவம் கொடியிறக்கல் திருவிழா வரையில் வழமைபோல இருபத்தைந்து தினங்களுக்கு பகலும் இரவும் கொடிஸ்தம்ப பூஜை மஹாயாக பூஜை ஆகியவற்றுடன் வருடாந்தப் பெருவிழா மிகவும் சிறப்பாக நடைபெற ஸ்ரீ கற்பகவிநாயகர் நல்லருள் பாலித்துள்ளார். விரதகாரர்கள் உபயகாரர்கள் அனைவரும் கீழ்காணும் காலநேர அட்டவணைப்பிரகாரம் நிகழவிருக்கும் திருவிழாக்களை ஆசார நியமங்களுடன் தினமும் வந்து தரிசித்து கண்கண்ட தெய்வமாம் கற்பகவிநாயகரின் அருளால் வேண்டியவரங்களைக் குறையாது பெற்றுச் சகல செல்வயோகமிக்க பெருவாழ்வு வாழும் வண்ணம் அன்புடன் வேண்டுகிறோம். சுபம்

மஹோற்சவ சிவாச்சாரியார்:
சிவாகம பாலசூரியர், சிவாகமவித்வான்
சிவஸ்ரீ கோகுலநாத குருக்கள்
ஸ்ரீநாகபூசணி அம்மன் திருக்கோவில் U.K. லண்டன் ஸ்தாபகர்
மற்றும் பிரதம குருக்கள்

ஆலய குருமார்:
சிவஸ்ரீ விஸ்வநாத கைலசநாத குருக்கள் (பாண்டிச்சேரி, இந்தியா)
சிவஸ்ரீ சண்முக ஜனார்த்தன குருக்கள் (பாண்டிச்சேரி, இந்தியா)

கனடாவாழ் குருமார்கள் அனைவரையும் மஹோற்சவ விழாக்காலங்களில் வருகைதந்து சிறப்பிக்கும் வண்ணம் பணிவன்புடன் அழைக்கிறோம்.
முக்கிய குறிப்பு:
தேர்த்திருவிழாவன்று காவடி கற்பூரச்சட்டி, எடுக்க விரும்புவோர் தயவுசெய்து உங்கள் பெயர்களை முன்னரே பதிவு செய்து கொள்ளும்படி அன்புடன் வேண்டுகிறோம்.

15-05-2025 வியாழன் மாலை 5மணிக்கு கணபதி ஹோமம் தொடர்ந்து அனுக்ஞை கிராமசாந்தி வாஸ்துசாந்தி மிருத்சங்கிரஹணம் நடைபெறும்.

**கொடியேற்றத் திருவிழா காலை 11:30மணி தேர்த்திருவிழா காலை 11:30மணி தீர்த்தத் திருவிழா காலை 11:30 மணி**

**விழாக் கால நிகழ்வுகளின் நேர கால விபரங்கள்**

| | | | காலை உபயம் | மாலை உபயம் | திருவிழா அலங்காரங்கள் |
|---|---|---|---|---|---|
| 01 | 16-05-2025 | வெள்ளி | கொடியேற்ற விழா<br>திரு. கு.முத்துக்கிருஸ்ணன் குடும்பம் - சுழிபுரம் | திரு. பிரதீபன் சிவராஜா குடும்பம் | ஓங்கார வடிவம் |
| 02 | 17-05-2025 | சனி | திரு. சுகுனேந்திரன் வாசுகி குடும்பம்-புங்குடுதீவு<br>சிவநேசராசா காளிராசா குடும்பம்-மீசாலை | தம்பிஐயா-மனோன்மணி குடும்பம்<br>சிவனேசன் சுசீலா குடும்பம்<br>சந்திரகுமார் உதயலட்சுமி குடும்பம் | சூரியப்பிரபை |
| 03 | 18-05-2025 | ஞாயிறு | திரு. பாலகாந்தன் கனகசபை குடும்பம்<br>கரவெட்டி | திரு.அருட்பிரகாசம் ரெங்கநாதன் குடும்பம்<br>சுழிபுரம் | சந்திரப்பிரபை |
| 04 | 19-05-2025 | திங்கள் | திரு. தியாகராஜா அன்பழகன் குடும்பம்<br>கிளிநொச்சி | திரு. சிவஞானம், திரு. பரமேஸ்வரன், திரு.பூலோகசிங்கம்<br>திரு. செல்வரத்தினம் குடும்பம் -நயினாதீவு மக்கள் | நட்சத்திர வடிவம் |
| 05 | 20-05-2025 | செவ்வாய் | திரு. பாலச்சந்திரன் ரதிமாலா குடும்பம்<br>பிருந்தாவன உணவகம் | திரு. கதிர்காமநாதன் குடும்பம்<br>திரு. நாதன் குடும்பம் - சுழிபுரம் | திருத்தொங்கல் வடிவம் |
| 06 | 21-05-2025 | புதன் | சிவகுமார் தியாவி<br>திருச்சி | ஜெயராம் அபிராமி குடும்பம்<br>மட்டுவில் | கப்பல் திருவிழா |
| 07 | 22-05-2025 | வியாழன் | திரு. கஜதீபன் சுஜா குடும்பம்<br>தையிட்டி, காங்கேசன்துறை | பசுபதிப்பிள்ளை குமரசற்குணன்<br>குறிகட்டுவான் | சிவலிங்க வழிபாடு |
| 08 | 23-05-2025 | வெள்ளி | திரு. நடராசா பிரதீபன் நிஷா குடும்பம்<br>தச்சன்தோப்பு | திரு. இரத்தினவடிவேல் குடும்பம்<br>சுழிபுரம்- தும்பளை | நாக வாகனம் |
| 09 | 24-05-2025 | சனி | திரு. பொன்னையா கனகலிங்கம் குடும்பம்<br>அல்வாய் | திரு. தியாகராஜா பரமநாதன் குடும்பம்<br>தாவடி | மூக்ஷிக வாகனம் |
| 10 | 25-05-2025 | ஞாயிறு | திரு. தவராசா சிவசோதி குடும்பம்<br>அனலைதீவு | திரு. சந்திரபோஸ் பிருந்தா குடும்பம்<br>Plastform Countertops Ltd. | மஞ்சம் |
| 11 | 26-05-2025 | திங்கள் | திரு. சின்னத்தம்பி குலேந்திரன் குடும்பம்<br>கோப்பாய் | ஓர் அன்பர் | மயில் வாகனம் |
| 12 | 27-05-2025 | செவ்வாய் | திரு சிவகுரு பத்மநாதன் குடும்பம்<br>நுணாவில், சாவகச்சேரி | திரு. சிவலிங்கம் திருக்குமரன்,<br>தனுஷன், அனோயன், நிக்ஷன்<br>குடும்பம் - இணுவில் | கற்பகதரு வடிவம் |
| 13 | 28-05-2025 | புதன் | திரு. பரஞ்சோதி-ரஜனி குடும்பம்<br>(கனடா) | ஓர் அன்பர் | குதிரை வாகனம் |
| 14 | 29-05-2025 | வியாழன் | ஓர் அன்பர் | செந்தூரன் லாவன்யா குடும்பம்<br>மட்டக்களப்பு | மஞ்சள் அலங்காரம் |
| 15 | 30-05-2025 | வெள்ளி | Steve பாலசிங்கம் குடும்பம், மட்டுவில்<br>ONGO I LOGISTIC | திரு. நிரஞ்சன் நிரு குடும்பம்<br>பிரம்ரன் | கஜ அலங்காரம் |
| 16 | 31-05-2025 | சனி | ஓர் அன்பர் | திரு. இ. வேணுகோபாலன் குடும்பம்<br>புன்னாலைக்கட்டுவன் | கருட வாகனம் |
| 17 | 01-06-2025 | ஞாயிறு | திரு. குமாரசாமி பிரபாகரன் நளினி குடும்பம்<br>சங்கரத்தை, வட்டுக்கோட்டை | திரு. ரத்னபாலன் சோபா ராஜ் குடும்பம்<br>-மானிப்பாய் | பக்தி முக்தி பாபநாசம் |
| 18 | 02-06-2025 | திங்கள் | ஓர் அன்பர் (பிரம்ரன்) | திரு. ஜெய்கீதா குடும்பம்<br>கேரளா, இந்தியா | நர்த்தன வடிவம் |
| 19 | 03-06-2025 | செவ்வாய் | திரு. சந்திரமோகன்<br>சுகிர்தா குடும்பம்-துன்னாலை | திரு. நிரஞ்சன் அருணாசலம் குடும்பம்<br>Top Quality Plastic Ltd. | கைலாச வாகனம் |
| 20 | 04-06-2025 | புதன் | ஓர் அன்பர் | திரு. யோகி முருகேசு மஞ்சு குடும்பம்<br>அனலைதீவு | காமதேனு வாகனம் |
| 21 | 05-06-2025 | வியாழன் | ஓர் அன்பர் | திரு. பொன்னம்பலம் சர்வேஸவரன்<br>குடும்பம், சுழிபுரம் | மாம்பழத் திருவிழா |
| 22 | 06-06-2025 | வெள்ளி | காரைநகர் மக்கள் - வேட்டைத் திருவிழா | ஓர் அன்பர் | வேட்டைத் திருவிழா |
| 23 | 07-06-2025 | சனி | ஓர் அன்பர் | திரு சாம் குடும்பம்<br>சிங்கப்பூர் | சப்பறத் திருவிழா |
| 24 | 08-06-2025 | ஞாயிறு | தேர்த் திருவிழா DYNEVOR EXPRESS<br>அழகரெட்ணம் குமார் குடும்பம் கனடா | திரு முத்துக்குமார்<br>தயாவதி குடும்பம் | வைகாசி விசாக முருகன் விழா<br>தேரடி உற்சவம் |
| 25 | 09-06-2025 | திங்கள் | தீர்த்தத் திருவிழா -<br>திரு லெட்சுமன் குடும்பம் (சென்னை) | திரு. கிருபானந்தராஜா றமணி குடும்பம்<br>தொல்புரம் | கொடியிறக்கல் விழா<br>சண்டேஸ்வரர் விழா<br>ஆச்சார்ய உற்சவம் |
| 26 | 10-06-2025 | செவ்வாய் | கற்பக விநாயகர் ஆலய அந்தணர்கள் | | பிராயச்சித்தம் |
| 27 | 13-06-2025 | வெள்ளி | | லக்ஷி சுப்பர் மார்க்கட் | வைரவர் மடை |
| 28 | 14-06-2025 | சனி | திரு. திருவருள் கனகசபை குடும்பம் - | அனலைதீவு | பூங்காவனம் |


**முக்கிய குறிப்பு: ஆடிவேல் திருவிழா இருபத்தி நான்காவது தடவையாக ஆகஸ்ட் மாதம் 14, 15, 16ம் திகதிகளில் வெகு சிறப்பாக நடைபெற்று 17ந் திகதி ஞாயிற்றுக்கிழமை ஆடிவேல் இசைமாலையும் சிறப்பாக நடைபெறும்.**

**திருவிழாக்கால நிகழச்சிகள் நேரகால அட்டவணை**

காலை திருவிழா
6:30 மணி காலை பூஜை
7:30 மணி காலை சந்தி பூஜை
09:00 மணி ஸ்நபனகும்ப அபிஷேகம்
10:30 மணி உச்சிகால பூஜை- யாகபூஜை கொடிஸ்தம்ப பூஜை
11:30 மணி வசந்தமண்டப பூஜை சுவாமி வீதியுலா மஹாயாக தரிசனம்
01:00 விபூதி, பிரசாதம் வழங்கப்படும்

மாலை திருவிழா
05:00 மணி ஸ்நபன கும்ப அபிஷேகம்
06:30 மணி மூலஸ்தான பூஜை பஞ்சமுகார்சனை யாக பூஜை கொடிஸ்தம்ப பூஜை
07:30 சமய கலை நிகழ்ச்சிகள்
07:45 மணி வசந்தமண்டப பூஜை சுவாமி வீதியுலா மஹாயாக தரிசனம் பிரசாதம் வழங்கல்.
10:00 மணி அர்த்தஜாமப் பூஜை

தேவஸ்தான மங்கள இசை: கற்பக விநாயகர் தேவஸ்தான இசைக் கலைஞர்கள்
ஜெகநாதன் கோபாலகிருஷ்ணன் - முனிராஜ் முனிரெத்தினம்
அர்ஜுணன் கிருஷ்ணகுமார் - பழனிவேல் கோபாலகிருஷ்ணன்
விசேடமங்கள இசை: கனடா, இலங்கை, இந்தியா கலைஞர்கள்
புஷ்பமாலைகள், புஷ்ப அலங்காரங்கள்: M, குமார் Mark Florist
(விசேஷ திருவிழாத் தினங்களில் நிகழ்ச்சிகளின் காலநேர மாற்றம் அறிவிக்கப்படும்)




ARULMIGU KATPAGAVINAYAGAR HINDU TEMPLE BRAMPTON
200 Advance Blvd, Unit 1, Brampton, (Dixie & Advance Blvd) L6T 4V4
Tel: 905-458-9701 / 905-458-0623 / 416-471-0255 Fax: 905-458-0326
www.srikatpagavinayagar.ca

இங்ஙனம்
என்றும் இறைபணியில் நிற்கும்
கணகுக சிவத்தொண்டர்,
திரு. இரா. விஜயநாதன்
(தேவஸ்தான தர்மகர்த்தா)

VIVEKA


Ontario - வில் அரசு அங்கீகாரம் பெற்ற
KANAGAAMBIKAI
Pawn Brokers
30
வருட சேவைகள்
வாடிக்கையாளர்களின் வேண்டுகோளுக்கு
இணங்க புதிய கிளை உதயம்!
கனகாம்பிகை
உங்கள் பணத்தேவைகளுக்கு குறைந்த
வட்டி வீதத்தில் தங்க நகை அடவு
நம்பிக்கை, நாணயம், உத்தரவாதம், திறமையுடன் கூடிய
ஒரே கூரையின் கீழ்
உங்கள் தங்கத்திற்கு பணம் வாங்க கண்கம்பிகைக்கு வாங்க...
Pawn Bank Inc.™
Your Satisfaction is Our Success
(Brimley & Eglinton)
2613, Eglinton Ave East,
Scarborough, ON M1K 2S2
416 269 7198
(Finch & MCCowan)
1571 Sandhurst Circle
Woodside Square Mall #159D,
Scarborough - M1V1V2
416 754 7198

# இருபத்தொரு வருடங்களுக்கு முன்னர் சுட்டுக் கொல்லப்பட்ட மூத்த தமிழ் ஊடகவியலாளர் நடேசனின் கொலைக்கு அரசாங்கம் நீதி வழங்குமா?

இலங்கை செய்திகள் Sri Lanka News

## கடந்த ராஜபக்ச ஆட்சிக் காலத்தில் கிடைக்காத, ரணில் ஆட்சிக் காலத்தில் கிடைக்காத, மைத்திரி ஆட்சிக் காலத்தில் கிடைக்காத நீதி அனுரவின் காலத்திலாவது கிடைக்க வேண்டுமென மக்கள் நினைக்கின்றார்கள்



இருபத்தொரு வருடங்களுக்கு முன்னர் சுட்டுக் கொல்லப்பட்ட மூத்த தமிழ் ஊடகவியலாளருக்கு தற்போதைய ஆட்சியில் நீதி கிடைக்கும் என பொதுமக்கள் நம்புவதாக தமிழ் மக்கள் பிரதிநிதி ஒருவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

"கடந்த ராஜபக்ச ஆட்சிக் காலத்தில் கிடைக்காத நீதி, ரணில் ஆட்சிக் காலத்தில் கிடைக்காத நீதி, மைத்திரி ஆட்சிக் காலத்தில் கிடைக்காத நீதி அனுர அரசாங்கத்தின் காலத்திலாவது கிடைக்க வேண்டுமென மக்கள் நினைக்கின்றார்கள். கைது செய்யப்படுகின்றவர்கள் முறையான விசாரணைக்கு உட்படுத்தி மனித குலத்திற்கு எதிராக அவர்களால் இழைக்கப்பட்ட குற்றங்களுக்கும், அவர்களால் கொல்லப்பட்ட ஊடகவியலாளர்கள் பற்றிய உண்மையை, குறிப்பாக நடேசனின் படுகொலை பற்றிய உண்மைகளை வெளிச்சத்திற்கு கொண்டுவர வேண்டும். அதுதான் நாங்கள் விடுக்கும வேண்டுகோள். இந்த பகிரங்க வேண்டுகோள் தொடர்பில் அவதானம் செலுத்தி குற்றவாளியை இந்த சமூகத்திற்கு வெளிப்படுத்த வேண்டும். அதன் மூலமாக ஊடகவியலாளர்களின் சுதந்திரத்தை ஊடக தர்மத்தை பாதுகாக்கின்றீர்கள் என்ற விடயத்தை உறுதிப்படுத்த வேண்டுமென கோருகின்றேன்."

சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க ஆட்சிக் காலத்தில் அரசாங்க இராணுவ சோதனைச் சாவடிக்கு அருகில் சுட்டுக் கொல்லப்பட்ட மூத்த ஊடகவியலாளர் ஐயாத்துரை நடேசனின் 21ஆவது ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு மட்டக்களப்பில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தின் போது இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் ஞானமுத்து ஸ்ரீநேசன் இந்தக் கருத்தைத் தெரிவித்தார்.

மே 31, 2004 அன்று மட்டக்களப்பு நகரில் அரச ஆதரவு பெற்ற துணை இராணுவப் படையான கருணா குழுவைச் சேர்ந்தவர்கள் என நம்பப்படும் துப்பாக்கிதாரிகளால் கொல்லப்பட்ட, இதுவரை நீதி கிடைக்கப்பெறாத, மூத்த ஊடகவியலாளர் ஐயாத்துரை நடேசனை நினைவு கூற தெற்கிலிருந்து பல ஊடகவியலாளர்கள் மே 31 அன்று மட்டக்களப்பிற்குச் சென்றிருந்தனர்.

தெற்கின் தமிழ் ஊடக ஒன்றியத்தின் (TMA) முன்னாள் பிரதித் தலைவருமான நடேசனை நினைவு கூர தெற்கில் உள்ள எந்தவொரு ஊடக அமைப்பும் அல்லது நிறுவனமும் எந்த நடவடிக்கையும் எடுத்ததா என்பது தெரியவில்லை.

மட்டக்களப்பில் உள்ள காந்தி பூங்காவின் முன்பாக அமைக்கப்பட்டுள்ள நினைவுச்சின்னத்தின் முன் ஐயாத்துரை நடேசனின் புகைப்படத்திற்கு மாலை அணிவித்து அஞ்சலி செலுத்திய, மட்டக்களப்பு மாவட்ட தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம், மட்டு. ஊடக அமையம், கிழக்கு மாகாண ஊடகவியலாளர் சங்கம் மற்றும் தெற்கைச் சேர்ந்த பல ஊடகவியலாளர்கள், இலங்கையில் கொல்லப்பட்ட அனைத்து ஊடகவியலாளர்களுக்கு நீதி கோரி ஆர்ப்பாட்டத்தையும் நடத்தினர்.





மே 31, 2004

"நெல்லை நடேசன்" என பிரபலமாக அழைக்கப்படும் ஊடகவியலாளர் ஐயாத்துரை நடேசன், மே 31, 2004 அன்று காலை மட்டக்களப்பில் உள்ள தனது அலுவலகத்திற்குச் செல்லும் வழியில் சுட்டுக் கொல்லப்பட்டார்.

சர்வதேச மனித உரிமைகள் அமைப்பான மனித உரிமைகள் கண்காணிப்பகம் (HRW), பின்னர் மஹிந்த ராஜபக்ச அரசாங்கத்தில் அமைச்சர் பதவியை வகித்த விநாயகமூர்த்தி முரளிதரன் தலைமையிலான கருணா குழுவினரை இந்தக் கொலைக்குக் குற்றம் சாட்டியது.

தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத்தின் பிரதித் தலைவர் நடேசனின் கொலையைத் தொடர்ந்து, கிழக்கு மாகாணத்தில் உள்ள பல தமிழ் ஊடகவியலாளர்கள் இப்பகுதியை விட்டு வெளியேறவோ அல்லது தங்கள் உயிருக்காக வெளிநாடு செல்லவோ கட்டாயப்படுத்தப்பட்டனர்.

மட்டக்களப்பில் சுட்டுக் கொல்லப்பட்ட நடேசனின் கொலை வழக்கை மீண்டும் விசாரிக்குமாறு மட்டக்களப்பு மாவட்ட தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம், மட்டு. ஊடக அமையம், கிழக்கு மாகாண ஊடகவியலாளர் சங்கம் ஆகியன முந்தைய அரசாங்கங்களுக்கு தொடர்ந்து அழுத்தம் கொடுத்து வந்தன.

தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் ஆட்சிக்கு வந்த உடனேயே, லசந்த விக்ரமதுங்க, தர்மரத்னம் சிவராம் மற்றும் பிரகீத் எக்னாலிகொட உள்ளிட்ட சர்வதேச கவனத்தை ஈர்த்த ஊடகவியலாளர்களுடன் தொடர்புடைய பல வழக்குகளை மீண்டும் விசாரிப்பதாகக் கூறியிருந்தாலும், அண்மைய காலங்களில் அதன் முன்னேற்றம் தொடர்பில் வெளிப்படுத்தப்பட்டதா என்பது தெரியவில்லை.

# யாழ்ப்பாணம் – தாளையடியில் அரச காணியை தனியாருக்காக சுவீகரிக்கும் முயற்சி பிரதேச மக்களால் முறியடிப்பு

தாளையடியில் அரச காணியை தனியாருக்கு சுவீகரிக்கும் முயற்சி பிரதேச மக்களால் முறியடிப்பு

யாழ் வடமராட்சி கிழக்கு தாளையடி பகுதியில் அரச காணியை தனி நபருக்கு சுபீகரிக்கும் முயற்சி இன்று (5)அப்பகுதி மக்களால் முறியடிக்கப்பட்டது





இது குறித்து தெரிய வருவதாவது, **Sk farm** எனப்படும் தனியார் நிறுவனத்திற்கு தாளையடி பகுதியில் அரச காணியினை அளக்க முற்பட்ட வேளை ஒரு சில மாதங்களுக்கு முன்பு அப்பகுதி மக்களால் கடும் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டு தடுத்து நிறுத்தப்பட்டது

இதன்போது குறித்த தனியார் நிறுவன அதிகாரிகள் கிராம அலுவலர்,சமூக மட்ட அமைப்புகளோடு மீண்டும் கலந்துரையாடி எமது திட்டத்தின் பயன்களை எடுத்துக் கூறி கிராம மக்களின் அனுமதியுடன் குறித்த செயற்றிட்டத்தை செயற்படுத்துவதாக கூறிச் சென்றார்கள்.

இன்றுவரை கலந்துரையாடலை மேற்கொள்ளாத நிலையில் குறித்த தனியார் நிறுவன அதிகாரிகள் நில அளவைத் திணைக்களத்தினருடன் மிகவும் இரகசியமாக அரச காணியை அளப்பதற்காக தாளை-யடி பிரதேசத்திற்கு வருகை தந்தனர்.

இதனை அறிந்த கிராம மக்கள் கிராம மட்ட அமைப்புகளின் உதவியுடன் அப்பகுதிக்கு சென்று கடும் எதிர்ப்பு தெரிவித்தனர்

இதன் போது நில அளவைத் திணைக் களத்தினர் தாங்கள் போலீசாரின் உதவியுடன் வந்து மீண்டும் இந்த இடத்தை அளவீடு செய்வதாக கூறி அவ்விடத்தை விட்டுச் சென்றார்கள்

இதன் போது ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த அப்பகுதி மக்கள்

சில மாதங்களுக்கு முன்பு இந்த முயற்சி எமது பிரதேசத்தில் எடுக்கப்பட்ட போது அதனை நாங்கள் முற்றாக தடுத்து நிறுத்தினோம்

அப்போது நாங்கள் அவர்களுக்கு கூறிய விடயம் என்னவென்று சொன்னால் நாங்கள் சமூகமட்ட அமைப்புகள் மற்றும் கிராம அலுவலர் உடன் கலந்துரையாடி இந்தத் திட்டத்தால் மக்களுக்கு ஏதாவது நன்மை கிடைத்தால் நாங்கள் இந்த திட்டத்திற்கு ஆதரவளிப்பதாக தெரிவித்திருந்தோம்

இதற்கான கலந்துரையாடலை அவர்கள் ஒழுங்கு செய்வார்கள் என்று நாம் எல்லோரும் எதிர்பார்த்துக் கொண்டிருந்த நேரத்தில் இன்று முற்பகல் 10:30 மணி அளவில் நில அளவை திணைக் களத்தினருடன் குறித்த தனியார் நிறுவன அதிகாரிகள் எமது பிரதேசத்தின் நிலப்பரப்பை அளவீடு செய்வதற்காக வருகை தந்தார்கள்

அங்கு வந்திருந்த நில அளவை திணைக்களத்தினர் அதிகாரிகளுடைய அனுமதியுடன் தான் அங்கு வந்திருப்பதாக தெரிவித்திருந்தார்கள் ஆனால் இது சில மாதங்களுக்கு முன்பு நடைபெற்ற போது இதற்கு நாங்கள் ஒரு கலந்துரையாடல் இல்லாமல் அனுமதி வழங்க மாட்டோம் என்று தெரிவித்திருந்தோம்

எமது பிரதேசத்தில் பல குடும்பங்கள் புதிதாக திருமணம் முடித்து காணி அற்று இருக்கிறார்கள் அவர்களுக்கு காணி பகிர்ந்து கொடுப்பதற்கான எந்தவித நடவடிக்கையும் பிரதேச செயலகத்தால் எடுக்கப்படவில்லை

எமது பிரதேசத்தில் இருக்கின்ற அரச காணிகள், வனஜுவராசிகள் திணைக்கள காணிகள் தொடர்பான வரைபடத்தை எங்களுக்கு தருமாறு பிரதேச செயலரிடம் கூறி இருந்தோம் ஆனால் அவர் இன்று வரை தரவில்லை

நில அளவை திணைக்களத்தினருக்கம் பிரதேச செயலருக்கும் ஒரு கடிதம் கையளித்திருக்கிறோம் குறித்த திட்டத்தினை நாங்கள் எமது மக்கள் முற்றாக நிராகரிக்கிறோம்

எமது நாட்டினுடைய பொருளாதாரத்திற்கும் வளர்ச்சிக்கும் நாங்கள் எதிரானவர்கள் அல்ல அவர்கள் கூறியது போன்று எங்களது மக்களுடன் கலந்துரையாடாமல் இதனை அளவீடு செய்ய முயற்சித்ததால் நாங்கள் இந்த திட்டத்திற்கு முற்றாக தடை விதிக்கிறோம் என அப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

இலங்கை செய்திகள் Sri Lanka News

மன்னார் நிருபர்

# மன்னாரில் ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியின் உள்ளூராட்சி உறுப்பினர்கள் சத்தியப்பிரமாணம்



## தமிழ் தேசிய மக்கள் முன்னணி மற்றும் நண்டு சின்னத்திலான சுயேட்சை குழுவும் ஆதரவு

- எஸ்.ஆர்.லெம்பேட் (03-06-2025)

ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியின் சார்பில் மன்னார் மாவட்டத்தில் உள்ள உள்ளூராட்சி மன்றங்களுக்கு தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களின் சத்தியப்பிரமாண நிகழ்வு மன்னாரில் இடம்பெற்றது.

தமிழீழ விடுதலை இயக்கம் ரெலோ கட்சியின் மன்னார் மாவட்ட தலைமை அலுவலகத்தில் குறித்த நிகழ்வு இடம்பெற்றது.

இதன்போது மன்னார் மாவட்டத்தில் உள்ள ஐந்து உள்ளூராட்சி மன்றங்களிலும் ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியில் போட்டியிட்டு வெற்றி பெற்றவர்கள் மற்றும் விகிதாசார உறுப்பினர்கள் கலந்து கொண்டு தமது சத்திய பிரமாணத்தை மேற்கொண்டனர்.

தமிழீழ விடுதலை இயக்கம் ரெலோ கட்சியின் தலைவரும் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன் தலைமையில் குறித்த நிகழ்வு இடம்பெற்றது.

இதன் போது தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் உறுப்பினர்கள் மற்றும் நானாட்டான் பிரதேச சபையின் சுயேட்சைக்குழு சார்பாக போட்டியிட்ட ஜி.எம்.சீலன் தலைமையிலான குழுவினரும் ஆதரவு தெரிவித்து வருகை தந்ததோடு அவர்களது உறுப்பினர்களும் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டனர்.

சத்தியபிரமாண நிகழ்வில் ஜனநாயக தமிழ் தேசிய கூட்டமைப்பின் மன்னார் மாவட்ட இணைப்பாளர் எஸ்.ஆர் குமரேஸ், புளொட் அமைப்பின் மாவட்ட இணைப்பாளர் ஜேம்ஸ், தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் மாவட்ட அமைப்பாளர் ஜோன்சன், சுயேட்சை குழுவின் தலைவர் ஜி.எம்.சீலன், ஆகியோர் கலந்து கொண்டதோடு, அவர்கள் முன்னிலையில் உறுப்பினர்கள் சத்தியப்பிரமாணம் செய்தனர்.



இலங்கை செய்திகள் Sri Lanka News

பு. கஜிந்தன்

# யாழ்ப்பாணத்தின் பிரபல்யமான ஆலயம் ஒன்றில் 460,000 ரூபாவுக்கு விற்பனையான மாம்பழம்!



யாழ்ப்பாணத்தில் பிரசித்தி பெற்ற முருகன் ஆலயமொன்றில் நடைபெற்ற மாம்பழத் திருவிழாவில் மாம்பழம் ஒன்று பல இலட்சங்களில் ஏலம் போயுள்ளது.

யாழ்ப்பாணம் வண்ணார் பண்ணை தாமரைவீதியில் அமைந்துள்ள வண்ணை கோட்டையம்பதி சிறிசிவசுப்பிரமணியர் ஆலயத்திலே இந்த ஏலம் இடம்பெற்றுள்ளது.

குறித்த ஆலயத்தில் 15 நாட்கள் திருவிழா நடைபெற்று வருகிற நிலையில் எட்டாம் நாளான 3ம் திகதி செவ்வாய்க்கிழமையன்று மாம்பழத் திருவிழா வெகு சிறப்பாக நடைபெற்றது.



இந்த மாம்பழத் திருவிழா நிறைவடைந்த பின்னராக முருகனின் மாம்பழம் ஆலய நிர்வாக சபையினரால் ஏலம் விடப்பட்டிருந்தது.

இதன் போது உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் இருந்தும் ஆலயத்திற்கு வந்திருந்த அடியவர்கள்குறித்த மாம்பழத்தை வாங்கும் நோக்கில் ஏலத்தில் ஈடுபட்டனர்.

இதனால் மாம்பழத்தின் விலையும் உயர்ந்து கொண்டு சென்றது. இவ்வாறு பல இலட்சங்களையும் தாண்டி மாம்பழம் ஏலம் எடுக்கப்பட்டது.

இதன்போது பிரான்ஸ் நாட்டில் இருந்து வந்திருந்த அ.அகிலன் எனும் அடியவர் நான்கு இலட்சத்து அறுபதினாயிரம் (4 60 000) ரூபாவிற்கு இந்த மாம்பழத்தை ஏலத்தில் எடுத்திருந்தார்.

இதன் போது ஆலய நிர்வாக சபையினரால் ஏனைய சில பொருட்களும் ஏலத்தில் விடப்பட்டிருந்த நிலையில் அதனையும் அடியவர்கள் ஏலத்தில் வாங்கியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

மேலும் குறித்த ஆலயத்தின் 15 நாள் திருவிழாவின் தொடராக எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை தேர்த் திருவிழாவும் திங்கட்கிழமை தீர்த்த திருவிழாவும் மறுநாள் செவ்வாய்க்கிழமை பூங்காவனத் திருவிழாவும் புதன்கிழமை வைரவர் உற்சவமும் இடம்பெற்று திருவிழா நிறைவடைய உள்ளது.

# பொன் சிவகுமாரின் 51நினைவு தினத்தில் கட்சி பேதமின்றி அனைவரும் பங்கு கொள்ள ஏற்பாட்டுக் குழு அழைப்பு!



தமிழின விடுதலைப் போராட்டத்தில் உயிர் நீத்த முதல் தியாகி பொன் சிவகுமாரின் 51 நினைவுதினம் 5ம் திகதி வியாழக்கிழமை யாழ். உரும்பிராய் சந்திப் பகுதியில் அமைந்துள்ள பொன் சிவகுமாரின் நினைவு தூபியில் காலை 9மணிக்கு ஆரம்பமாக உள்ளதாக ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

அவர்கள் மேலும் தெரிவிக்கையில், பொன் சிவகுமார் தமிழ் இனம் தலை நிமிர்ந்து வாழ வேண்டும் என்பதற்காக தனது இன்னுயிரை நீத்த ஒரு மாவீரன்.

அவரது தியாகம் தொடர்ச்சியாக எமது சந்ததிக்கு கடத்திச் செல்லப்பட வேண்டும் என்பதற்காக ஒவ்வொரு வருடமும் நினைவு தினத்தை அனுஷ்டித்து வருகிறோம்.

வியாழக்கிழமை 6ம் திகதி இடம்பெறவுள்ள 51 ஆவது நினைவு தினத்துக்கு வழமை போன்று கட்சி பேதங்களைக் கடந்து அனைவரும் பங்கு கொள்வதுடன் பொதுமக்களும் நினைவு தினத்தில் பங்கு கொள்ள வேண்டும் என அழைப்பு விடுகிறோம் என தெரிவிக்கப்பட்டது.

குறித்த ஊடக சந்திப்பில் பொன் சிவகுமாரனின் நண்பனும் சக போராளிமான மதி மற்றும் நினைவேந்தல் குழு உறுப்பினர் ஈ.வி.செந்தூரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# வெளி மாகாணத்தில் சேவையாற்றிய ஆசிரியர்களை வெளி மாவட்டம் அனுப்பாதீர்கள் – ஆசிரியர் சங்கம் கவனயீர்பு போராட்டம்!




ஆசிரியர்களின் பல்வேறு கோரிக்கைகளை முன் வைத்து 4ம் திகதி அன்றையதினம் புதன்கிழமை தாய் மொழி ஆசிரியர் சங்கம் வடமாகாண ஆளுநர் தலைமை செயலகத்துக்கு முன்னால் கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

போராட்டம் யாழ். மாவட்ட செயலகத்துக்கு முன்னால் ஆரம்பித்து ஆளுநர் செயலகம் வரை பேரணியாக சென்ற நிலையில் பொலிசார் ஆளுநர் செயலகத்துக்குள் அனுமதிக்காமல் வாசலில் தடுத்து நிறுத்தினர்.

பின்னர் போராட்டத்தில் கலந்து கொண்ட சிலரை மட்டும் உள்ளே சென்று ஆளுநருடன் பேசலாம் என தெரிவித்த நிலையில் மட்டுப்படுத்தப்பட்ட ஆசிரியர்கள் ஆளுநரை சந்திப்பதற்காக உள்ளே அனுமதிக்கப்பட்டனர்.

வடமாகாண ஆளுநர் வேதநாயகனிடம் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து மஜகர் ஒன்றை கையளித்த பின் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் இவ்வாறு தெரிவித்தனர்.

யாழில் இருந்து வெளி மாகாணங்களுக்கு ஆசிரியர் சேவையை செய்தவர்கள் மீண்டும் வெளி மாவட்டங்களுக்கு பணி இட மாற்றம் வழங்கப்படுகிறது.

ஆசிரியர்கள் மருத்துவ காரணங்களுக்காக தமது வெளி மாவட்ட இடமாற்றங்களை இரத்து செய்யுமாறு மேன் முறையீடு வழங்கப்பட்டுள்ள நிலையில் அதனை கருணை அடிப்படையில் பரிசீலனை செய்ய வேண்டும்.

வெளிமாவட்டம் செல்லாது பல ஆசிரியர்கள் தொடர்ந்தும் யாழ் மாவட்டத்தில் சேவையாற்றி வரும் நிலையில் பாரபட்ச இன்றி இடமாட்டங்களை வழங்க வேண்டும் போன்ற கோரிக்கைகளை ஆளுநரிடம் முன் வைத்திருக்கிறோம்.



குறித் விடயங்கள் தொடர்பில் சாதகமாக பரிசீலனை செய்து விரைவில் அறிவிப்பதாக ஆளுநர் தெரிவித்ததாக தெரிவித்தனர்.




# இலங்கைப் பாராளுமன்றத்தினுள் "சர்வாதிகாரம்"

**"முன்னர் ஆட்சி புரிந்த அரசுகள் பாராளுமன்றத்தில் எதிர்கட்சிகளுக்குள்ள உரிமைகளை அங்கீகரித்தன. எதிர்க்கட்சி தலைவர்களுக்கான கௌரவத்தை வழங்கின. எதிர்க்கட்சிகளின் கருத்துக்களை செவிமடுத்தன. பேச்சு, கருத்து சுதந்திரம் கொடுத்தன. சிறப்புரிமைகளை அங்கீகரித்தன. ஆனால் தற்போதைய அநுரகுமார அரசு பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சிகளுக்கு எதிராக சர்வாதிகாரத்தையும் அடக்கியாளுகைகளையும் முன்னெடுத்து தமது இயலாமைகளையும் ஆட்சியின் அவலட்சணத்தையும் மூடி மறைக்க முற்படுகின்றது."**

------------------------------------------------------------ - கே. பாலா ----

கட்சிக்குள் பிளவுகள், உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலில் பின்னடைவு, மக்கள் ஆதரவில் வீழ்ச்சி, கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்ற இயலாமை, எதிர்க்கட்சிகளின் பிரசாரங்கள், மீண்டெழும் ராஜபக்ஸக்கள், ஊடகங்களின் கடும் விமர்சனம். வரவுள்ள மாகாணசபைகளுக்கான தேர்தல் என பலமுனை பிரச்சினைகளிலும் சிக்கல்களிலும், நெருக்கடிகளிலும் சிக்கித்தவிக்கும் அநுரகுமார திசாநாயக்க தலைமையிலான ஜே.வி.பி.-தேசியமக்கள் சக்தி அரசு இவற்றை எதிர்கொண்டு சமாளிக்க தற்போது "சர்வாதிகாரம்" என்ற ஆயுதத்தைக் கையில் எடுத்துள்ளது.

மாற்றம், மக்களாட்சி, ஜனநாயகம், இன, மத, நல்லிணக்கம், சுதந்திரம் என்ற கோஷங்களோடு மூன்றில் இரண்டு பெரும்பான்மையோடு ஆட்சிபீடம் ஏறியவர்கள், சில மாதங்களுக்குள்ளேயே ஆட்டம் காணத் தொடங்கியதனால் நிறைவேற்றதிகாரம், சர்வாதிகாரம், இன, மத நல்லிணக்க விரோதம் என்ற ஜனநாயக ஆட்சிக்கு முரணான திசையில் பயணிக்கத் தொடங்கியுள்ளனர். முன்னைய அரசுகளும் இந்த வழியில் பயணித்தாலும் கூட நாட்டின் உயர்பீடமான பாராளுமன்றத்தில் சர்வாதிகாரத்தை பயன்படுத்த வில்லை. ஆனால் மாற்றம் என வந்தவர்கள் அதிலும் மாற்றம் செய்து நாட்டின் உயர்பீடமான பாராளுமன்றத்திலும் சர்வாதிகாரத்தை பயன்படுத்தத் தொடங்கியுள்ளனர்.

முன்னர் ஆட்சி புரிந்த அரசுகள் பாராளுமன்றத்தில் எதிர்கட்சிகளுக்குள்ள உரிமைகளை அங்கீகரித்தன. எதிர்க்கட்சிகளின் தலைவர்களுக்கான கௌரவத்தை வழங்கின. எதிர்க்கட்சிகளின் கருத்துக்களை செவிமடுத்தன. பேச்சு சுதந்திரம், கருத்து சுதந்திரம் கொடுத்தன. சிறப்புரிமைகளை அங்கீகரித்தன. ஆனால் தற்போதைய அநுரகுமார அரசு பாராளுமன்றத்தில் கூட எதிர்க்கட்சிகளுக்கு எதிராக சர்வாதிகாரத்தையும் அடாவடித்தனங்களையும் அடக்கியாளுகைகளையும் முன்னெடுத்து தமது இயலாமைகளையும் ஆட்சியின் அவலட்சணத்தையும் அமைச்சர்கள், எம்.பி.க்களின் கோமாளித்தனங்களையும் மூடி மறைக்க முற்படுகின்றது.

அதிலும் நாட்டின் பிரதமராக ஆசைப்பட்டு கட்சிக்குள்ளேயே காய்களை நகர்த்தி தற்போதைய பிரதமருக்கு குடைச்சல் கொடுத்து வரும் சபை முதல்வராக உள்ள அமைச்சர் பிமல் ரத்னாயக்க சபை சம்பிரதாயங்களையும் நிலையியல் கட்டளைகளையும் எதிர்க்கட்சிகளுக்குள்ள சிறப்புரிமைகளையும் ஒரு பொருட்டாகவே மதிக்காது மிகவும் மோசமான முறையில் தான்தோன்றித்தனமாகவும் சர்வாதிகாரத்தனமாகவும் நடந்து கொள்வது இலங்கை பாராளுமன்றத்தில் முன்னெப்போதும் சபை முதல்வர்கள் நடந்து கொள்ளாத தலைக்கன நடத்தைகளாகவே உள்ளன. ஒரு தெரு சண்டியர் போலவே அவரின் நடவடிக்கைகள் சபையில் காணப்படுகின்றன.

தாம் எதிர்க்கட்சியில் இருந்த போது எதிர்க்கட்சிகளின் உரிமை என அரசுடன் வாதாடிய, போராடிய விடயங்களில் இவர்கள் இப்போது முன்னைய அரசுகளை விடவும் எதிர்க்கட்சிகளுக்கு எதிராக சர்வாதிகாரத்தனமாக பாராளுமன்றத்தில் நடந்து கொள்ளத் தலைப்பட்டுள்ளனர். இதன் முதல் வெளிப்பாடாக பாராளுமன்றக் குழுக்களுக்கு தலைவர்களை தெரிவு செய்யும் விடயத்தில் முதலில் ஜே.வி.பி.-தேசிய மக்கள் சக்தி ஆட்சியாளர்களின் வேடம் கலைந்தது. தாம் எதிர்க்கட்சியில் இருந்தபோது எந்த எந்த பாராளுமன்றகுழுக்களின் தலைவர் பதவிகள் எதிர்க்கட்சிகளுக்கு வேண்டுமென போராடிப் பெற்றார்களோ தாம் ஆட்சியாளர்களான பின்னர் அந்த பாராளுமன்றக் குழுக்களின் தலைவர் பதவிகளை எதிர்க்கட்சிகள் கோரிய போதும் அதனை அவர்களுக்கு வழங்க மறுத்து தாமே வைத்துக் கொண்டனர்.

அது மட்டுமன்றி பாராளுமன்றத்தில் அரசை கடுமையாக விமர்சிக்கும், குற்றச்சாட்டுக்களை முன்வைக்கும், பதிலளிக்க முடியாத கேள்விகளை எழுப்பும் எதிர்க்கட்சிகளின் எம்.பி.க்கள் இலக்கு வைக்கப்பட்டு பழிவாங்கப்படத் தொடங்கியுள்ளனர். இவ்வாறானவர்களில் அரசினால் குறிப்பாக சபை முதல்வரான அமைச்சர் பிமல் ரத்னாயக்கவால் தனது அதிகாரத்தைப் பயன்படுத்தி முதல் பலிக்கடாவாக்கப்பட்டவர் சுயேட்சைக்குழு 17 இன் யாழ் மாவட்ட எம்.பி.யான வைத்தியர் அர்ச்சுனா இராமநாதன். சபையில் அதிக இடையூறுகளை ஏற்படுத்துவதாகவும் சர்ச்சை பேச்சுக்களை பேசுவதாகவும் குற்றம்சாட்டி அவரின் சபை நடவடிக்கைகள் தொடர்பில் ஆராய விசேட குழு நியமிக்கப்பட்டு அக்குழுவினால் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளையடுத்து 4 வாரங்களுக்கு அர்ச்சுனா இராமநாதன் எம்.பி. பாராளுமன்றத்தில் ஆற்றும் உரைகள், வெளிவிடும் கருத்துக்களை நேரடி ஒளிபரப்பு செய்ய விசேட குழுவின் பரிந்துரையில் தடை விதிக்கப்பட்டது. இவ்வாறான ஒரு தடை பாராளுமன்ற வரலாற்றில் இதற்கு முன்னர் இடம்பெற்றதில்லை. அது மட்டுமன்றி சபையில் அடிக்கடி எழுந்து கேள்வி எழுப்பிய குற்றச்சாட்டில் அர்ச்சுனா இராமன்தான் எம்.பி சபையிலிருந்தும் ஒருதடவை வெளியேற்றப்பட்டார்.

எதிர்க்கட்சிகளின் சிறப்புரிமைகளைக் வழங்க மறுத்தும் சபாநாயகரைக்கூட தனது கட்டுப்பாட்டில் வைத்துக்கொண்டு தன் கண் அசைவு, கையசைவுகளுக்கு செயற்பட வைப்பதுடன் சபா பீடத்திற்கு தலைமைதாங்கும் உறுப்பினர்களைக்கூட மிரட்டும் தொனியில் உரத்துப்பேசி எதிர்க்கட்சிகளுக்கான நேரத்தை வழங்க விடாது செய்கின்றமை, ஒலி வாங்கியை முடக்குகின்றமை, குறுக்கீடுகள் செய்து பேசவ-டாது தடுக்கின்றமை, எதிர்க்கட்சி தலைவர்கள் உட்பட எதிர்க்கட்சி எம்.பி.க்களை கீழ்த்தரமாக விமர்சிக்கின்றமை. ஆதாரமற்ற குற்றச்சாட்டுக்களி முன்வைக்கின்றமை என சபைமுதல்வரான அமைச்சர் பிமல் ரத்னாயக்கவின் சர்வாதிகாரம் தொடர்பில் எதிர்க்கட்சிகள் ஜனாதிபதியின் கவனத்திற்கு கொண்டு சென்றபோதும் சபை முதல்வரின் சர்வாதிகாரத்தில் எந்த மாற்றமும் ஏற்படவில்லை.

இவ்வாறாக சபைமுதல்வரின் சர்வாதிகாரம் தொடர்ந்து அதன் ஒரு கட்டமாக ஐக்கிய மக்கள் சக்தியின் குருநாகல் மாவட்ட எம்.பி.யான தயாசிறி ஜயசேகர மீதும் சபைமுதல்வரின் சர்வாதிகாரம் பாய்ந்தது. பாராளுமன்றத்தில் கடந்த 20ஆம் திகதி தயாசிறி ஜயசேகர எம்.பி.க்கும் சபைமுதல்வருக்குமிடையில் கடும் தர்க்கம் ஏற்பட்டது. இதில் தயாசிறி ஜயசேகரவை சபைமுதல்வரான பிமல் ரத்னாயக்கத்தான் மோசமான முறையி விமர்சித்துடன் முரண்பட்டும் கொண்டார். ஆனால் தயாசிறி ஜயசேகரவின் செயற்பாடு தொடர்பில் விசாரணை நடத்துவதற்காக சபாநாயகர் ஜகத் விக்கிரமரட்னவினால் மூவரடங்கிய குழுவொன்று அமைக்கப்பட்டது.

சபைக்குள் 20ஆம் திகதி தயாசிறி ஜயசேகர எம்.பி. நடந்து கொண்ட விதம் தொடர்பில் என்னிடம் முன்வைக்கப்பட்ட முறைப்பாட்டை கருத்திற்கொண்டு அது தொடர்பில் விசாரணை செய்து அறிக்கையை முன்வைப்பதற்காக பிரதி குழுக்களின் தலைவர் ஹேமாலி வீரசேகரவின் தலைமையில் அமைச்சர் விஜித ஹேரத் மற்றும் எதிர்க்கட்சிகளின் பிரதம கொறடா கயந்த கருணாதிலக்க ஆகியோரை உள்ளடக்கிய மூன்று பேர்கொண்ட குழு என்னால் அமைக்கப்பட்டுள்ளது. அதன் விசாரணை அறிக்கையின் அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்படுமென என்று சபாநாயகர் சபைக்கு அறிவித்தார்.

சபாநாயகரின் இந்த விசாரணைக்குழுவுக்கு கடும் எதிர்ப்பை வெளியிட்ட எதிர்க்கட்சிகள், அரசாங்கம் இவ்வாறு விசாரணை குழுக்களை அமைக்குமாக இருந்தால் இதனை முன்மாதிரியாக கொண்டு அரசாங்கத்தினால் செய்யப்படுவது போன்று எதிர்க்கட்சியும் அரச தரப்பினர்களின் செயற்பாடுகள், இடையூறுகள், அனுமதி மறுப்புக்கள். கீழ்த்தரமான விமர்சனங்கள், ஆதாரமில்லாத குற்றச்சாட்டுக்கள் என எல்லாவற்றுக்கும் சபாநாயகரிடம் முறைப்பாடுகளை செய்ய நேரிடும். அப்போது அரசு தரப்பினரின் முறைப்பாடுகளை ஏற்று சபாநாயகர் விசேட விசாரணைக்குழுக்கள் அமைப்பது போன்று எம்முடைய முறைப்பாடுகளை ஏற்றும் அதற்காகவும் விசேட விசாரணைக்குழுக்களை நியமிக்க நேரிடும் எனத் தெரிவித்தன.

அவ்வாறு கூறியதுடன் மட்டும் நிற்காது சபைமுதல்வர் அமைச்சர் பிமல் ரத்நாயக்கவின் செயற்பாடுகள் மற்றும் நடத்தைகள் கடந்த கால சபை முதல்வர்களின் நன்நடத்தைக்கு முற்றிலும் விரோதமானது என்று குறிப்பிட்டும் 2025.05.20 ஆம்திகதியன்று சபை முதல்வர் நடந்து கொண்ட விதம் குறித்து விசாரணை செய்ய வேண்டும். 10 ஆவது பாராளுமன்றத்தின் முதலாவது கூட்டத்தொடர் ஆரம்பமான தினத்தில் இருந்து சபை முதல்வரின் செயற்பாடுகள் மற்றும் நடத்தைகள் கடந்த கால பாராளுமன்றத்தின் சபைமுதல்வரின் நன்நடத்தைகளுக்கு முற்றிலும் விரோதமானது. எனவே சபை முதல்வர் சபையில் நடந்துக் கொள்ளும் விதம் குறித்து விசாரணைகளை மேற்கொள்ளுங்கள் என வலியுறுத்தியும் ஐக்கிய மக்கள் சக்தியின் எம்.பி.க்கள் சபாநாயகரிடம் எழுத்துமூலமாக முறைப்பாடு செய்து விசாரணைக்குழுவை அமைக்குமாறு கோரியுள்ளனர்.

இது ஒருபுறமிருக்க சபை முதல்வரின் சர்வாதிகாரத்திற்கு இணையாக சபையில் எதிர்க்கட்சிகளை அடக்கி ஒடுக்க பாராளுமன்ற நிலையியல் கட்டளைகளை கடுமையாக நடைமுறைப்படுத்துவதற்கு சபாநாயகர் ஜகத் விக்கிரமரத்னவும் நடவடிக்கை எடுத்துள்ளார். இதன்படி பாராளுமன்ற நிலையியல் கட்டளை 27/2இன் கீழ் எழுப்பப்படும் கேள்விகள் தொடர்பில் தீர்மானங்கள் சில எடுக்கப்பட்டுள்ளதாக சபாநாயகர் சபைக்கு அறிவித்தார். 27/2இன் கீழ் தான் பொது முக்கியத்துவம் வாய்ந்த, நாட்டில் திடீரென ஏற்படும் பிரச்சினைகள், நெருக்கடிகள், அரசின் செயற்பாடுகள் தொடர்பில் எதிர்க்கட்சிகளின் தலைவர்களினால் கேள்விகள் எழுப்பப்படும். அதனை தடுப்பதற்கும் அரசுக்கு எதிரான கேள்விகளை தவிர்ப்பதற்குமே அரசின் தலையாட்டி பொம்மையாகவுள்ள சபாநாயகரினால் பாராளுமன்ற நிலையியல் கட்டளைகளை கடுமையாக நடைமுறைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மாற்றம், மக்களாட்சி, ஜனநாயகம், இன, மத, நல்லிணக்கம், சுதந்திரம் என்ற கோஷங்களோடும் புதிய திசையில் பயணிப்போம் என்ற உத்தரவாதத்துடனும் மூன்றில் இரண்டு பெரும்பான்மையோடு ஆட்சிபீடம் ஏறிய ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தலைமையிலான ஜே .வி.பி.-தேசிய மக்கள் சக்தி அரசு தான் தற்போது பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டுக்கும் மேற்பட்ட பெரும்பான்மை உள்ளது என்ற தலைக்கனத்தில் நாட்டிலும் நாட்டில் சட்டங்களை இயற்றும் உயர்பீடமான பாராளுமன்றத்திலும் சர்வாதிகார ஆட்டத்தை தொடங்கியுள்ளது. அதாவது தேசியசக்தி என்ற முகமூடியோடு உள்ள ஜே.வி.பி. தனது ஆட்சிக்கு ஏற்பட்டுள்ள நெருக்கடியிலிருந்து தப்பிக்க சிறிது சிறிதாக தனது கொடூரமான பழைய முகத்தைக் காட்டத் தொடங்கியுள்ளது.

இலங்கை செய்திகள் Sri Lanka News

# 300000 நிலக்கீழ் கண்ணி வெடிகளை அகற்றி தமது அடுத்த கட்டத்துக்கு நகரும் ஹலோ ரெல்ப் நிறுவனம்!





ஹலோ ரெல்ப் நிறுவனமானது 2002ம் ஆண்டில் இருந்து இலங்கையில் மனிதாபிமான செயற்பாடான நிலக்கீழ் கன்னி வெடிகளை அகற்றும் பணிகளை இலங்கையின் வடக்கு கிழக்கு மட்டுமன்றி அணைத்து மாகாணங்களிலும் செய்து வருகின்றது.

இவ் நிறுவனமானது 2002ல் இருந்து செவ்வாய்க்கிழமை 3ம் திகதி வரை சுமார் 300000 கண்ணி வெடிகளை அகற்றி தமது மனிதாபிமான செயற்பாட்டின் அடுத்த கட்டத்துக்கு நகர்ந்து செல்கிறது.

இவ் அர்ப்பணிப்பின் வெளிப்பாட்டினை ஹலோ ரெல்ப் நிறுவனத்தின் ஊழியர்கள் அன்றையதினம் முகமாலையில் அமைந்துள்ள தமது வேலைத் தளத்தில் கேக் வெட்டிக் கொண்டாடியமை குறிப்பிடத்தக்கது.

# "எதற்கும் தயாராக இருங்கள்" என்று தனது கட்சி உறுப்பினர்களை "உசார்"ப்படுத்திய டக்ளஸ் தேவானந்தா!



ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் கொள்கையே சரியானது என்பதையும், எமது அரசியல் தீர்விற்கான அணுகுமுறையே நடைமுறைச் சாத்தியமானது என்பதையும் காலம் வெளிப்படுத்தி வருவதாக தோழர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி சார்பாக தெரிவு செய்யப்பட்ட உள்ளூராட்சிமன்ற உறுப்பினர்கள் உறுதியுரை எடுக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும்போது குறித்த விடயத்தினை தெரிவித்தார்.

அதாவது, "ஈ.பி.டி பி. கட்சியின் கொள்கையும், கட்சியினால் வலியுறுத்தப்படுகின்ற 13 ஆம் திருத்தச் சட்டத்தினை ஆரம்பமாகக் கொண்ட அரசியல் தீர்வு வழிமுறையுமே சாத்தியமானது என்பதை அண்மைய அரசியல் நிலைவரங்கள் வெளிப்படுத்துகின்றன.

13 ஆம் திருத்தச் சட்டத்தினை தொட்டும் பார்க்க மாட்டோம் என்றெல்லாம் முழங்கியவர்கள், எதனை மறுத்தார்களோ அவற்றை ஏற்றுக்கொள்வதாக ஒப்பந்தம் செய்கின்றார்கள்.

எனவே எமது நிலைப்பாடுகளை மக்கள் மத்தியில் நம்பிக்கையுடன் ஆழமாக கட்சியின் செயற்பாட்டாளர்கள் ஒவ்வொருவரும் எடுத்துச் செல்ல வேண்டும்.

அதேபோன்று, எமது கட்சிக்கு எதிராக முன்வைக்கப்படுகின்ற குற்றச்சாட்டுக்களும் அடிப்படைகள் அற்றவை - அரசியல் உள்நோக்கம் கொண்டவை.

தற்போதுகூட, யாழ்ப்பாணத்தினை சேர்ந்த முன்னாள் அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு எதிராக விசாரணைகள் முன்னெடுக்கப்படுவதாகவும் விரைவாக கைது செய்யப்படுவார்கள் என்றும் செய்திகள் வெளிவருகின்றன.

ஆளுந்தரப்பினர் நினைத்தால் விரும்பியவாறு விசாரணைகளை மேற்கொள்ளலாம், எமக்கு எதிராகவும் அவ்வாறான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படலாம்.

எமக்கு எதிராக அவ்வாறான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுமாயின், அவை அரசியல் நோக்கம் கொண்டவையாக இருக்குமே தவிர, உண்மையாக இருக்காது.

எவ்வாறாயினும், அனைத்து சவால்களையும் எதிர்கொள்வதற்கு நாம் தயாரான மனோநிலையுடன், எமது அரசியல் நிலைப்பாடுகளை மக்கள் மத்தியில் எடுத்துச் செல்ல வேண்டும்" என்று தெரிவித்தார்

# "இலங்கைக்கு வர வேண்டாம்" என மனித உரிமைகள் உயர்ஸ்தானிகருக்கு அறிவுறுத்தல்




ஒன்பது வருடங்களுக்குப் பின்னர் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் தலைவர் இலங்கைக்கு வருகைத் தரவுள்ளமை போரினால் பாதிக்கப்பட்ட வடக்கு மற்றும் கிழக்குப் பகுதிகளைச் சேர்ந்த தமிழ் மக்களிடையே சந்தேகங்களை எழுப்பியுள்ளது.

ஐ.நா மனித உரிமைகளுக்கான உயர்ஸ்தானிகர் வோல்கர் டர்க் இந்த மாத இறுதியில் அல்லது அடுத்த மாத ஆரம்பத்தில் இலங்கைக்கு வருகைத்தர உள்ளதாக வெளிவிவகார அமைச்சு அறிவித்துள்ளது.

போரினால் நீதி மறுக்கப்பட்ட வடக்கு மற்றும் கிழக்கு தமிழ் மக்களுக்கு நீதி கிடைக்கப் போராடும் முன்னணியில் இருக்கும் தாய்மார்கள், அடுத்த ஜெனீவா மாநாட்டிற்குப் பின்னர் இந்தப் பயணம் இடம்பெற வேண்டுமென அழைப்பு விடுத்துள்ளனர்.

போரின் முடிவில் காணாமல் ஆக்கப்பட்ட பல்லாயிரக்கணக்கான தமிழர்களின் தலைவிதியை வெளிப்படுத்தக்கோரி, இலங்கையின் மிக நீண்ட போராட்டத்தின் 3,007ஆவது நாளில் முல்லைத்தீவில் திரண்ட போரால் பாதிக்கப்பட்ட தாய்மார்கள், உயர்ஸ்தானிகரின் வருகையை, தங்களுக்கு விசுவாசமான பிரதிநிதிகளைப் பயன்படுத்தி இலங்கை அரசாங்கம் திட்டமிட்ட பயணம் என வர்ணித்துள்ளனர்.

முல்லைத்தீவில் நடந்த போராட்டத்தின் போது வடக்கு, கிழக்கு காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் சங்கத்தின் தலைவி யோகராசா கனகரஞ்சனி, அரசாங்கத்தின் முயற்சிகள் குறித்து சந்தேகங்களை எழுப்பியதோடு, போரில் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கான நீதிக்கு சர்வதேச சக்திகள் ஆதரவளிக்க வேண்டுமென வேண்டுகோள் விடுத்தார்.

"வரவிருக்கும் ஐ.நா தொடர் எங்களுக்கு ஒரு முக்கியமான தொடராக அமையவுள்ளது. அந்த ஐ.நா தொடரிலே, இலங்கை அரசாங்கம் தமக்கு சார்பானவர்களை வைத்து ஐக்கிய நாடுகள் வதிவிட பிரதிநிதியை அழைத்து அவர்களோடு பேசுவதற்கு முயற்சிப்பாக நாங்கள் அறிகின்றோம். ஆகவே எங்களுடைய வலிகளையும், வேதனைகளையும் உணர்ந்துகொண்டு, மனிதநேயங்களை நேசிக்கின்ற அந்த நாடுகள் ஒன்றிணைந்து எங்களுக்கான சர்வதேச நீதியை பெற்றுத்தர, எங்களுடைய நீதியை பேச, எங்களுடைய பிரச்சினைகளை சர்வதேச நீதிமன்றத்திற்கு கொண்டுச் சென்று நீதியை பெற்றுத்தர, செயற்பட வேண்டுமென நாங்கள் கேட்டுக்கொள்கின்றோம்."

செப்டெம்பர் மாதத்திற்கு முன்னர் ஐ.நா. மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் இலங்கைக்கு வருகை தரக்கூடாது என தாய் யோகராசா கனகரஞ்சனி மேலும் வலியுறுத்தினார்.

"செப்டெம்பர் மாத கூட்டத் தொடருக்கு முன்னர் அவர் இங்கு வரக்கூடாது. அவர் எங்களுக்காக பேச உண்மையாகவே வேண்டுமென்றால், அந்த கூட்டடத்தில் எங்களுடைய பிரச்சினைகளை பேசி எங்களுக்கான நீதியை பெற்றுத்தருவதற்காக ஒன்றிணையுமாறு மனிதநேயமிக்க நாடுகளிடம் பாதிக்கப்பட்ட மக்களாக நாங்கள் கேட்டுக்கொள்கின்றோம். எங்களுக்கான நீதி சர்வதேசத்திடம் இருந்துதான் கிடைக்க வேண்டும். பாதிக்கப்பட்ட எமது உறவுகளுக்கு என்ன நடந்தது என்பதை கூற் இலங்கை அரசு ஒருபோதும் முன்வராது."

ஐ.நா. மனித உரிமைகள் உயர் ஸ்தானிகர் இறுதியாக 2016 இல் இலங்கைக்கு விஜயம் செய்தார். 2016 ஆம் ஆண்டு, மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதி பதவியில் இருந்தபோது, அப்போதைய மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் இளவரசர் செய்ஹத் அல் "ஹசைன் நாட்டிற்கு விஜயம் செய்தார். அந்த நேரத்தில் நாட்டை ஆட்சி செய்த நல்லாட்சி அரசாங்கம், போர்க்குற்றங்கள் உட்பட மனித உரிமை மீறல்களுக்கு பொறுப்புக்கூறலை உறுதி செய்யும் என்ற சர்வதேச சமூகத்தின் நம்பிக்கைக்கு இந்தப் பயணம் ஒரு ஊக்கமாக அமைந்தது.

2017 ஆம் ஆண்டு சர்வதேச மகளிர் தினத்தன்று முல்லைத்தீவில் ஆரம்பித்த போராட்டத்தின் 3,007வது நாளில், காணாமல் ஆக்கப்பட்ட தங்கள் அன்புக்குரியவர்கள் பற்றிய உண்மையை வெளிக்கொணர, முல்லைத்தீவில் போராட்டத்தை ஆரம்பித்த தாய்மார்கள், "விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்டவர்களுக்கு என்ன நடந்தது, வெள்ளை வேன்களில் கடத்திச் செல்லப்பட்டவர்கள் எங்கே, வீடுகளுக்குள் வந்து இழுத்துச் செல்லப்பட்டவர்களுக்கு என்ன நடந்தது" போன்ற கோ'ங்களை எழுப்பினர்.


"குற்றவாளிகள் நீதியின் முன் நிறுத்தப்படுவார்களா?, நீங்கள் அழைத்துச் சென்ற எங்கள் பிள்ளைகனள் எங்கே?" என சிங்களத்தில் எழுதப்பட்ட பதாகைகளையும் அவர்கள் ஏந்தியிருந்தனர்.

அம்பாறை மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் சங்கத்தின் தலைவி தம்பிராசா செல்வராணி தலைமையில், மே 28 அன்று அம்பாறை திருக்கோவிலில் போராட்டம் நடத்தப்பட்டதாக பிரதேச ஊடகவியலாளர்கள் தெரிவிக்கின்றனர்.





மேலதிக தகவல்களுக்கு:
திருமதி. வசந்தா நடராசன் B.A.
(416) 332-0269
vasantha@rogers.com



# ஈழத்துத் திருக்கோயில்கள்

வரலாறும் மரபும் 1149

## (வரலாறும் மரபும்)

## சுவஉணாம்பிகா சமேத அருணாசலேஸ்வரசுவாமி ஆலயம்

### முகத்துவாரம், கொழும்பு

*" சித்தமற்றுச் சிந்தையற்றுச் சீவனற்று நின்றிடம்*
*சத்தியற்றுச் சம்புவற்றுச் சாதிபேத மற்றுநல்*
*மூத்தியற்று மூலமற்று மூல மந்திரங்களும்*
*வித்தைஇத்தை ஈன்றவிதத்தில் விளைந்ததே சிவாயமே "*

ஏழையின் துயரில் இறைவனைக்கண்டு இதயம் கசிந்து, ஏழைகளையும் நல்லோரையும் ஏற்று வழிநடத்திய பெரியானைக்குட்டி சுவாமிகள் சமாதியடைந்தார். சுவாமி அவர்களின் சமாதி, கொழும்பு முகத்துவாரம் தீர்த்தக்கரையில் இந்துசமயத்திலே குறிப்பிடப்பட்டுள்ள சமாதிக்கிரியைகளுடன், அன்பர்களால் நிறைவேற்றப்பட்டது. இறுதிக்கிரியையில் அடியார்கூட்டம், செட்டிமார் கூட்டம் மற்றும் சேர்.பொன்.இராமநாதன், சேர்.பொன் அருணாசலம் போன்றோரும் பங்குகொண்டு, தமது பக்தியை வெளிப்படுத்தினர். பெரியானைக்குட்டி சுவாமியாரின் நினைவாக, சேர்.பொன்.அருணாசலம் மற்றும் அவரது துணைவியார் திருமதி சுவர்ணாம்பிகை ஆகியோரின் அயரா முயற்சியால், முகத்துவாரம் அருணாசலேஸ்வரர் சுவாமி ஆலயம் தோற்றம் பெற்றது.

இவ்வாலயத்திலே எழுந்தருளச்செய்ய இந்தியாவிலுள்ள பிரயாகையிலிருந்து, அழகிய பாணலிங்கத்தையும், நந்தி பெருமானையும் கொண்டுவந்து எழுந்தருளச் செய்து, சிறப்பானமுறையில் முதல் கும்பாபிஷேகப் பெருவிழா எடுக்கப்பட்டது. மோதரைக்கடலாகிய முகத்துவாரக் கடலோரத்தில், உமையம்பாள் சமேத நடராசப்பெருமானின் அற்புதமான ஆலயத்திலே, சித்தர்பெருமானாகிய பெரியானைக்குட்டிச் சுவாமியாரின் அருளும் வெளிப்பட்டு, மக்களை வாழவைத்துக் கொண்டிருக்கின்றது. இவ்வாலயத்திற்கு அருகிலேயே, முகத்துவாரம் பிள்ளையார் கோயிலும் அமைக்கப்பட்டுள்ளது. பிள்ளையாரரின் ஆலயம், மேற்கு வாசலில் முப்பத்தியாறு அடி உயரமான கோபுரத்துடன் கம்பீரமாக அமைக்கப்பட்டுள்ளது.

இவ்வாலயத்தின் மூலமூர்த்தியாக இறைவன், லிங்க வடிவிலே காட்சியளிக்கின்றார். மகாமண்டபத்தின் வலதுபுறத்தில் வல்லப கணபதியும், இடதுபுறத்திலே பாலமுருகனும், அம்பிகை சுவர்ணாம்பிகையும் எழுந்தருளியுள்ளனர். இவர்களோடு ஸ்ரீதேவி, பூதேவி சமேத பத்மநாபசுவாமி, ஸ்ரீ சாகம்பரிதேவி, நவக்கிரகங்கள், நர்த்தனவிநாயகர், தெட்சணாமூர்த்தி, லிங்கோத்பவர், பிரம்மா, துர்க்கை அம்பாள், வைரவர், சண்டேசுவரர் ஆகிய மூர்த்தங்களும் சைவாகம முறைப்படி அமைக்கப்பட்டு, அருளோடும், அழகிய கலைநயத்தோடும் காணப்படுகின்றன.

பெரியானைக்குட்டிசுவாமிகள் சமாதியடைந்தபின்னர், பலதடவைகள் இந்த ஆலயத்தின் புனருத்தாரணத் திருப்பணிகள் நிறைவேற்றப்பட்டு, மகாகும்பாபிஷேகங்கள் சிறப்பாக நிறைவேற்றப்பட்டுள்ளன. பல கும்பாபிஷேகங்கள் நிறைவேற்றப்பட்டபோதிலும் 1913 ஆம் அண்டில் நிறைவேற்றப்பட்ட முதலாவது மகாகும்பாபிஷேகம், மிகச் சிறப்புடையதாகக் கருதப்படுகின்றது. இரண்டாவது மகாகும்பாபி'கம் 1926 ஆம் ஆண்டில் நடைபெற்றது. 1968 ஆம் ஆண்டு திரு.அருணாசலம் அவர்களுடைய புத்திரர் திரு. மகாதேவா அவர்களால், மூன்றாவது மகாகும்பாபிஷேகம் சிறப்பாக இடம்பெற்றது. நீண்ட இடைவெளியின்பின்னர் 1992 ஆம் ஆண்டிலும் புனருத்தாரணப்பணிகள் நிறைவேற்றப்பட்டு, மகாகும்பாபிஷேகம் நடைபெற்றுள்ளது. நாட்டின் அமைதியின்மை நீடித்தபொழுதிலும், 1997 ஆம் ஆண்டு, ஆனந்த நடராசர் நுழைவாயிற் கோபுரம் அமைக்கப்பட்டு கும்பாபிஷேகம் நிகழ்ந்துள்ளது. இவ்வாறான திருப்பணிகள் காலத்திற்குக் காலம் இடம்பெறுவதும் குறிப்பிடத்தக்கது.

திருக்கோணேஸ்வரம், முன்னேசுவரம், திருக்கேதீச்சரம், நகுலேஸ்வரம் போன்று, இவ்வாலயத்திற்கும் தனிச்சிறப்பு காணப்படுகின்றது. மூர்த்தி, தலம், தீர்த்தம் என முச்சிறப்புக்களையும் தன்னகத்தே கொண்ட இவ்வாலயத்தின் தீர்த்தப்பெருமை, சொல்லிலடங்காத பெருமையுடையது. இவ்வாலயம் அமைந்துள்ள சங்கமதீர்த்தமாகிய முகத்துவாரம் கடலே, இப்பெருமைக்குக் காரணமாக அமைந்துள்ளது. இவ்விடம் பிதிர்க்கடன்களை நிறைவேற்றுதற்குரிய புண்ணிய தீர்த்தமாகவும் போற்றப்படுகின்றது.

முகத்துவாரம் அருணாசலேஸ்வரர் ஆலயத்தில், ஆடிமாதம் நடைபெறும் பூகைள் சிறப்புடையவை. ஆடிஅமாவாசை, ஆடிப்பூரம், ஆடிப்பெருக்கு என இத்திருநாட்களில் சிறப்பான பூசைகள் இடம்பெறும். குறிப்பாக, ஆடிஅமாவாசை தினத்தன்று பக்தர்கள் இவ்விடத்திற்கு வந்து, சங்கமதீர்த்தத்தில் நீராடி, தமது பிதிர்க்கடன்களை நிறைவேற்றி, எல்லாம் வல்ல பரம்பொருளாகிய, சுவர்ணாம்பிகா சமேத அருணாசலேஸ்வரப் பெருமானை வணங்கிச் செல்வது வழக்கம். தமிழ்மக்கள் பரந்து வாழும் கொழும்பில், முகத்துவாரம் பகுதியில் இவ்வாலயம் அமைந்திருப்பதால், இங்கு நடைபெறும் பூசை வழிபாடுகளிலும், விழாக்களிலும், பெருந்திரளான மக்கள் கலந்து சிறப்பிப்பது வழக்கம். குறிப்பாக, இவ்வாலயத்திலே நடைபெறும் சிவராத்திரி விழா சிறப்புடையது. சிவராத்திரி தினத்தன்று வில்வத்தால் அர்ச்சனை நிகழ்த்தி, பஞ்சமுக அர்ச்சனை செய்து, நான்குசாமப் பூசைகளும் நடைபெறும். மறுநாட்காலை எம்பெருமான் சங்கமதீர்த்தத்தில் நீராடும் நிகழ்வு இடம்பெறும். புரட்டாதிச் சனிக்கிழமைகளில், சனி பகவானுக்கு விசேட வழிபாடுகள் இவ்வாலயத்திலே சிறப்பாக நடைபெறுவதோடு, முழுமுதற் கடவுளாகிய சிவனுக்குரிய ஏனைய சிறப்பு நாட்களும், சைவாகமமுறைப்படி நிகழ்த்தப்படும். அத்தோடு பரிவாரதேவதைகளுக்குரிய திருநாட்களும் இவ்வாலயத்தில் சைவாகம முறைப்படி கொண்டாடப்படுவது குறிப்பிடத்தக்கது.

இலங்கை, இந்தியா போன்ற நாடுகளிலுள்ள பல புகழ்பெற்ற ஆலயங்களின் பெருமைக்கு, அங்கு உறையும் சித்தர்களே காரணமாக அமைந்துள்ளனர். அத்தகைய சித்தர்பெருமானாகிய பெரியானைக்குட்டிச் சுவாமியாரின் அருளைக்கொண்ட அருணாசலேஸ்வரர் ஆலயம், கொழும்பு, முகத்துவாரம் பிரதேசத்தில் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

**வளரும்...**



# Government of Canada strengthens it's border security

## Minister of Public Safety Honourable Gary Anandasangaree, introduced the Bill, Strong Borders Act, to strengthen our laws and keep Canadians safe.

# கனடிய அரசு தனது எல்லைப் பாதுகாப்பை பலப்படுத்துகிறது

## கெரி ஆனந்தசங்கரி, பொது பாதுகாப்பு அமைச்சர் என்ற வகையில் சட்டங்களை வலுப்படுத்தவும் கனேடியர்களை பாதுகாக்கவும் இந்த மசோதாவை பாராளுமன்றத்தில் அறிமுகப்படுத்தினார்



கனடாஒரு வலுவான தேசமாக விளங்கவேண்டும் என்றால் வலுவான எல்லைகள்களை நாம் கொண்டிருக்க வேண்டும் என 3ம் திகதி செவ்வாய்க்கிழமையன்று கனடியப் பாராளுமன்றத்தில், கௌரவ கேரி ஆனந்தசங்கரி அவர்கள், பொது பாதுகாப்பு அமைச்சர் என்ற வகையில் மேற்படி மசோதாவை அறிமுகப்படுத்தி உரையாற்றும் போது தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில், எமது தேசத்தின் சட்டங்களை வலுப்படுத்தவும் கனேடியர்களை பாதுகாப்பாக வைத்திருக்கவும் இந்த வலுவான எல்லைகள் சட்டம் எமது அரசாங்கத்தில் முக்கியத்துவம் பெறுகின்றது என்றார்

அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில்எங்கள் எல்லைகளைப் பாதுகாப்பாக வைத்திருக்கவும், நாடுகடந்த ஒழுங்கமைக்கப்பட்ட குற்றங்களை எதிர்த்துப் போராடுவதற்கும், சட்டவிரோத / பெண்டானிலின் ஓட்டத்தை நிறுத்துவதற்கும், பணமோசடிகளை சிதைப்பதற்கும் சட்ட அமலாக்கத்தில் சரியான கருவிகள் இருப்பதை உறுதி செய்வதன் மூலம் இந்த மசோதா கனேடியர்களைப் பாதுகாப்பாக வைத்திருக்கும். இது பெருகிய முறையில் அதிநவீன குற்றவியல் வலைப்பின்னல்களுக்கான எங்கள் பதிலை அதிகரிக்கும், மேலும் கனடியர்களின் தனியுரிமை மற்றும் பட்டய உரிமைகளைப் பாதுகாக்கும் போது எங்கள் குடியேற்ற முறையின் ஒருமைப்பாட்டையும் நியாயத்தையும் மேம்படுத்தும்.

சட்டவிரோத போதைப்பொருள் கடத்தல், ஆயுதக் கடத்தல் மற்றும் கனடாவிலிருந்து இடம்பெறும்பெறுமதி வாய்ந்த வாகனங்களின் திருட்டுக்கு எதிராக எங்கள் எல்லைகளைப் பாதுகாக்க சுங்கச் சட்டத்தைத் திருத்தவுள்ளோம்.

சிபிஎஸ்ஏவின் ஆணையை நிர்வாகம் மற்றும் அமல்படுத்துவது தொடர்பான எந்தவொரு நோக்கத்திற்காகவும் வசதிகளை வழங்க, சித்தப்படுத்துதல் மற்றும் பராமரிக்க சில துறைமுகங்களில் உரிமையாளர்கள் மற்றும் ஆபரேட்டர்கள் கடமைப்பட்டவர்கள், இதில் ஏற்றுமதிக்கு விதிக்கப்பட்ட பொருட்களை பரிசோதனையும் தடுப்புக்காவலும் அடங்குவர் டிரான்ஸ்போர்ட்டர்கள் மற்றும் கிடங்கு ஆபரேட்டர்களின் கட்டுப்பாட்டின் கீழ் சிபிஎஸ்ஏ அணுகலை அனுமதிக்கிறது, ஏற்றுமதிக்கு விதிக்கப்பட்ட பொருட்கள் புகாரளிக்கப்பட்ட, ஏற்றப்படும், இறக்கப்பட்ட அல்லது சேமிக்கப்படும் இடங்களில் தேர்வுகள் செய்ய.

கடலோர காவல்படை சேவைகளில் பாதுகாப்பு தொடர்பானநடவடிக்கைகளைச்சேர்க்கபெருங்கடல்கள் சட்டத்தைத் திருத்தவுள்ளோம் அத்துடன் , இது கனேடிய கடலோர காவல்படைக்கு பாதுகாப்பு ரோந்துகளை நடத்தவும், பாதுகாப்பு நோக்கங்களுக்காக தகவல்களையும் உளவுத்துறையையும் சேகரிக்கவும், பகுப்பாய்வு செய்யவும், பரப்பவும் உதவும் பதிவுசெய்யப்பட்ட பாலியல் குற்றவாளிகள் மீது சேகரிக்கப்பட்ட தகவல்களை உள்நாட்டு மற்றும் சர்வதேச சட்ட அமலாக்க பங்காளிகளுடன் பகிர்ந்து கொள்ள (ஆர்.சி.எம்.பி பொலிஸ் படையின் நிதி அதிகரிப்பு மற்றும் திறனை மேம்படுத்துதல்

புகலிடம் கோரிக்கைகள் எவ்வாறு பெறப்படுகின்றன, செயலாக்கப்படுகின்றன, தீர்மானிக்கப்படுகின்றன என்பதை மேம்படுத்தவும் குடிவரவு ஆவணங்களை ரத்து செய்ய, இடைநீக்கம் செய்ய அல்லது மாற்ற அதிகாரிகளை பலப்படுத்தவுள்ளோம், மேலும் புதிய விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்வதை ரத்து செய்ய, நிறுத்தி வைக்க அல்லது நிறுத்த் மற்றும் குடியேற்றம், அகதிகள் மற்றும் குடியுரிமை கனடா (ஐ.ஆர்.சி.சி) வாடிக்கையாளர் தகவல்களை கூட்டாட்சி, மாகாண மற்றும் பிராந்திய கூட்டாளர்களுடன் எவ்வாறு பகிர்ந்து கொள்கிறது என்பதை மேம்படுத்தவும் இந்த சட்டம் உதவும் என நம்புகின்றேன்.

சட்டவிரோத மருந்துகளை உற்பத்தி செய்ய பயன்படுத்தக்கூடிய முன்னோடி இரசாயனங்கள் சுகாதார அமைச்சரால் விரைவாகக் கட்டுப்படுத்த அனுமதிக்கும் புதிய விரைவான திட்டமிடல் பாதையை உருவாக்கவும். இது சட்டம் மற்றும் எல்லை அமலாக்க முகவர் நிறுவனங்கள் சட்டவிரோத இறக்குமதி மற்றும் பயன்பாட்டைத் தடுக்க விரைவான நடவடிக்கை எடுக்கவும், இந்த இரசாயனங்கள் எந்தவொரு நியாயமான பயன்பாடு குறித்து கடுமையான மத்திய அரசின் மேற்பார்வையை உறுதி செய்வதற்கும் அனுமதிக்கும்

சி.எஸ்.ஐ.எஸ் எனப்படும் அரசாங்க புலனாய்வு படைக்குரிய புலனாய்வு கருவிகளும் வேகத்தை வைத்திருப்பதை உறுதி செய்வதற்காக சட்ட அமலாக்கத்தின் அடிப்படை தகவல்கள் மற்றும் தரவுகளுக்கான அணுகலை எளிதாக்குவதற்கு குற்றவியல் கோட் மற்றும் பரஸ்பர சட்ட உதவிகளை சட்ட அமலாக்கத்தின் அணுகலை எளிதாக்குவதற்கு கனேடிய பாதுகாப்பு புலனாய்வு சேவை (சிஎஸ்ஐஎஸ்) சட்டத்தை திருத்தவுள்ளோம்.

தகவல் மற்றும் தகவல்தொடர்புகளை அணுக அல்லது இடைமறிக்க சட்டபூர்வமாக அங்கீகரிக்கப்பட்ட கோரிக்கைகளை நிறைவேற்ற கட்டாயப்படுத்துவதன் மூலம், சட்ட அமலாக்க முகவர் மற்றும் குற்றவியல் மற்றும் உளவுத்துறை விசாரணைகளில் சி.எஸ்.ஐ.க்களை ஆதரிப்பதற்கான திறன்களை மின்னணு சேவை வழங்குநர்கள் வைத்திருப்பதை உறுதிசெய்ய துணை அங்கீகரிக்கப்பட்ட தகவல் சட்டத்தை **(SAAIA)** அறிமுகப்படுத்தவுள்ளோம்.

குற்றவியல் விசாரணையை முன்னேற்றுவதற்காக, பாராளுமன்ற சட்டத்தின்படி அவ்வாறு செய்ய அங்கீகாரம் பெற்ற பொலிஸ் படையானது தபால் திணைக்களத்தின் தபால்களை பரிசோதனை செய்யும் தடுக்கும் தடைகளை அகற்ற கனடா போஸ்ட் கார்ப்பரேஷன் சட்டத்தைத் திருத்தவுள்ளோம் மற்றும் தபால் திணைக்களத்தின் தபால்களை பரிசோதனை செய்யும் வகையில் கனடா போஸ்டின் ஆய்வு அதிகாரத்தை விரிவாக்குவோம்.

கனடாவின் பணமோசடி எதிர்ப்பு மற்றும் பயங்கரவாத எதிர்ப்பு நிதி ஆட்சியை வலுப்படுத்துவோம், இதில் வலுவான பணமோசடி எதிர்ப்பு அபராதங்கள் உட்பட் பெரிய பண பரிவர்த்தனைகள் மற்றும் "மூன்றாம் தரப்பு வைப்புக்கள்" மீதான புதிய கட்டுப்பாடுகள் உட்பட, மிகவும் பிரபலமான சில வகையான பணமோசடி மேற்பார்வை ஒத்துழைப்பை மேம்படுத்துதல் மற்றும் கனடாவின் நிதி பரிவர்த்தனைகள் மற்றும் அறிக்கைகள் பகுப்பாய்வு மையத்தின் இயக்குநரை நிதி நிறுவனங்கள் மேற்பார்வைக் குழுவில் **(FISC)** சேர்ப்பதன் மூலமும், குஐளுஊ உடன் கூட்டாட்சி ஒழுங்குபடுத்தப்பட்ட நிதி நிறுவனங்கள் குறித்த மேற்பார்வை தகவல்களை பரிமாறிக்கொள்ள

**FINTRAC** க்கு உதவுவதன் மூலமும் ஒழுங்குமுறை இணக்கத்தின் உயர் தரங்களை ஆதரித்தல் மற்றும் பாதுகாப்பான மற்றும் பாதுகாப்பான கனடாவை உருவாக்குவதற்கான எங்கள் திட்டத்தின் முக்கிய அங்கமாக வலுவான எல்லைகள் சட்டம் உள்ளது. எங்கள் சமூகங்களைப் பாதுகாப்பாக வைத்திருக்கவும், எங்கள் தெருக்களில் இருந்து துப்பாக்கிகளைப் இல்லாதொழிக்கவும், வாகனத் திருட்டு, தனியார் வீடுகளின் மீது நடத்தப்படும் தாக்குதல்கள், மனித கடத்தல் மற்றும் போதைப்பொருள் கடத்தல் ஆகியவற்றில் குற்றம் சாட்டப்பட்ட குற்றவாளிகளுக்கு மீண்டும் வரவிருக்கும் மாதங்களில் மேலும் நடவடிக்கை அறிவிக்கப்படும்.

இவ்வாறு உள்நாட்டு பாதுகாப்பு அமைச்சர் "நம்மவர்" ஹரி ஆனந்தசங்கரி அவர்கள் மேற்படி சட்டத்தின் விரிவான பகுதிகளை விளக்கினார்.

## புனித அந்தோனியார் பக்தர்களுக்கான விசேட அறிவித்தல்

**புனித அந்தோனியார் திருவிழா, எதிர்வரும் யூன் 13ம் திகதி, மாலை 7 மணிக்கு, ஸ்காபரோ நகரில், பேர்ச்மவுண்ட்-டன்போர்த் அவனியூ சந்திப்பிற்கு அருகே, இலக்கம் 131 பேர்ச்மவுண்ட் வீதியில் அமைந்துள்ள தூய ஆரோக்கிய அன்னை தமிழ் கத்தோலிக்க பங்கில் நடைபெறவுள்ளது.**

**எதிர்வரும் யூன் 10ம் திகதி, செவ்வாய்க்கிழமை, புனித அந்தோனியாரின் திருவுடலின் ஒரு பகுதியைத் தாங்கிய விசேட திருப்பண்டம், புனித அந்தோனியார் பக்தர்களின் ஆராதனைக்கும் வேண்டுதலுக்கும், எமது ஆலயத்திற்கு கொண்டுவரப்படவிருக்கிறது.**

**யூன் 10ம் திகதி, செவ்வாய்க்கிழமை, காலை 10 மணியிலிருந்து இரவு 9 மணிவரை, 131 பேர்ச்மவுண்ட் வீதி, ஸ்காபரோவில் புனித அந்தோனியாரின் விசேட திருப்பண்டத்தை தரிசித்து, புதுமைகள் புரியும் புனித அந்தோனியாரின் விசேட அருள்வளங்களைப் பெற்றுக்கொள்ள அன்போடு அழைக்கிறோம்.**
மேலதிக விபரங்களுக்கு: 416-264-6544
**(131 Birchmount Road, Scarborough)**
**(Birchmount and Danforth Avenue)**



# UTHAYAN INTERNATIONAL AWARDS FESTIVAL 2025

## உதயன் சர்வதேச விருது விழா 2025

UTHAYAN உதயன் விருது UTHAYAN AWARD Uthayan International Awards-2025

**Date:** Saturday, June 14th, 2025

**Time:** 6:00 PM

**Venue:** The Estate Banquet & Event Centre
430 Nugget Ave, Scarborough, ON M1S 4A4

### This Year's Awards Are:
### இவ்வருடத்திற்குரிய விருதுகள்

- Uthayan Literary and Artistic Exuberance Award
- Uthayan Inter-Communal Relationship Award
- Uthayan Business Entrepreneur Award - Ontario
- Uthayan Business Entrepreneur Award - Quebec
- Uthayan Leadership Award
- Uthayan Youth Icon Award
- Uthayan Lifetime Achievement Award - Sri Lanka
- Uthayan Lifetime Achievement Award - Tamil Nadu

For More Information: 416-732-1608 / 647-762-9512

# இவ்வார ராசிபலன்

**06-06-2025 வெள்ளி தொடக்கம் 12-06-2025 வியாழன் வரையும்**




**மேஷம்:** விரும்பிய பொருள் சேரும் வாரம். வாய்ப்புக்கள் தேடி வரும். பிள்ளைகளால் சந்தோஷம் கூடும். போட்டிகள் அதிகமாகும். கல்வியில் அக்கறை தேவை. இடமாற்றம் உண்டு. மனைவி உறவு சீராகும். கருத்து வேறுபாடுகள் அகலும். புதிய வாய்ப்புக்களை எதிர்பார்க்கலாம். தன வரவில் தடங்கல் உண்டு. தொழில் அபிவிருத்தி உண்டாகும். பொருளாதார மேன்மை உண்டு. குடும்பத்தில் அமைதி பெருகும். உள்ளம் மகிழும். சந்தர்ப்ப சாதகம் உண்டு. ஆரோக்கியம் அதிகரிக்கும். உத்தியோக உயர்வு உண்டு. வாழ்வில் வளம் உண்டு. வியாபார மேன்மை உண்டு. விரும்பிய பொருள் சேரும். காரியம் கை கூடும். ஆபரணச் சேர்க்கை உண்டு. சந்தோஷம் பெருகும். மாணவர் பாராட்டுப் பெறுவர். அரசியலில் புகழ் கூடும். அரசு வழி ஆதாயம் உண்டு. புதிய வாய்ப்பு தேடி வரும். உணவு விடுதி லாபம் தரும். பிணிகள் அகலும். பிரயாணம் ஏற்படும். பிள்ளைகளால் மதிப்பு உயரும். பொருளாதாரம் சிறப்பு தரும். வசந்தம் தேடி வரும். பெருமைகள் பெருகும். அரசியலில் புகழ் கூடும். வீண் பழி அகலும். சஞ்சலம் மறையும். மனைவியின் அன்பு அதிகரிக்கும். மற்றவர் தொல்லை குறையும். ஜவுளித் தொழில் உயர்வு தரும். கலைத்தொழில் திருப்பம் தரும். கல்வியில் மந்த நிலை காணப்படும். பணியாட்களால் தொல்லை ஏற்படும். வாகனச் செலவு உண்டு. வருமானத்தடை ஏற்படும். வாய்ச்சொல் பலன் தரும். இனிய தகவல் வந்து சேரும். புதிய வாய்ப்புத் தேடி வரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: அனுமன், அதிர்ஷ்ட எண்: 3,9,2,4
அதிர்ஷ்ட நிறம்: சாம்பல் நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: P,R





**ரிஷபம்:** வார்த்தைகளில் நிதானத்தை கடைப்பிடிக்கும் வாரம். ஆக்கம் அதிகரிக்கும். மற்றவரால் பாராட்டப்படுவீர்கள். உடல்நலம் சீராகும். புதிய பதவிகள் கிட்டும். பணியில் உயர்வு உண்டு. இடமாற்றம் உண்டு. பொருள் வரவு திருப்தி தரும். வாய்ப்புக்கள் கூடி வரும். குடும்ப அன்யோன்யம் கூடும். பொறுப்புக்கள் கூடும். சிறப்புக்கள் சேரும். எதிர்ப்புக்கள் அடங்கும். பிரார்த்தனை நிறைவேறும். பித்தளைத் தொழில் லாபம் தரும். சுபிட்ஷங்கள் பெருகும். கடன் கொடுப்பவராக இருப்பீர்கள். உங்களால் நிறைய ஆத்மாக்கள் வாழ வேண்டி வரும். சமுதாயப் பிரச்சனைகள் அகலும். வீட்டில் சந்தோஷம் நிலவும். மன அமைதி உண்டாகும். மனதில் குழப்பங்கள் தீரும். சுமூக சீர்நிலை உண்டாகும். மனதில் உள்ள பாசம் வெளிப்படும். பெற்றோர்களால் பாராட்டுப் பெறுவீர்கள். புகழ் கூடும். புண்ணிய ஸ்தல பயணம் ஏற்படும். மன உற்சாகம் கூடும். உடல் உபாதை தோன்றும். தொழில் வழி தொல்லை குறையும். ஆயுள் விருத்தி அதிகரிக்கும். விருந்தினர் வருகை உண்டு. குழந்தைகளால் அல்லல் ஏற்படும். குடும்பச் செலவு அதிகரிக்கும். மனை வாங்கும் யோகம் உண்டு. நோயிலிருந்து பூரண குணமடைவீர்கள். வாய்ப்பேச்சில் நிதானம் தேவை. சேய் நலம் கூடும். குடும்ப சேமிப்பு உயரும். வீண் வம்பு விலகும். குடும்பச் சண்டைகள் முற்றிலும் அகன்றுவிடும். செயல்களில் கவனம் தேவை. வியாபாரத்தில் நன்மை உண்டு. மருத்துவச் செலவு குறையும்.

வழிபட வேண்டிய தெய்வம்: கருட பகவான், அதிர்ஷ்ட எண்: 5,3,2,1
அதிர்ஷ்ட நிறம்: காவிநிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: N,L




**மிதுனம்:** உறவுகளால் பெருமை சேரும். தனவரவு பெருகும். உணவு பிரியம் ஏற்படும். பாராட்டுப் பெருகும். உடல் நலம் திருப்தி தரும். பணவரவு தாமதமாகும். உடல்சோர்வு ஏற்படும். புதிய தொழில் அமையும். இனிய தகவல் வந்து சேரும். பழைய நண்பர் சந்திப்புக் கிட்டும். இனிய காதல் உருவாகும். எளிமையை விரும்புவீர்கள். மாலை நேரப் பிரார்த்தனை மன அமைதி தரும். தன்னம்பிக்கை துளிர்விடும். எதிர்பார்ப்புக்கள் குறையும். இன்னல்கள் அகலும். குடும்ப அன்யோன்யம் அதிகமாகும். பிள்ளைகள் கல்வி மேம்படும். தோல்விகள் விலகும். கட்டிடத் தொழில் லாபம் தரும். பெரிய மனிதர்களை சந்திப்பீர்கள். சிறிய இடையூறு ஏற்படும். வாகன அபிவிருத்தி உண்டாகும். எண்ணிய காரியம் கைகூடும். மாணவர்களுக்கு படிப்பில் அக்கறை தேவை. அரசு வழி ஆதாயம் உண்டு. புதிய வாய்ப்பு தேடி வரும். உணவு விடுதி லாபம் தரும். பிரயாணம் ஏற்படும். பிள்ளைகளால் மதிப்பு உயரும். குழப்பங்கள் நீங்கும். ஆபரணச் சேர்க்கை உண்டு. சுபகாரியம் கைகூடும். விரும்பிய பொருள் சேரும். வியாபார மேன்மை உண்டு. வாழ்வில் வளம் உண்டு. ஆரோக்கியம் அதிகரிக்கும். முடிவுகள் சாதகமாகும். முயற்சிகள் பலன் தரும். கால்நடையால் பலன் உண்டு. வெற்றிகள் குவியும். வாகனச் செலவு ஏற்படும். புதிய நட்பு உருவாகும். எதிரிகளால் ஏற்றம் உண்டு. எதிர்பார்த்த தொழில் லாபம் தரும். நன்மைகள் அதிகரிக்கும். குடும்ப கௌரவம் உயரும். கமிஷன் தொழில் லாபம் தரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: சிவபெருமான், அதிர்ஷ்ட எண்: 6,4,3,1
அதிர்ஷ்ட நிறம்: சிகப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: B,J




**கடகம்:** பிரியமானவர்களின் சந்திப்புக் கிட்டும் வாரம். பிள்ளைகளால் பெருமை சேரும். கணவன், மனைவி அன்யோன்யம் கூடும். நிம்மதி பெருகும். குழந்தைகளால் குதூகலம் கூடும். வழக்கு வெற்றித் தரும். பயணம் ஆதாயம் தரும். தொழில் வழி தொல்லைக் குறையும். சுய பலம் கூடும். தன்னம்பிக்கை அதிகமாகும். சிறிய இடையூறு ஏற்படும். மாணவர் திறமை பளிச்சிடும். தந்தையால் நலம் பெருகும். அறிவாற்றல் பளிச்சிடும். மற்றவரால் பாராட்டுப் பெறுவீர்கள். உடல் நலம் சீராகும். நற்காரியங்களால் கீர்த்தி பெருகும். புதிய பதவிகள் கிட்டும். பணியில் உயர்வு உண்டு. இடமாற்றத்தால் நன்மை தரும். பொருள் வரவு திருப்தி தரும். வாய்ப்புக்கள் கூடி வரும். பழையக்கடன் வசூலாகும். பெரிய மனிதர்களை சந்திப்பீர்கள். வாகன அபிவிருத்தி உண்டு. வழக்குகளால் தொல்லை உண்டு. எந்திர தொழிலால் லாபம் உண்டு. நல்லோர் நட்பு கிட்டும். வெளியூர் பயணம் ஏற்படும். மறைமுக எதிர்ப்பு அதிகமாகும். பக்குவமான பேச்சு அவசியம். மன உற்சாகம் கூடும். பணவரவு சேரும். உடல் உபாதை தோன்றும். சுபச்செய்தி வரும். வியாபாரம் விரயம் கூடும். உத்தியோக கவனம் தேவை. கடன் தொல்லை குறையும். உடன் பிறந்தவரால் ஆதாயம் உண்டு. கூட்டுத்தொழில் மோசடி ஏற்படும். அன்னதானம் செய்வதால் அதிர்ஷ்டம் கூடும். புகழ்ச்சி அதிகரிக்கும். வீண் வம்பு விலகும். நோய், நொடிகள் அகலும். சேமிப்பு உயரும். பேச்சில் நிதானம் நல்லது. தங்க நகைகள் சேரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: கந்தப்பெருமான், அதிர்ஷ்ட எண்: 6,9,5,1




ஒரு மனிதனை யார் கைவிட்டாலும் ஆன்மீகம் கைவிடாது!
என்ற உறுதியோடு உங்கள் 'ராஜயோகம்'
"ஜோதிட மகரிஷி"
Dr. K. RAM.Ph.D (USA)
தொடர்புக்கு: 0091-9840160068
9940431377


அதிர்ஷ்ட நிறம்: குங்கும கலர், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: R,Q




**சிம்மம்:** பிரபல்ய வாய்ப்பு அமையும் வாரம். கணவன், மனைவி கருத்து வேறுபாடுகள் அகலும். தொல்லைகள் ஒழியும். சுயநலம் கூடும். உங்களின் தனித்தன்மை வெளிப்படும். முயற்சிகள் பலன் தரும். தெய்வீக ஈடுபாடு அதிகரிக்கும். ஸ்திரச் சொத்து சேரும். காதல் கைகூடும். நிர்வாகத்தில் நிதானம் தேவை. வியாபாரத்தில் விருத்தி ஏற்படும். அரசு வகையில் ஆதாயம் உண்டு. உறவினர்களால் ஆதாயம் உண்டு. குடும்ப ஒற்றுமை அதிகரிக்கும். முயற்சிகள் வெற்றி தரும். தொல்லைகள் அகலும். நிதி நிலைமை சீராகும். நல்லோர்களின் நட்பு கிட்டும். போட்டிகள் குறையும். விடாமுயற்சி அவசியம். புதிய முதலீடுகள் தவிர்க்கவும். சுபச்செலவு கூடும். பொறுப்புகள் அகலும். வேலைப்பளு அதிகரிக்கும். ரியல் எஸ்டேட் தொழில் லாபம் தரும். கமிஷன் தொழில் கவனம் தேவை. கடன் சுமை குறையும். பூர்வீகச் சொத்து வந்து சேரும். கூட்டுப்பிரார்த்தனை மாற்றம் தரும். வழிபாடு மாற்றம் தரும். உடல்சோர்வு ஏற்படும். அலைச்சல் அதிகமாகும். பணப்பிரச்சனை தீரும். வியாபாரம் சிறக்கும். மேலதிகாரியின் பாராட்டுக் கிட்டும். இடமாற்றம் நன்மை தரும். நிதிப் பற்றாக்குறை நீங்கும். புதிய எண்ணம் நிறைவேறும். வழக்குகள் சாதகமாகும். சிறப்புக்கள் சேரும். வெறுப்புக்கள் அகலும். திடீர் பயணம் ஏற்படும். எதிர்ப்புக்கள் விலகும். அற்புத வாய்ப்புகள் கிட்டும். ஆலோசனை பலன் தரும். அணிகலன் சேரும். சுபகாரியம் கைகூடும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீ அண்ணாமலையார், அதிர்ஷ்ட எண்: 7,9,5,1
அதிர்ஷ்ட நிறம்: வெண்பட்டு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: P,S




**கன்னி:** வீண் விரயங்கள் குறையும் வாரம். காரிய வெற்றி காண்பீர்கள். கணவன், மனைவி ஒற்றுமை கூடும். ஆபரணச் சேர்க்கை உண்டு. பயணம் அனுகூலம் தரும். பணவரவு உண்டு. பங்குச்சந்தை லாபம் தரும். ஆரோக்கியத்தில் கவனம் தேவை. விவாக முயற்சி வெற்றியைத் தரும். உடல் உபாதை நீங்கும். உறவினரால் பணவிரயம் உண்டு. பாதிப்புக்கள் அகலும். ஆடம்பர எண்ணம் அதிகரிக்கும். முயற்சிகள் பலன் தரும். மங்களச் செய்தி வரும். கமி'ன் தொழில் லாபம் தரும். மருத்துவச் செலவு உண்டு. பொன், பொருள் சேர்க்கையுண்டு. பொருளாதாரம் உயரும். வேற்று மனிதரால் லாபம் உண்டு. வேலை வாய்ப்புக் கூடும். நிம்மதியாக இருப்பீர்கள். திருத்தமான முடிவு ஏற்படும். தடுமாற்றம் ஏற்படும். வருத்தங்கள் மறையும். நண்பர்களால் நன்மை உண்டு. காதல் கசக்கும். நல்லோர்களின் நட்பு கிடைக்கும். மனக்கசப்பு நீங்கும். புதிய தொழில் வாய்ப்புக்கள் பெருகும். இடமாற்றம் ஏற்படும். மனைவியின் அன்பு அதிகரிக்கும். பழையக்கடன் அடையும். திறமைகள் வெளிப்படும். ஏற்றுமதி தொழிலில் லாபம் கிடைக்கும். ஆதாயம் பெருகும். பெற்றோர் உடல்நிலையில் கவனம் தேவை. திருமண முயற்சி பலன் தரும். உறவினர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும். அரசு வழியில் கவனம் தேவை. பொது விஷயங்களில் நாட்டம் ஏற்படும். விளையாட்டுத் துறையில் வெகுமதி கிடைக்கும்.

வழிபட வேண்டிய தெய்வம்: மாரியம்மன், அதிர்ஷ்ட எண்: 9,7,6,5
அதிர்ஷ்ட நிறம்: கிளிப்பச்சை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: I,M




**துலாம்:** பணவரவு அதிகரிக்கும் வாரம். முக்கிய எண்ணங்கள் நிறைவேறும். கல்வியில் அக்கறை தேவை. இடமாற்றம் உண்டு. மனைவி உறவு சீராகும். கருத்து வேறுபாடுகள் அகலும். பழைய நண்பர்களை சந்திப்பீர்கள். கலைஞர்களுக்கு வாய்ப்பு வரும். கணவன், மனைவி வாக்குவாதம் ஏற்படும். பழைய பாக்கி வசூலாகும். திடீர் பயணம் உற்சாகம் தரும். பங்குச்சந்தையில் லாபம் கிடைக்கும். நாவடக்கம் தேவை. வாக்குவாதத்தை தவிர்ப்பது நல்லது. பயணங்களால் பணம் கரையும். நினைத்த காரியம் நிறைவேறும். காதலர்களுக்கு மனக்கசப்பு ஏற்படும். நீண்ட நாள் பிரச்சனை முடிவுக்கு வரும். அரசியல் ஆதாயம் தரும். உறவினர் வழியில் செலவுகள் உண்டு. வியாபாரத்தில் லாபம் அதிகரிக்கும். பிரிந்த குடும்பம் ஒன்று சேரும். கோரிக்கைகள் நிறைவேறும். தொழில் அபிவிருத்தி உண்டாகும். அலைச்சல் அதிகரிக்கும். பொருளாதார மேன்மை உண்டு. குடும்பத்தில் அமைதி பெருகும். சந்தர்ப்ப சாதகம் உண்டு. ஆரோக்கியம் அதிகரிக்கும். உத்தியோக உயர்வு உண்டு. வாழ்வில் வளம் உண்டு. சந்தோஷம் பெருகும். நிர்வாகச் செலவுகள் கூடும். உடல் உஷ்ணம் வந்து போகும். அச்சுத்தொழில் ஆதாயம் தரும். உடன்பிறப்புகளால் நன்மை உண்டு. தேக ஆரோக்கியம் மிளிரும். பிள்ளைகளால் சந்தோஷம் கூடும். ஆபரணச் சேர்க்கையுண்டு. விரும்பிய பொருள் சேரும். வாழ்வில் வளம் சேரும். திருப்புமுனைகளை சந்திப்பீர்கள்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஏழுமலை, அதிர்ஷ்ட எண்: 1,5,6,9
அதிர்ஷ்ட நிறம்: நீலம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Y,D




**விருச்சிகம்:** தன்னடகத்தோடு செயல்படும் வாரம். புதிய வாய்ப்பு வரும். கல்விச்செலவு உண்டு. உறவினர் வருகை உண்டு. உலோகத் தொழில் உயர்வு தரும். இடமாற்றம் ஏற்படும். குடும்பப் பாசம் கூடும். முயற்சிகள் பலன் தரும். முடிவுகள் சாதகமாகும். உறவுகளால் நன்மை உண்டு. நண்பரால் செலவு உண்டு. அரசியலில் புகழ் கூடும். அரசு வழி ஆதாயம் உண்டு. உணவு விடுதி லாபம் தரும். பிரயாணம் ஏற்படும். உன்னதமான காலம். பிள்ளைகளால் மதிப்பு உயரும். பொருளாதாரம் சிறப்பு தரும். பொறுப்புக்கள் கூடும். புதிய நட்பு உருவாகும். மனைவி உடல் நலம் பாதிக்கும். உறவினரால் பாதகம் உண்டு. திடீர் கடன் உருவாகும். காரிய தாமதம் ஏற்படும். உத்தியோக அலைச்சல் உண்டு. பழைய நட்பு பலன் தரும். புதிய வாய்ப்புக்களை எதிர்பார்க்கலாம். தன வரவில் தடங்கல் உண்டு. லஷ்மி கடாட்ஷம் பெருகும். இன்னல்கள் அகலும். குடும்ப வளர்ச்சி அடையும். பிள்ளைகள் கல்வி மேம்படும். கால்நடைகளால் பலன் உண்டு. காதலில் மோதல் உண்டு. ஆதலால் கவனம் தேவை. உணவு பிரியம் அதிகரிக்கும். பாராட்டுப் பெருகும். புதிய தொழில் அமையும். உத்தியோகத்தில் உயர்வு ஏற்படும். காரியம் இழுபறியாகும். பழிச்சொல் தேடி வரும். முயற்சி பலன் தரும். நண்பர்கள் கவனம் தேவை. ஜவுளித்தொழில் உயர்வு தரும். வீண் பழி அகலும். சஞ்சலம் மறையும். மனைவியின் அன்பு அதிகரிக்கும். மற்றவர் தொல்லை குறையும். உடல் உஷ்ணம் வந்து போகும். பொருளாதாரம் உயர்வு பெறும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீ தேவி, அதிர்ஷ்ட எண்: 1,4,5,7
அதிர்ஷ்ட நிறம்: மஞ்சள், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: C,P

(தொடர்ச்சி 26 பக்கம்)

# ஆறுமுகநாவலர்

கந்தப் பிள்ளை சிவகாமி கனிமகனாய்
கந்தன் குடிகொண்ட நல்லூரில்
வந்துதித்தார் வரம்பல பெற்ற புதல்வனாய்
வரலாறு படைத்த ஆறுமுகம்
ஆயிரத்து எண்ணூற்று இருபத்திரண்டாம் ஆண்டில்
அறுத் மாதம் பதினெட்டில்
பாயிரம் படைத்திட பாரினில் தோன்றினார்
பாலகன் பார்வதி மைந்தன்.

மத்திய கல்லூரியில் மாணவனாக இணைந்து
மிகத்திறமை ஆங்கிலத்தில் காட்டினார்
பத்தொன் பதாவது பராயத்தில்
பேர்சிவல் பாதிரியாருடன் இணைந்தே!
விலிய நூலைத் தமிழில் மொழிமாற்றி
வித்துவான் என்பதைக் காட்டினார்
அவருடன் அதிதியாகச் சென்னை சென்றே
அழகாய் அச்சிட்டும் வந்தாரே!

அச்சுயந்திரம் ஒன்றை அவசரமாய் வாங்கியே
அச்சுக்கூடம் ஒன்றை அவசரமாய் நிறுவினார்.
வச்சிர தாண்டத்தை வசனநடையில் அச்சேற்றி
வரிசையாய்ப் பலநூல்களைப் பதிப்பித்தாரே!
சிவாலய தரிசனவிதி ஆத்திசூடி கொன்றைவேந்தன்
திருமுரு காற்றுப்படை யேசுமதபரிகாரம்
சைவசமய சாரம் திருவாசகம் வெளியிட்டே
சிறந்த சேவையை ஆற்றினார்

இவரதுபணி இலங்கையிலும் தமழ்நாட்டிலும் பரவிட
இறவாத பலநூல்களை அச்சேற்றினார்
அவர்செய்த அருமையான பிரசங்கத்தை மெச்சியே
அழகான பல்லக்கில் ஏற்றினாரே!
பக்கவாத் தியங்களுடன் பட்டணப் பிரவேசம்
பரிவட்டம் பூமாலையும் அணிவித்து
மக்கள் தம்பிரான்கள் ஓதுவார்கள் வாழ்த்திட
மரியாதை செய்து வழியனுப்பினர்

திருப்பெ ருந்துறை தலத்தை தரிசித்தே!
சிதம்பரம் சென்று சேர்ந்தார்
அரும்பெரும் சேவையை தமிழ்நாட்டில் ஆற்றியே!
அகமகிழ்வோடு தாயகம் திரும்பினாரே!.
தமது சொந்தச் செலவில் கோப்பாயில்
தரமான பாடசாலையை நிறுவினார்
நமது மாணவர்களின் நன்மை கருதியே!
நல்லதொரு ஆங்கிலப் பாடசாலையை

வண்ணார் பண்ணையில் வளமாக நிறுவியே!
வருமானம் வராதபோதும் நடத்தினார்
உண்மை அனுபவம் ஒன்றாக திரட்டியே!
ஊரறிய நூலொன்றை வெளியிட்டாரே!
(யாழ்ப்பாணச் சமயநிலை)
ஆயிரத்து எண்ணூற்று எழுபத்தைந் தாண்டளவில்
அருமையான நூல்களை எழுதினார்
ஆயிரம் பெறுமதி ஆங்கிலதமிழ் அகராதியை
ஐயம்தெளிவுற அழகாக ஆக்கினார்

ஆயிரத்து எண்ணூற்று எழுபத் தொன்பதில்
அருட்பாக்களை ஓதும்படி கூறியே!
தூய வாழ்வைத் தரணியில் துறந்தே!
தூயவன் திருவடி சேர்ந்தாரே!
ஆயுள் முழுவதும் அரியசேவை செய்தவர்க்கு
அஞ்சல்தலை வெளியிட்டது இலங்கையரசு
நேய வாழ்வை நெறியுடன் வாழ்ந்தார்க்கு
நல்லூரிலே மணிமண்டபம் அமைத்தனர்

1. பாயிரம் – – – – சரித்திரம்
2.வித்தியாரம் – – – – ஏடு தொடக்குதல்
3.புந்தி – – – – அறிவு
4.அதிதி – – – – விருந்தினர்
5.பட்டணப் பிரவேசம் – – – – ஊர்வலம்
6.பரிவட்டம் – – – – தலைப்பாகை
7.தூயவன் – – – – திருமால்

**ஆக்கம் ... பாவலர் மார்க்கம் சந்திரன்**
*(416) 844-7453*


Drieberg College Chavakachcheri
Alumni Association – Canada
வாழ்வின் ஒளி

1875 - 2025
Celebrating 150 Years
of Excellence in Education

We are delighted to announce that Drieberg College will be celebrating its 150th anniversary, a significant milestone in our institution's history. We cordially invite you to join us, to commemorate this momentous occasion.

Venue: JC's Banquet Hall, 1686 Ellesmere Rd,
Toronto, ON M1H 2V5
Date: Saturday, June 14, 2025 Time: 6:00 PM

**Ticket: $50.00 per person**

**Note:** Parking underground Level P1 and Reception in Level 'G'

**Contacts:** Mohan Devabalan - 416-274-2169
Mathialagan Rajagopal - 416-277-1067
Vasuki Devadas - 416-266-1234
Regi Thevaranjan - 647-740-2965
Gunam Hunt - 905-472-0379



**இணுவில் திருவூர் ஒன்றியம் – கனடா**
**25ஆவது ஆண்டு வெள்ளிவிழா**

**காலம்:** 07-06-2025 (சனிக்கிழமை)
**இடம்:** **The metropolitan centre**
**3840 Finch Ave East**
**Scarborough**
**நேரம்:** மாலை 5:00

கலைநிகழ்வுகள், நடனம்,
நகைச்சுவைநாடகம், தாளவாத்தியக்கச்சேரி
மற்றும் இசைக்குழுவினரின பாடல்கள் இடம்பெறும்.

சிறப்புப்பேச்சாளர்:
செஞ்சொற்செல்வர் திரு. ஆறு. திருமுருகன்

**அனுமதிச்சீட்டு விபரங்களுக்கு:**
(647) 200-2177 (416) 389-7399
(416) 732-5898

விழாவில் சேரும் நிதியில் ஒரு பகுதி
ஸ்காபுரோவில் கட்டப்படும் தமிழ் சமூக மையத்திற்கும்
சிவபூமி அறக்கட்டளைக்கும் வழங்கப்படவிருக்கிறது.

## இவ்வார ராசிபலன்

(24 பக்கத் தொடர்ச்சி)




**தனுசு:** அதிர்ஷ்ட வாய்ப்புக்கள் உருவாகும் வாரம். கையிருப்புகள் அதிகமாகும். கல்வி மேன்மை தரும். புதிய முயற்சி பலன் தரும். இனிய எண்ணம் உதயமாகும். பழையக் கடன் ஒழியும். வாழ்க்கை வசதி பெருகும். அந்தஸ்து அதிகமாகும். நினைத்தது நிறைவேறும். அரசாங்க அனுகூலம் உண்டு. நிர்வாகத் திறமை அதிகரிக்கும். தன்னம்பிக்கை கூடும். சந்தோஷம் கூடும். ஆண்களுக்கு ஆதாயம் உண்டு. கலைத்தொழில் திருப்பம் தரும். கல்வியில் மந்த நிலை ஏற்படும். பணியாட்களால் தொல்லை உண்டு. வாகனச்செலவு உண்டு. வருமானத் தடை உண்டு. வாய்ச்சொல் பலன் தரும். புதிய வாய்ப்பு தேடி வரும். பழைய நண்பர் சந்திப்பு கிட்டும். இனிய காதல் உருவாகும். எளிமையை விரும்புவீர்கள். எள் தானம் ஏற்றம் தரும். மற்றவர்கள் ஆலோசனையை தவிர்க்கவும். நினைத்த தொழில் அமையும். நினைத்தபடி திருமணம் நடக்கும். ஏற்றமான தருணம் அமையும். இனிப்பானச் செய்திகள் வரும். தொழிலில் முதலீடு உண்டாகும். போட்டிகள் நீடிக்கும். புத்திரர் வழியில் கவலை ஏற்படும். தேவைகள் அதிகரிக்கும். எதிரிகளால் ஏற்றம் உண்டு. விளையாட்டுச் சிந்தனைகள் மேலோங்கும். புதிய பொருள் சேரும். பழைய நட்பினால் பலன் கிடைக்கும். உத்தியோக அலைச்சல் உண்டு. காரிய தாமதம் உண்டு. உறவினரால் பாதகம் உண்டு. தொழிலில் ஒப்பந்தங்கள் குவியும். அரசியல்வாதிகளுக்கு அற்புதமான காலம். வரவுகள் பெருகும். அந்நிய தேசப் பயணம் உண்டு. காதலர் ஒற்றுமை மேலோங்கும்.

வழிபட வேண்டிய தெய்வம்: சுக்ர பகவான், அதிர்ஷ்ட எண்: 3,9,4,1

அதிர்ஷ்ட நிறம்: காவிநிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: H,L




**மகரம்:** வாழ்க்கையில் உதாரணமாக திகழும் வாரம். விரக்திகள் மறையும். வீடு, மனை யோகம் உண்டு. சிக்கனம் தேவை. கல்வியில் ஆர்வம் கூடும். கடன் வசூலாகும். சாதனையை படைப்பீர்கள். வியாபாரத்தில் கவனம் தேவை. மற்றவர்களால் அனுகூலம் உண்டு. உடல் ஆரோக்கியம் கூடும். வியாபாரம் லாபம் தரும். உறவினர்களால் உதவி கிட்டும். மாணவர்கள் உற்சாகம் கூடும். மனைவியின் அன்பு அதிகரிக்கும். மங்களச்செய்தி வரும். வார்த்தைகளில் நிதானம் தேவை. சாதகமான வாய்ப்பு உருவாகும். வெகுமதி பெருகும். பேச்சில் நிதானம் தேவை. நியாயம் ஜெயிக்கப் போராடுவீர்கள். இடமாற்றத்தால் நன்மை உண்டு. எதிர்பார்த்த பதவி உயர்வு கிட்டும். மாணவர்களுக்கு மகிழ்ச்சி கூடும். புதிய கடன் வாங்க நேரிடும். மேலதிகாரியின் பாராட்டுக் கிட்டும். வெளியூர் பயணம் உண்டு. தந்தை உடல் நலனில் கவனம் தேவை. ஆனந்தம் குடிக்கொள்ளும். புத்தி சாதுர்யம் பெருகும். நட்பு வட்டம் விரிவடையும். மனதில் மகிழ்ச்சி கூடும். இல்லத்தில் அமைதி பெருகும். சுபகாரியம் நடந்தேறும். கலைஞர்களுக்கு ஒப்பந்தங்கள் குவியும். திட்டமிட்ட காரியங்கள் வெற்றி முகமாகும். மன ஆரோக்கியம் சிறக்கும். பணத்தேவைகள் பூர்த்தியாகும். கோதுமை தானம் தாய் நலம் சேர்க்கும். தேகப்பலம் கூடும். சுமூகமான சூழ்நிலை பெருகும். மன மகிழ்ச்சி அதிகரிக்கும். நீண்ட நாளைய நோய் விலகும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீ கபாலீஸ்வரர், அதிர்ஷ்ட எண்: 5,9,4,3

அதிர்ஷ்ட நிறம்: ஊதா, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: O,R




**கும்பம்:** உண்மையான நன்மைகளை சந்திக்கும் வாரம். பிரியமானவர்களை சந்திப்பீர்கள். வாகனங்களில் முதலீடு உண்டாகும். குடும்பத்தில் அமைதி நிலவும். சொந்த பந்தங்களால் உதவி உண்டு. சேமிப்பு வளரும். மனநிறைவு உண்டு. கலைஞர்களுக்கு புகழ் கூடும். மாணவர்களுக்கு சாதகமான காலம். வியாபாரம் வெற்றி தரும். முயற்சிகளில் தாமதம் ஏற்படும். உத்தியோகத்தில் உயர்வு உண்டு. பறவைகளுக்கு உணவளித்து பலன் பெறலாம். பணப்பற்றாக்குறை நீங்கும். குடும்பத்தினர்களின் அனுசரிப்பு கிட்டும். பெரியோர்களின் வாழ்த்து கிடைக்கும். உடன்பிறப்புக்களின் உதவி கிட்டும். மதிப்பும், மரியாதையும் உயரும். பணவரவு திருப்தி தரும். பொது வாழ்வில் புகழ் கூடும். உடல்நலம் சிறக்கும். புதிய கடன் வாங்க நேரிடும். கணவன், மனைவி அன்யோன்யம் அதிகரிக்கும். மனக்குழப்பங்கள் தீரும். மங்கையருக்கு திருமணம் கை கூடும். பொருளாதார நிலை உயரும். தொட்ட காரியம் ஜெயமாகும். செயல்பாட்டில் தீவிரம் கூடும். உரிய நேரத்தில் உதவிகள் கிடைக்கும். புதிய முதலீடுகளில் கவனம் தேவை. ஞாபகத்திறன் அதிகரிக்கும். சுபகாரியம் கை கூடும். வினோதமான எண்ணங்கள் பூர்த்தியாகும். உழைப்பில் கவனம் தேவை. பங்குச்சந்தை லாபம் தரும். வார்த்தைகளில் நிதானம் தேவை. வழக்குகள் சாதகமாகும். வாகன மாற்றம் உண்டு. பூர்வீகச் சொத்துக்கள் கிடைக்கும். புதிய நட்பு ஏற்படும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீகாமதேனு, அதிர்ஷ்ட எண்: 8,3,5,1

அதிர்ஷ்ட நிறம்: செந்நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: G,U




**மீனம்:** பெண்களால் ஆதாயம் கிடைக்கும் வாரம். வாகன மாற்றம் உண்டு. பூர்வீகச் சொத்துக்கள் கிடைக்கும். புதிய நட்பு ஏற்படும். உறவினர் வருகை உண்டு. மறைமுக எதிர்ப்புக்கள் மாறும். வஸ்திர தானம் வளம் சேர்க்கும். இனம் புரியா சந்தோஷம் குடிக்கொள்ளும். ஆலோசனைகளால் ஆதாயம் உண்டு. கொடுத்த வாக்கை காப்பாற்றுவீர்கள். ஊக்கம் அதிகரிக்கும். விருப்பமான வாய்ப்பு கூடி வரும். குதூகலம் சேரும். பழையக்கடன் தீரும். பங்குத்தொழில் கவனம் தேவை. பொன், பொருள் சேரும். ஆடம்பர எண்ணம் அதிகரிக்கும். மங்களச் செய்தி வரும். காதல் எண்ணம் ஏற்படும். திருமண வாய்ப்புக்கள் கூடி வரும். பிள்ளைகளால் பெருமை சேரும். மகிழ்ச்சியான செய்திகள் வரும். வளமான வாழ்வு அமையும். ஆடம்பர எண்ணம் உருவாகும். உலோகத்தொழில் லாபம் தரும். வாகனச்செலவு ஏற்படும். வழக்குகள் சாதகமாகும். தாய்நலனில் கவனம் தேவை. வியாபாரம் சிறக்கும். பிரார்த்தனையில் ஆர்வம் அதிகரிக்கும். கர்ம வினைகள் அகலும். பொன்னான நேரங்களாக அமையும். கட்டிடத்தொழில் லாபம் தரும். உறவினரால் முன்னேற்றம் உண்டு. நன்மைகள் உண்டாகும். பிறர்க்கு உதவி செய்வதால் நன்மை உண்டாகும். வருமானம் கைகூடி வரும். பாதகம் விலகும். புதிய வாய்ப்பு வரும். பாவங்கள் போக்கும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஆதிசேஷன், அதிர்ஷ்ட எண்: 4,8,9,1

அதிர்ஷ்ட நிறம்: இளம்பச்சை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: K,U

# யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இளைஞனின் மனிதநேயம் மிக்க செயலால் குவியும் பாராட்டுகள்!

இலங்கை செய்திகள் Sri Lanka News

பு. கஜிந்தன்



அண்மையில் விபத்தில் அகால மரணமடைந்த யாழ். இந்திய துணை தூதரகத்தில் பணியாற்றிய பிரபாவின் மனைவியின் தாலி சிறு தொகைப் பணம் மற்றும் கையடக்க தொலைபேசி ஆகியவற்றை விபத்து நடந்த இடத்தில் கண்டெடுத்த மிரோசிகன் என்ற இளைஞன் இந்திய தூதரகத்தில் குறித்த பொருட்களை ஒப்படைத்தார்.

எவ்வித எதிர்பார்பும் இன்றி, விபத்துள்ளானவர்கள் யாழ். இந்திய தூதரகத்தில் கடமையாற்றுபவர் என்பதை ஊடகங்கள் வாயிலாக அறிந்து தாம் கண்டெடுத்த பொருட்களை உரிய இடத்தில் ஒப்படைத்துள்ளார்.

இவ்வாறு படத்தில் காணப்படும் மனிதநேயம் மிக்க செயலை புரிந்த இளைஞரை பலரும் பாராட்டி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# 2ம் திகதி திங்கட்கிழமை அதிகாலை பொன்னாலைக் கடலுக்குள் பாய்ந்த ஹைஏஸ் ரக வாகனம்!



2ம் திகதி திங்கட்கிழமையன்று அதிகாலை பொன்னாலை பாலத்தடியில் இடம்பெற்ற விபத்தில் ஹைஏஸ் ரக வாகனம் ஒன்று சேதமடைந்துள்ளது.

இது குறித்து மேலும் தெரியவருகையில், காரைநகரில் இருந்து மிருசுவில் நோக்கி பயணித்த குறித்த வாகனம் வேகக்கட்டுப்பட்டை இழந்து பாலத்தில் இருந்து கடலுக்குள் பாய்ந்தது. இந்நிலையில் வாகனம் பாரிய அளவில் சேதத்துக்கு உள்ளாகியது.

வாகனத்தில் சாரதி மாத்திரம் இருந்த போதிலும் உயிர் சேதம் எதுவும் ஏற்படவில்லை.

# இரத்மலானை விமான நிலையத்தில் இருந்து யாழ். பலாலி விமான நிலையம் வரை சேவையில் ஈடுபடும் விமானம்!



டேவிட் பிரிஸ் ஏவியேஷன் (DP Aviation) கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் வரையான மக்கள் போக்குவரத்துக்கான பயணங்களை ஆரம்பிக்கின்றது.

அரசாங்கத்தின் எதிர்கால திட்டங்களுக்கு அமைவாக உள்ளூர் விமான சேவையினை விருத்தி செய்யும் நோக்கில் டேவிட் பிரிஸ் ஏவியே'ன் நிறுவனமானது இலங்கை சிவில் விமான போக்குவரத்து அதிகார சபையின் மேற்பார்வையின் கீழ் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு விமான சேவையினை ஆரம்பிப்பதற்கு திட்டமிட்டுள்ளது.

இதற்காக இலங்கை சிவில் விமான போக்குவரத்து அதிகார சபையின் பரிசோதிப்பவர்களின் மேற்பார்வையின் கீழ் விசேட கண்காணிப்பு விமான பயணத்தினை இன்றையதினம் இரத்மலானை விமான நிலையத்திலிருந்து யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையம் வரை மேற்கொண்டுள்ளது.

குறித்த முதலாவது விமானமானது 2ம் திகதி திங்கட்கிழமை ன்று பி.ப 1.05 மணியளவில் யாழ்ப்பாணம் - பலாலி சர்வதேச விமான நிலையத்தை சென்றடைந்தது.



# MORTGAGE
## FINANCIAL SOLUTIONS

COMMERCIAL · RESIDENTIAL · VACANT LAND · INDUSTRIAL · CONSTRUCTION



## OUR SERVICE



- Purchase
  - Builder Purchase
  - MLS Purchase
  - Private Purchase
- Equity line of Credit
- Refinance
- Renewal

CALL US

**NESAN**
**416-908-5656**

Office: 416-660-5656
Fax: 647-351-3099
Toll: 1-844-878-2721

www.nesan.ca

**WE DEAL WITH ALL BANKS**

CityCan Financial Corporation
NESAN SUBRAMANIAM
Mortgage Agent level 1 Licence # M15001465
CityCan Financial Corporation, Brokerage #10332

Scotiabank · TD Canada Trust · National Bank · RFA · First National Financial LP · Manulife · Desjardins · MCAP · Home Trust · Equitable Bank · radius financial · RMG mortgages

55 EGLINTON AVE E SUITE 604, TORONTO, ON M4P 1G8












26ம் ஆண்டில்...
26 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN
உதயன்







உதயம் 1522 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday June 6, 2025


# ஸ்காபுறோவில் கனடா ஈழநாடு பத்திரிகையின் ஆண்டு விழாவில் சேகரிக்கப்பட்ட நிதி மக்கள் நலன் சார்ந்த திட்டங்களுக்கு பகிர்ந்தளிக்கப்பெற்றது

















இம்மாதம் 1ம் திகதி ஞாயிற்றுக்கிழமை கனடா ஸ்காபுறோவில் நடைபெற்ற ஈழநாடு பத்திரிகையின் 32வது ஆண்டு விழாவில் சேகரிக்கப்பட்ட நிதி கனடா ஈழநாடு பத்திரிகை வாசகர்கள் சார்பில் இலங்கைப் பணப் பெறுமதி 25 லட்சம் ருபா (11,415.55 கனடிய டொலர்கள்) வேர்களைத் தேடுங்கள் என்ற தலைப்பில் சிறப்புரையாற்ற ஈழத்தில் இருந்து வருகை தந்த தமிழினத்தின் செஞ்சொற்செல்வர் - அறப்பணியாளர் திரு சிவபுமி அறக்கட்களையின் தாபகர்

ஆறு.திருமுருகன் அவர்களிடம் கையளிக்கப்பெற்றது ஆறு.திருமுருகன் அவர்களினால் முள்ளிவாய்க்காலில் உருவாக்கப்படவுள்ள “மனநலம் குன்றியோர் - பாதிக்கப்பட்டோர்“ இல்லத்திற்கு வழங்கப்பட்டது. மேலும் அன்றைய விழாவில் சேகரிக்கப்பட்ட நிதியின் ஒரு பகுதியில் கனடா ஈழநாடு பத்திரிகை வாசகர்கள் சார்பில் 10,000.00 டொலர்கள் கனடாவில் உருவாகும் தமிழ்சமூக மையத்திற்கு வழங்கப்பெற்றது. இந்த தொகை மேற்படி அரங்கத்தில் திட்டத்தின் தலைவர் சாந்தா பஞ்சலிங்கம் அவர்களிடம் கையளிக்கப்பட்டது.

மேலும் அன்றைய தினம். ஈழநாடு பத்திரிகையின் 32வது ஆண்டு விழாவில் கனடாவில் வர்த்தகத்துறையில் ஈடுபட்டு வெற்றிகளை ஈட்டியது மாத்திரமன்றி சமூகத்தின் நலனுக்காகவும் பங்களிப்புக்களை தொடர்ச்சியாக வழங்கிவரும் 5 வெற்றியாளர்களுக்கு விருதுகள் வழங்கிக் கௌரவிக்கப்பெற்றது.

அவரம்களில் திரு சங்கர் நல்லதம்பி- தமிழ்ச் சமூகத்தில் நன்கு பரீட்சயமானவர் அத்துடன். ஹோட்டல் உரிமையாளர். அவரது **Vibrant Hospitality Group** என்ற நிறுவனத்தின் மூலம் பலருக்கு வேலை வாய்ப்புக்களை வழங்கிவருகின்றார். அடுத்தவர். அரசியல் மற்றும் சமூகத் துறையில் பங்களிப்புக்களை வழங்கிவரும் ஸ்ரீ என்று அறியப்பெறுகின்றதிரு. ஸ்ரீகந்தராஜன் வல்லிபுரநாதர் அவர்கள்

அடுத்தவர்.வீடு விற்பனைத்துறையில் சாதனை படைத்த திரு ராஜ்.நடராஜா அவர்கள். அடுத்தவர் வர்த்தகத்துறையிலும் சமூக சேவையிலும் நன்கு அறிமு-கமான திரு கிரு‘ணகோபால் செல்லத்துரை அவர்கள்.

இறுதியாக திரு அகிலன் மயில்வாகனம் அவர்களும் கௌரவிக்கப்பெற்றார். இவர் வங்கிச் சேவையிலும் சமூகப் பங்களிப்பிலும் சிறந்து விளங்குபவர்.

இங்கே காணப்படும் படங்கள் அங்கு எடுக்கப்பட்டவையாகும். படங்களில் பத்திரிகையின் ஆசிரியர் திரு பரமேஸ்வரன் மற்றும் ஆறு.திருமுருகன் அவர்கள் ஆகியோர் காணப்படுகின்றனர்.

# கனடா அரசாங்கம் கனடியர்களுக்கான வம்சாவளி குடியுரிமைச் சட்டத்தில் மாற்றங்களை அறிமுகப்படுத்துகிறது



கனடிய குடியுரிமை என்பது கனடியராக இருப்பதில் உள்ள அர்த்தத்தை இதயசுத்தியோடு புரிந்து கொள்வதில் தங்கியுள்ளது, இது ஒரு பன்முகத்தன்மையை, உள்ளடக்கிய மற்றும் ஜனநாயக தேசத்துடன் இணைந்திருப்பதற்கான உணர்வையும் தொடர்பையும் வழங்குகிறது என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். எனவே . கனடாவிற்கு புதிதாக வருபவர்கள் பலருக்கு, குடியுரிமை ஒருங்கிணைப்புக்கு என்பது முக்கியமாகும், மேலும் குடியுரிமை செயல்முறையை முடிந்தவரை


நியாயமானதாகவும் வெளிப்படையானதாகவும் மாற்ற கனடிய அரசாங்கத்தின் சார்பில் உறுதிபூண்டுள்ளோம்.

5ம் திகதி வியாழக்கிழமை கனடிய பாராளுமன்றத்தில் கனடிய, குடிவரவு, அகதிகள் மற்றும் குடியுரிமை விவகாரங்களுக்கான அமைச்சர் மாண்புமிகு லீனா மெட்லேஜ் டயப், முதல் தலைமுறையைத் தாண்டி வம்சாவளி குடியுரிமையை உள்ளடக்கியதாகவும், கனேடிய குடியுரிமையின் மதிப்பைப் பாதுகாக்கும் வகையிலும் நீட்டிக்கும் சட்டத்தை அறிமுகப்படுத்தினார்.

கனேடிய பெற்றோரின் குழந்தை பிறப்பு அல்லது தத்தெடுப்புக்கு முன்னர் குறைந்தபட்சம் 1,095 ஒட்டுமொத்த நாட்கள் (அதாவது, மூன்று ஆண்டுகள்) கனட-ாவில் உடல் ரீதியாக இருப்பதன் மூலம் நிரூபிக்கப்பட்ட கனடாவுடனான கணிசமான தொடர்பின் அடிப்படையில், முதல் தலைமுறைக்கு அப்பால் குடியுரிமையை அணுக அனுமதிக்கும் ஒரு புதிய கட்டமைப்பை எதிர்காலத்தில் நாம் உறுவாக்குவோம்.

குடியுரிமைச் சட்டம் (2025) ஐத் திருத்துவதற்கான ஒரு சட்டமான பில் **C**-3 இல் முன்மொழியப்பட்ட மாற்றங்களால் பாதிக்கப்படக்கூடிய மக்கள், இது அவர்களுக்கும் அவர்களது குடும்பங்களுக்கும் என்ன வகையில் பாதிப்பு என்பது குறித்து சந்தேகங்களை எழுப்புவார்கள். அதை-யும் நாம் பரிசீலிப்போம். மேற்படி மசோதா நாடாளுமன்றத்தின் இரு அவைக-ளிலும் நிறைவேற்றப்பட்டு, அரச ஒப்புதலைப் பெற்றால், இந்த மாற்றங்களை நடைமுறைக்குக் கொண்டுவர நாங்கள் விரைவில் செயற்படுவோமட், மேலும் எங்கள் வலைத்தளத்தில் தகுதியான நபர்கள் பற்றிய கூடுதல் தகவல்களை வழங்குவோம்.”இவ்வாறு அமைச்சர் தெரிவித்துள்ளார்.

# இருபத்தொரு வருடங்களுக்கு முன்னர் சுட்டுக் கொல்லப்பட்ட மூத்த தமிழ் ஊடகவியலாளர் நடேசனின் கொலைக்கு அரசாங்கம் நீதி வழங்குமா?



“கடந்த ராஜபக்ச ஆட்சியில் , ரணில் ஆட்சியில் , மைத்திரி ஆட்சில் கிடைக்காத நீதி, அனுரவின் காலத்திலாவது கிடைக்க வேண்டுமென மக்கள் நினைக்கின்றார்கள்

இருபத்தொரு வருடங்களுக்கு முன்னர் சுட்டுக் கொல்லப்பட்ட மூத்த தமிழ் ஊடகவியலாளருக்கு தற்போதைய ஆட்சியில் நீதி கிடைக்கும் என பொதுமக்கள் நம்புவதாக தமிழ் மக்கள் பிரதிநிதி ஒருவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

““கடந்த ராஜபக்ச ஆட்சிக் காலத்தில் கிடைக்காத நீதி, ரணில் ஆட்சிக் காலத்தில் கிடைக்காத நீதி, மைத்திரி ஆட்சிக் காலத்தில் கிடைக்காத நீதி அனுர அரசாங்கத்தின் காலத்திலாவது கிடைக்க வேண்டுமென மக்கள் நினைக்கின்றார்கள்.


(தொடர்ச்சி 17ம் பக்கம்)



